# அருள்மிகு தெண்டாயுதபாணி கோயில்
# சிங்கப்பூர்
# SRI THENDAYUTHAPANI TEMPLE
## SINGAPORE

Temple Copy



## மஹா கும்பாபிஷேகம்
## MAHA KUMBABISHEGAM
## 29.11.1996



CHETTIARS' TEMPLE 15, TANK ROAD SINGAPORE 238065

Temple Copy

CHETTIARS' TEMPLE 15, TANK ROAD SINGAPORE 238065



வெள்ளி ரதத்தில் உலா வரும் முருகனை வணங்கி விழா மலரைக் காண்போம்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பேராசிரியர் ஜெயக்குமாரின் செய்தி | 4 |
| Message by Prof S Jayakumar | 5 |
| கோயில் நிர்வாகக் குழுத் தலைவரின் செய்தி | 6 |
| சிங்கப்பூர்த் தண்டாயுதபாணி கோயில் சிறப்பு | 9 |
| Arulmigu Thandayuthapani Temple, Singapore | 23 |
| முருகன் பெருமை | 35 |
| Kanthar Avatharam | 43 |
| முருகன் எளியவன் | 47 |
| தைப்பூசம் | 53 |
| ஆறுபடைவீடுகள் | 59 |
| அறுவர் குருபூசை | 69 |
| நகரக் கோயில்கள் | 79 |
| நகரத்தார் தெய்வத் திருப்பணிகள் | 91 |
| சைவ இலக்கியம் | 97 |
| சைவ நன்னெறி | 105 |
| அருட்சத்தி - வள்ளலார் விளக்கம் | 111 |
| 1888-ல் தைப்பூசம் - சிங்கை நேசன் கட்டுரை | 117 |
| தமிழ் அர்ச்சனை | 121 |
| தமிழ் வளர்த்தோம் | 129 |
| Acknowledgements | 131 |
| நன்றி நவில்கிறோம் | 133 |



***Printed in Singapore at Bradford Press***
***bradford@singnet.com.sg***



மூலவர்



உற்சவர்

# PROFESSOR S.JEYAKUMAR'S MESSAGE



Being one of the oldest temples in Singapore, the Thandayuthapani Temple is a popular place of worship for not only the Chettiars but also for many Hindu Singaporeans.

The Temple, mainly built and maintained by the Chettiar community becomes the focal point for religious activities when the annual Thaipusam festival is held. As the festival involves a large number of devotees marching through the main thoroughfare of the city, it is important that we maintain the decorum and spirit that befits the festival. In this regard, the Temple officials, over the years, have established a good working relationship with the Hindu Endowment Board and the authorities to ensure that the festival is conducted in an orderly and dignified manner.

The present Temple, re-built in 1983, has undergone some renovation work which is required to be carried out once in 12 years by Hindu agamas. The Temple has been given a face-lift and other parts of the temple precincts have also been renovated. I wish to congratulate the Temple for embarking on the project. May I also wish the Temple every success on the occasion of this Consecration Ceremony.

Prof S Jayakumar
Minister for Foreign Affairs
and Minister for Law

# வாழ்த்துச் செய்தி



சிங்கப்பூரின் பழமையான கோயில்களுள் ஒன்றான தண்டாயுதபாணி கோயில், செட்டியார்கள் மட்டுமல்லாமல், பல இந்து சிங்கப்பூரர்களும் வழிபடும் புகழ்பெற்ற இடமாகும்.

செட்டியார் சமூகத்தவரால் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டுவரும் இந்தக் கோயில், ஆண்டுதோறும் தைப்பூசத் திருவிழா நடைபெறும்போது சமய நடவடிக்கைகளுக்கு மையமாக விளங்குகிறது. இவ்விழாவின் போது ஏராளமான பக்தர்கள் நகரின் முக்கியச் சாலைகளில் ஊர்வலம் செல்வதால் நாம் இவ்விழாவுக்குப் பொருத்தமான ஒழுங்கையும் ஆன்மிக உணர்வையும் கட்டிக் காப்பது அவசியம். இந்த விழா ஒழுங்காகவும் கண்ணியமான முறையிலும் நடைபெற, இந்தக் கோயில் நிர்வாகத்தினர் இந்து அறக்கட்டளை வாரியத்துடனும் அதன் அதிகாரிகளுடனும் நெடுங்காலமாக நல்ல முறையில் சேர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

1983-ல் மறுநிர்மாணம் செய்யப்பெற்ற தற்போதைய கோயில், 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும் என்னும் இந்து ஆகமங்களின்படி இப்போது புதுப்பிக்கப்பெற்றிருக்கிறது. இத்திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்றி முடித்துள்ள கோயில் நிர்வாகத்தினரைப் பாராட்ட விரும்புகிறேன். இத்திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா இனிதே நடந்தேறவும் நான் வேண்டுகிறேன்.

**பேராசிரியர் எஸ். ஜெயகுமார்**
வெளியுறவு, சட்ட அமைச்சர்

# வாழ்த்துச் செய்தி



சிங்கப்பூர் அருள்மிகு தெண்டாயுதபாணியின் குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா 1996 நவம்பர் 29ந் தேதி தாது ஆண்டு கார்த்திகை மாதம் 14ம் தேதி சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

அவனருளாலே அவன்தாள் வணங்கி இந்த அரும்பணியைத் தொடங்கினேன். இந்தத் திருப்பணியைச் செவ்வனே நிறைவேற்றும்படி பணித்த சிங்கப்பூர் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்க நிர்வாகக் குழுவினருக்கும், உற்ற துணையாக இருந்து ஒல்லும் வகையால் எல்லா உதவிகளையும் புரிந்த நகரத்தார் பெருமக்களுக்கும் பல்வேறு குழுவினர்களுக்கும், தொண்டர்களுக்கும், அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும், விளம்பரம் கொடுத்துதவிய வணிகப் பெருமக்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

**பெரி. அ. மு. அண்ணாமலை செட்டியார்**
ஆலய நிர்வாகக் குழுத் தலைவர்



அருள்மிகு சுந்தரேசுவரர்



அருள்மிகு மீனாட்சி

*With*
*Best Compliments*
*from*



**Batu Pahat Goldsmith Pte Ltd**

No 2 & 4, Buffalo Road, Singapore 219780
Tel : (65) 2931731, 2939548
Fax : (65) 2913296

GST Reg No M2-0024127-4

# சிங்கப்பூர்த் தண்டாயுதபாணி கோயில் சிறப்பு

*டாக்டர் சுப. திண்ணப்பன்*
*சிங்கப்பூர்*

தென்கிழக்காசிய நாடுகளில் சிங்கப்பூர் சின்னஞ்சிறிய தீவு. எனினும் இன்று சிறப்பான பொருளாதார வளமிக்க நாடாகத் திகழ்கிறது. 1819இல்தான் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த ஸர் ஸ்டாம்போர்டு ராபிள்ஸ் சிங்கப்பூருக்கு வந்து ஆங்கிலேயர் ஆட்சியை நிறுவிச் சிங்கப்பூர் வளர்ச்சிக்கு வித்திட்டார். நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு என்னும் நூலை எழுதிய அ.இராமநாதன் செட்டியார் நகரத்தார்கள் பாய்மரக் கப்பலில் 1824ஆம் ஆண்டு பினாங்குக்கும் சிங்கப்பூருக்கும் வர்த்தகம் செய்ய வந்ததாகக் குறிப்பிடுகிறார். நகரத்தார்கள் தங்களுக்குரிய "கொடுத்து வாங்கும்" தொழிலை மார்க்கெட் ஸ்திரீட்டில் மிகச் சிறப்பாக நடத்தி வந்தனர் அங்குப் பல கிட்டங்கிகள் இருந்தன. நகரச் சீரமைப்புக் காரணமாக இப்போது கிட்டங்கிகள் டாங்க் ரோட்டில் மட்டுமே உள்ளன. டாங்க் ரோட்டில் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் வர்த்தக சங்கம் 1928 முதல் இயங்கி வருகின்றது. இப்போது சிங்கப்பூரில் நகரத்தார்கள் வங்கித் தொழிலில் மட்டுமின்றி ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். மேலும் பலர் வங்கிகளிலும் அரசாங்க அலவலகங்களிலும் தனியார் தொழில் நிறுவனங்களிலும் கல்வி நிலையங்களிலும் பணிபுரிந்து வருகின்றனர். ஏறத்தாழ 400 குடும்பங்கள் சிங்கப்பூரில் உள்ளன. சிங்கப்பூரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு நகரத்தார்கள் ஒரு வகையில் உறுதுணையாக இருந்தவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வாறே சைவமும் தமிழும் சிங்கப்பூரில் தழைத்து வளர்ச்சி அடையவும் நகரத்தார்கள் பெரும் பங்காற்றியுள்ளனர் என்பதையும் யாரும் மறைக்க முடியாது.

சிங்கப்பூர் நகரத்தார் மேற்பார்வையில் இன்று இரண்டு கோயில்கள் உள்ளன. ஒன்று டாங்க் ரோட்டில் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணி கோயில். மற்றொன்று சீனா டவுனிலுள்ள லயன் சித்தி விநாயகர் கோயில். தண்டாயுதபாணி கோயிலின் சிறப்பினை இக்கட்டுரையில் காண்போம்.

**வரலாற்றுச் சிறப்பு**

அருள்மிகு தெண்டாயுதபாணி கோயில் 4.4.1859இல் கட்டப்பட்டதாக அதன் கல்வெட்டுக் கூறுகின்றது. முருகப் பெருமானாகிய தெண்டாயுத பாணியே மூலவராக இருக்கிறார். செட்டியார்கள் ஆதியில் சிங்கப்பூர் ஆற்றங்கரையில் ஒரு மரத்தடியில் வேல் வைத்துப் பூசித்து வழிபட்டு வந்தனர் என்றும் பிறகு முருகப் பெருமானுக்கு 1859-ஆம் ஆண்டு திருக்கோயில் கட்டப்பட்டது என்றும் அறிகிறோம். முதல் திருக்குட நன்னீராட்டு விழா 4.4.1859-இல் நடைபெற்றது. பின்னர் 2.2.1936, 7.7.1955, ஆகிய தேதிகளிலும் கோயில் திருப்பணிகள் நடைபெற்று நன்னீராட்டு விழாக்கள் நடைபெற்றன.

கருவறையின் நுழைவு வாயிலில் ஐம்பு விநாயகர் திருவுருவம் ஒரு பக்கமும் இடும்பன் இன்னொரு பக்கமும் வைத்து வழிபடப்பட்டன. கோயிலின் முன்பக்கம் இரண்டு திண்ணைகள், பின்பு செட்டிநாட்டு வீடுகளிலுள்ளதைப் போல அலங்கார மண்டபம்; அர்த்த மண்டபம், கருவறை என்ற அமைப்பில் முன்பு கோயில் இருந்தது. கார்த்திகைக் கட்டு என்று ஒரு கட்டட அமைப்பும் கார்த்திகை போன்ற நாட்களில் அன்னதானம் செய்வதற்காக 1859 முதல் 1981 வரை இருந்தது.

சிங்கப்பூர் நகரத்தார்கள் சிவபெருமானையும் ஆலயத்தில் வைத்து வணங்க எண்ணினார்கள். 1878-ஆம் ஆண்டில் சிவபெருமானின் அருவுருவத் திருமேனியான சிவலிங்கத்தையும் அவரது சக்தியாகிய உமையம்மையையும் வைத்துத் தனியே ஒரு கோயிலாகத் தெண்டாயுதபாணி கோயிலை ஒட்டியே கட்டி வழிபடத் தலைப்பட்டனர். (பெ.நா.மு.மு.). இக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா 26-1-1886-இல் நடைபெற்றது. சிவ பெருமானுக்குச் சொக்கலிங்கம்/சுந்தரேஸ்வரர் என்றும் அம்மைக்கு மீனாட்சி என்றும், பெயர் சூட்டித் தொழுதனர், நகரத்தார்கள் பாண்டி நாட்டினராதலின் மதுரையிலுள்ள இறைவன் இறைவி பெயரையே தாங்கள் எழுப்பும் கோயில்களில் உள்ள இறைவன் இறைவியருக்கு இட்டு வழங்குவதை மரபாகக் கொண்டுள்ளனர். சிவன், அம்பிகை இருவருக்கும் தனித்தனிக் கருவறைக் கோயில்கள் இப்போதுள்ளன.

இப்போதுள்ள தண்டாயுதபாணி கோயில் (சிவன் கோயில் உள்ளிட்டது) அமைப்பு அண்மையில் (1983) உருவாக்கப்பட்ட ஒன்றாகும்; பழைய கோயில், கார்த்திகைக்கட்டு ஆகியவற்றை முற்றிலும் மாற்றிச் செய்யப்பட்டது. தண்டாயுதபாணி கோயிலுக்கு இராஜகோபுரமும் எழுப்பப் பட்டது. கார்த்திகைக் கட்டு இருந்த இடத்தில் ஈரடுக்குத் திருமண மண்டபம் 4.1.1981ல் கால்கோள் இட்டு 19.1.1983ல் கட்டி முடிக்கப்பட்டது. ஒரு பக்கம் கோயில் பணியாளர் தங்குவதற்கு ஈரடுக்குக் கட்டடம் உள்ளது. முன்பக்கம் பெரிய அலங்கார மண்டபம், அலுவலகம், நூலகம் என்ற அமைப்பும் உள்ளது. கார் நிறுத்துவதற்குரிய வசதியும் சுற்றுப் புறகாரமும் உள்ளன. ஏறத்தாழ 35 லட்சம் வெள்ளி செலவில் செய்யப்பட்ட இத்திருப்பணி முற்றுப்பெற்று 24.11.1983ல் குடமுழுக்கு விழா மிகச் சிறப்பாகச் செய்யப் பட்டது. இத்திருப்பணிச் செலவு முழுவதும் நகரத்தாரின் நன்கொடையிலிருந்தே செய்யப்பட்டது. இக்குடமுழுக்கு விழாவை நடத்திவைக்கத் தமிழகத்திலிருந்து சேது சமஸ்தான வித்வான், சித்தாந்த இரத்னாகரம் சிவாகம சிரோன்மணி திருவாடானை எம். ஐயாமணி சிவம் இங்கு வந்திருந்தார். இதனையொட்டி ஒரு சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. விழாவைத் தொடர்ந்து 48



Mill Dam Cottages, Coniston by A. Heaton Cooper (1863 - 1929)

at Bradford
every product is a piece of art
carefully nurtured
to leave lasting impressions for posterity

Our product range includes high-quality custom designed publications, trade journals, directories, computer manuals, software packaging, even replicating compact discs - the list goes on.

**For a total solution to multimedia printing or publishing write, fax or call:**

**BRADFORD PRESS**
A division of Bradford International Pte Ltd

45, Kallang Pudding Road • #03-00 Alpha Building • Singapore 349317

Tel: 7414866 • Fax: 741 5770 • E-mail: bradford@singnet.com.sg

நாட்கள் நடைபெற்ற மண்டலாபிஷேகத்தின் போது கலைநிகழ்ச்சிகளும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. விழாவிற்குச் சிங்கப்பூர் அதிபர் சி.வி. தேவன் நாயர் தம் துணைவியாருடன் வருகை புரிந்து சிறப்புச் சேர்த்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களும் நீதிபதிகளும் கலந்துகொண்டனர்.

### இடச் சிறப்பு

தண்டாயுதபாணி கோயில் அமைந்துள்ள இடம் தனிச் சிறப்பு வாய்ந்தது. நகரின் மையப் பகுதியில் ஆர்ச்சர்ட் ரோட்டுக்கும் ரிவர் வேலி ரோட்டுக்கும் இடையில் டேங் ரோட்டில் இக்கோயில் அமைந்திருக்கின்றது. இக்கோயிலுக்கு எதிரே அக்காலத்தில் ஒரு குளம் இருந்ததாகவும் அதனாலே அந்தச் சாலைக்கு டேங் ரோடு என்று பெயர் வந்ததாகவும் கூறப்படுகின்றது. அதற்கருகில் அக்கால மலயா இரயில் நிலையம் அமைந்திருந்தது. இரயிலுக்குத் தேவையான நீர்த்தொட்டி ஒன்றிருந்த தால் இதற்கு டேங் ரோடு என்று பெயர் வந்தது என்றும் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட மையமான இடத்தில் இந்தக் கோயில் அமைந்துள்ள நிலத்தைச் செட்டியார்கள் கிழக்கந்தியக் கம்பெனியாரிட மிருந்து அப்போது சிங்கப்பூரில் செலாவணியி லிருந்த ஸ்பெனிய டாலர் நாணயத்திற்கு வாங்கினார்கள் என்ற குறிப்புள்ளது. சிங்கப்பூரின் எப்பகுதியில் இருப்பவரும் இக்கோயிலுக்கு வருவதற்கு ஏற்ற போக்குவரத்து வசதிகள் உள்ள இடம் இக்கோயில் அமைந்திருக்கும் இடம். இக்கோயிலின் அருகே சிங்கப்பூர் ஆறும் ஓடிக் கொண்டிருக்கிறது.

### மூர்த்திச்சிறப்பு

டேங் ரோடு கோயில் உண்மையில் இரண்டு கோயில்களின் இருப்பிடம் எனலாம். ஒருபுறம் தெண்டாயுதாணி ஆலயம்; மறுபக்கம் சிவன் ஆலயம். தெண்டாயுதபாணி ஆலயத்தின் மூலவர் உண்மையில் வேல் வடிவிலேயே அமைந் திருக்கின்றார். முருகப் பெருமானின் வடிவம் தங்க அங்கியாக அவ்வேலின் மேல் சாத்தப் பெற்றிருக்கிறது. இதுவே பக்தர்களுக்குத் தெரியும் வழிபடு கடவுளின் வடிவமாகும். எனவேதான் இத்திருவுருவத்துக்கு முன்னர் மயிலுருவச் சிலையோ பலிபீடமோ இல்லை. மேலும் கருவறையில் உற்சவ விக்ரமாக ஐம்பொன்னால் செய்யப்பட்ட முருகப் பெருமான் திருவுருவம் அருகில் வைத்து வழிபாடு செய்யப்படுகிறது. நாள்தோறும் நடைபெறும் பூசைகளில் நீராட்டு (அபிஷேகம்) மூலவரான வேலுக்கே செய்யப் படுகின்றது. இதனைத் திரைமறைவில் செய்வதே வழக்கமாக இருக்கிறது. மகா சிவராத்திரியன்றும் வருடாபிஷேகத்தின்போதும் நீராட்டினைப் பக்தர்கள் கண்டு மகிழலாம். மூலவரின் கருவறைக்கு வெளியே வலப்புறமுள்ள விநாயகர் ஐம்பு விநாயகர். இவரது வடிவம் செப்புத் திருமேனியால் அமைந்த சிறிய வடிவம். ஒவ்வொரு நாளும் பூசை வேளைகளில் நீராட்டு செய்வதற்காகக் கருவறைக்குள் இவ்வடி வத்தை எடுத்துச் சென்று வேலுடன் வைத்து நீராட்டி முடித்துப் பின்பு வெளியே கொண்டு வந்து வைத்துப் பூசையைத் தொடங்குகிறார்கள். பூசை வேளைகளில் முதன் முதலில் விநாயகருக்கே வழிாடு செய்யப் படும். இடப்பக்கத்தில் இடும்பன் உள்ளார்.

சிவன் கோயிலில் கருவறையில் சிவபெருமான் லிங்க வடிவிலும் இன்னொரு கருவறையில் மீனாட்சி அம்மனும் எழுந்தருளியிருக்கிறார்கள். சிவன் அம்பிகையுடன் விநாயகர், தண்டாயுதபாணி, நந்தி, தட்சிணாமூர்த்தி, அண்ணாமலையார், பிரம்மா, துர்க்கை, சண்டேசுவரர், வயிரவர், நவக்கிரங்கள், ஆகிய திருவுருவங்களும் உள்ளன. நடராசர் சிவகாமி செப்புத் திருமேனி உருவங்கள் தனியே உள்ளன. இத்திருவுருவங்களுக்கு ஆகம முறைப்படி சிவாச்சாரியார்கள் பூசை செய்கின்றனர். தெண்டாயுத பாணிக்குப் பண்டாரங்கள் பூசை செய்கின்றனர்.

### கட்டடச் சிறப்பு

அருண்மணமும் கலையழகும் கொண்டு தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய கோயிலாகச் சிங்கப்பூர் தேங் சாலையில் கம்பீரமாக எழுந்தருளியிருக்கின்றது தண்டாயுதபாணி கோயில். இத்திருக்கோயில் தமிழகத்தின் தலைசிறந்த சிற்பிகளைக் கொண்டு சிற்பச் செந்நூல் முறைப்படி இராச கோபுரமும், விமானங்களும், எழில்சேர் சிற்பங்களும் திருமண மண்டபமும் அமைக்கப் பெற்று முற்றிலும் புதிதாக உருவாக்கப்பட்டது.

ஐந்து மாடங்களைக் கொண்ட இராஜகோபுரம், முகப்பில் கோயிலின் சிறப்பைப் பறைசாற்றும் வகையில் அமைந்துள்ளது. காணும் கண்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் கலை நுணுக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த இராஜகோபுரம் 75 அடி உயரமும் 34 அடி அகலமும் கொண்டதாகும்.

தண்டாயுதபாணி கடவுளுக்குக் கருவறையும், முகமண்டபத்துடன் கூடிய தனிச் சன்னிதியும் அமைக்கப்பட்டுள்ளன. அதுபோலவே சுந்த ரேசுவரர் சுவாமிக்கும் மீனாட்சி அம்மனுக்கும் கருவறை, முக மண்டபத்துடன் கூடிய தனிச் சன்னிதியும் அமைக்கப்பட்டுள்ளன! இவை சிமெண்ட் மற்றும் செங்கல்லில் செய்யப்பட்டவை என்றாலும் கருங்கல்லில் செய்யப்பட்ட வேலைப்பாடுகள் போலவே தத்ரூபமாகவே அமைந்துள்ளன. விநாயகர், இடும்பன், நவக்கிரஹம் ஆகியவற்றுக்குச் சிறுசிறு விமானங்களும் நடராஜ, சிவகாமி அம்மனுக்கும், வைரவர்க்கும் தனித்தனிக் கோட்டங்கள் அலங்கார மண்டபத் திற்குப் பக்கத்திலும் கட்டப்பட்டிருக்கின்றன.

இங்குள்ள சிவன் சன்னதியின் கருவறை வழக்கம்போல் சதுர வடிவில் இல்லாமல் அதன் பின்பகுதி யானையின் பின்பகுதி போன்று விருத்தாகாரபாக அமைக்கப்பட்டிருப்பது சிற்பக் கலையின் மற்றொரு சிறப்பு அம்சமாகும். இந்த அமைப்பை ஹஸ்திபிருஷ்டம் என்று வட மொழியிலும் தூங்கானை மாடம் என்று தமிழ் மொழியிலும் அழைப்பதுண்டு. இத்தகைய வடிவிலான தூங்கானை மாடம் தமிழகத்தில் ஓரிரு ஆலயங்களில் மட்டுமே இருக்கிறது. சிங்கப்பூரில் இந்தத் தூங்கானை மாடம் அமைந்துள்ள முதல் கோயில் என்ற பெருமை தெண்டாயுதபாணி

# *With Best Compliments from*

NEWTRADE

# NEWTRADE PTE LTD

Blk 3 Upper Pickering Street #04-27

Singapore 051003

Tel : 536 1696, 536 1697

Fax : (65) 536 1698



அலங்கார மண்டப முகப்பு-மேல் தோற்றம்



மூலவர் கருவறை விமானம்



ராஜ கோபுரம்

***With Best Compliments from***

# NETWORK INTER BUSINESS SERVICES PTE LTD

Importers, Exporters and Management Consultants

21 Collyer Quay #15-02/03
Hong Kong Bank Building
Singapore 049320
Tel : 2207779
Fax : 2204929

கோயிலுக்குக் கிடைத்துள்ளது.

ஆலய வாசலும் ஓர் அழகான அம்சமே! முகப்புக் கதவுகள் இரண்டிலும் செதுக்கப்பட்டுள்ள 72 தாமரைகள் கோயில் வாசலுக்குப் பேரழகை ஊட்டுகின்றன.

சுமார் 700 பேர் அமரக்கூடிய இருக்கை வசதியைக் கொண்டது கல்யாண மண்டபம்! தமிழகத்திலிருந்து தருவிக்கப்பட்ட மணமேடையும் இந்த மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது! மற்றும் பணியாளர் குடியிருப்பு, ஆறு தளவாட அறைகள் ஆகியவையும் கட்டப்பட்டுள்ளன.

***சிற்பச் சிறப்பு***

தமிழ்நாட்டுக் கோயில்களிலும் காணக் கிடைக்காத பல புதுமையான கலைச்சிற்பங்கள் தண்டாயுதபாணி ஆலயத்தின் பெருமைக்கு அணிகலன்களாகத் திகழ்கின்றன. இக்கோயிலின் சிற்ப அம்சங்களாக ஒளிரும் சிற்ப வேலைப்பாடுகள் அனைத்தும் மாமல்லபுரத்துச் சிற்பக் கல்லூரி முதல்வர் திரு.வை.கணபதி ஸ்தபதி தலைமையில் திரு. எஸ். நாகராஜன் ஸ்தபதி மேற்பார்வையில் கைதேர்ந்த 43 ஸ்தபதிகளின் கலை ஒழுகும் கைவண்ணங்களாகும்.

தண்டாயுதபாணி சன்னதியில் உள்ள மண்டபத் தூண்களில் முருகனின் ஆறு சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. இவை முருகனின் அறுபடை வீடுகளின் திருத்தலங்களில் உள்ள மூலமூர்த்தி களின் அமைப்பை அவ்வாறே சித்திரிக்கும் வகையில் மிகுந்த கலைநயத்துடன் திகழ்கின்றன. இவை தமிழகத்தில் உள்ள கோயில்களில் கூடக் காணமுடியாத தெய்வாம்சங்கள் என்றால் மிகையல்ல!

மண்டப விமானத்தில் அழகு காட்டிக் கொண்டிருக்கும் கமலங்கள் புதுமையான வேலைப் பாடுகளுடன் அமைந்திருப்பது மாமல்லபுரத்துச் சிற்பக் கல்லூரியின் கலைத்திறனுக்கு மற்றொரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. பெரும்பாலும் இத்தகைய கமலங்கள் ஓவியங்களாகவே வரையப்படும். ஆனால் இக்கோயிலில் உள்ள கமலங்கள் பத்து அடி விட்டமும் ஒன்பது அங்குலம் தொங்கலும் உடையதாக இயற்கையான முறையில் செங்கல்லில் அமைக்கப்பட்டிருப்பது தனிச் சிறப்பாகும்.

இக்கோயிலின் விமானத்தைச் சுற்றியுள்ள 48 கண்ணாடி மாடங்களில் பொறிக்கப்பட்டிருக்கும் தெய்வச் சிற்பங்கள் அழகுக்கு அழகு சேர்க்கும் அம்சங்களாகத் திகழ்கின்றன! விளக்கு ஒளியிலும் கதிரவன் ஒளியிலும் இந்தக் கண்ணாடிச் சிற்பங்கள் மின்னும் அழகு கண்கொள்ளாக் காட்சி.

சிற்பக் கலையின் சிறப்பைப் பறைசாற்றும் மற்றொரு அம்சம் அலங்கார மண்டபம். அலங்கார மண்டபச் சுவரில் பளிங்குக் கற்களில் அமைந்த வண்ணமயில் வடிவம் ஒன்றிருக்கிறது. இந்த அலங்கார மண்டபத்திற்கு எதிரே மகர தோரணத் துடன் கூடிய திருவாச்சியும் அதன் உள்ளே ஏழு அடி உயரத்தில் ஆனந்தத் தாண்டவ நடராஜரும் அதன் வலது பக்கம் மாணிக்கவாசகரும் இடதுபுறம் சிவகாமி அம்மையும் சுதைச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. அலங்கார மண்டபச் சன்னிதியில் உள்ள தூண்களில் சிவபெருமானின் எட்டுத் தாண்டவங்கள் சிற்பங்களாகச் சித்திரிக்கப் பட்டுள்ளன. இவை சிவபெருமான் ஆடிய 108 தாண்டங்களில் முக்கியமானவை.

சிவபெருமானின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் ஆற்றலை விளக்கும் அற்புத நடராசத் திருவுருவங்கள் பொன்னிறத்தில் அமைக்கப் பட்டுள்ளன.

இந்த பிருமாண்டமான கோயில் முழுவதும் சுமார் 218 தெய்வச் சிற்பங்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் முற்காலச் சோழர் பாணியில் கலையழகு குன்றாமல் அமைக்கப்பட்டிருக்கின்றன.

***பூசைச் சிறப்பு***

தெண்டாயுதபாணி கோயிலில் ஒவ்வொரு நாளும் குறித்த நேரத்தில் பூசை நடைபெறுவது தனிச் சிறப்பாகும். காலையில் எட்டு மணிக்கும் மாலையில் 5.30 மணிக்கும் பூசை நடைபெறும் இரவு அர்த்தசாமப் பூசை நடைபெறும். விசேஷ நாட்களில் மாலை ஏழு மணிக்குப் பூசை தொடங்கி சாமி புறப்பாடு நடைபெறுவதுண்டு. ஒவ்வொரு நாளும் பூசையின் போது விநாயகர், முருகன், சிவன், உமை ஆகியோருக்குத் தமிழில் அர்ச்சனை செய்யப்பட்டு வருகின்றது. மேலும் பக்தர்கள் விரும்பினால் தமிழில் அர்ச்சனை செய்து கொடுக்கப்படுகின்றது. சிங்கப்பூரில் தமிழர்ச்சனையைத் தொடங்கி வைத்த பெருமை இத்திருக்கோயிலுக்கே உண்டு. விசேஷ நாட்களில் சோடச உபச்சார வழிபாடு உண்டு. கோயில் திறந்திருக்கும் நேரம் காலை மணி 8.00-12.00, மாலை மணி 5.30 - 8.30.

***விழாச் சிறப்பு***

தைப்பூசம், நவராத்திரி, கந்தர் சஷ்டி லெட்சார்ச்சனை ஆகியவை இங்கு நடைபெறும் முக்கிய விழாக்களாகும். தைப்பூசக் கொண்டாட் டத்தில் முதல் நாள் காலையில் சுவாமி வெள்ளி ரதத்தில் தேங் ரோடு கோயிலிலிருந்து நகரத்தார் பிள்ளையார் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்து மாலை அங்கிருந்து நகரத்தார் காவடிகளுடன் மார்க்கட் ஸ்த்ரீட் வழியாக தேங் ரோடு கோயிலுக்கு இரவு திரும்பும். பூசத்தன்று அதிகாலை 2 மணி முதல் காவடிகள், பால்குடங்கள், சிராங்கூன் ரோட்டிலுள்ள சீனிவாசப்பெருமான் கோயிலிலிருந்து வரத் தொடங்கும். இரவு 12 மணி வரை நீடிக்கும். சீனர்கள் உள்ளிட்ட இந்துப் பக்தர்கள் பலர் அலகுக் காவடிகளுடன் வருவர். ஆண்டுக்கு ஆண்டு ஆயிரக் கணக்கில் காவடிகளின் எண்ணிக்கை பெருகிவருகிறது. மதியம் 12 மணி முதல் இரவு 8 மணி வரை ஓயாது அன்னதானம் நடைபெறும். முன்பு தைப்பூச விழா 3 நாட்கள் நடைபெற்றதாகவும் மூன்றாம் நாள் சுவாமி எழுந்தருளிக் கடற்கரை ஓரத்துக்குச் சென்று பீச் ரோட்டில் வாண வேடிக்கை

# *With Best Compliments from*

## SONA RATAN GROUP OF COMPANIES

Import-Export -General Trade

Investments-Real Estate

111, North Bridge Road

#24-05 Peninsula Plaza,

Singapore 179098

Tel : 3389701 Fax : (65) 3388853

Cable : SONA RATAN"

E-mail: sonas@singnet.com.sg


Chettiars' Temple Society Singapore

நிகழ்ச்சி நடைபெற்றதாகவும் பெரியவர்கள் சொல்கிறார்கள்.

நகரத்தார் கோயிலில் நடைபெறும் சிறப்பு விழாக்களில் ஒன்று நவராத்திரி (பின் பார்க்க) ஒன்பது நாட்கள் கலை நிகழ்ச்சிகளும் நடக்கும். இப்படிப் பட்ட நிகழ்ச்சி சிங்கப்பூரில் முதன் முதலில் இக்கோயிலில்தான் தொடங்கப்பட்டது என்று தெரிகிறது.

இங்கு கொண்டாடப்படும் நவராத்திரி விழாவின் சிறப்பம்சம் ஒவ்வொரு நாளும் முருகப் பெருமானுக்குச் செய்யும் அலங்காரமாகும். எவ்வுருவில் வழிபட்டாலும் எக்கோலத்தில் வழிபட்டாலும் இறைவன் ஒருவனே அவன் அவ்வக்கோலத்தில் வந்து அருள்புரிவான் என்பதை எடுத்துக்காட்டும், வண்ணம் முருகனைத் திருமாலாகவும் சிவனாகவும், சக்தியாகவும் அலங்காரம் செய்து கொலுவீற்றிருக்கச் செய்வர். ஒன்பது நாள் அலங்காரங்களின் விவரம் வருமாறு:

1) இராஜாங்கம் 2) வெண்ணைத்தாழி
3) மார்க்கண்டேயர் 4) வேணுகானம்
5) கண்ணப்ப நாயனார் 6) ஊஞ்சல்
7) பிட்டுக்கு மண் சுமத்தல் 8) காளிங்க நர்த்தனம்
9) சரஸ்வதி பூசை
10) பத்தாம் நாள் குதிரை வாகனத்தில் எழுந்தருளி அம்பு போடுதல் நடக்கும்.

ஒவ்வொரு மாதமும் கார்த்திகை அன்று சுவாமி புறப்பாடு உண்டு. மதியத்தில் அன்னதானம் செய்யப்படும். நால்வர் குருபூசை, சேக்கிழார், கோவிலூர் ஆண்டவர் ஆகியோர் குருபூசையும் உண்டு. அன்று குருபூசைக்குரியவர்கள் படங் களுக்கு முன்னர் அவர்கள் வரலாறு படிக்கப்பெற்று வழிபட்டுப் பின்னர் மகேசுவர பூசை நடக்கும்.

வருடப்பிறப்பு, சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆவணி மூலம், கந்தர் சஷ்டி, திருக்கார்த்திகை, கார்த்திகை சோமவாரம், மாசி மகம், பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் இரவு சுவாமி புறப்பாடு உண்டு, ஆனி,, மார்கழித் தரிசனமும் நடராசருக்கு உண்டு. சிவராத்திரி வழிபாடும் சிறப்பாக இருக்கும். பிரதோஷம் வழிபாடும் செய்யப்படுகிறது. ஆடி மாதத்தில் துர்க்கை அம்மன் லட்சார்ச்சனையும் நடைபெறுகிறது.

### இலக்கியச் சிறப்பு

இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தண்டாயுதபாணியைத் தலைவராகக் கொண்டு பல கவிஞர்கள் இலக்கிய நூல்களையும் தனிப்பாடல் களையும் இயற்றியிருக்கின்றார்கள். அவற்றுள் காலத்தால் முந்தியது 1887-ல் யாழ்ப்பாணம் சதாசிவ பண்டிதர் என்பவர் இயற்றி வெளியிட்ட சிங்கை நகரந்தாதி, சித்திரக்கவிகள் எனும் இரண்டு நூல்களாகும். இவை இரண்டும் மலேசிய சிங்கப்பூர்த் தமிழிலக்கியத்தின் முன்னோடி நூல்களாகத் திகழ்வன என்பது ஆய்வாளர் கருத்தாகும். எனவே சிங்கை மலேசியத் தமிழ் இலக்கியத்தின் தோற்று வாய்க்குக் காரணமாக இருந்தவன் தமிழ்க்கடவுளாம் தெண்டாயுதபாணியே என்பது போற்றுதற்குரியது. சித்திரக் கவியில், ரதபந்தம், நாகபந்தம் முதலிய சொல்லலங்காரக் கவிதைகளும் உள்ளன. இவை இரண்டையும் சென்ற குடமுழுக்கு விழாச் சிறப்பு மலரில் நகரத்தார்கள். வெளியிட்டுள்ளனர்.

சிங்கை நகர் சிங்காரவடிவேலர் காவடிச் சிந்து என்னும் பெயரில் காரைக்குடியைச் சேர்ந்த திரு இரா. மு. இராம இராமநாதனால் இயற்றப்பெற்ற ஒரு நூலையும் இம்மலரில் வெளியிட்டிருக்கின்றனர். மேலும் சிங்கப்பூர்ப் பிரபந்தத் திரட்டு என்னும் தலைப்பில் வன்றொண்டர் அவர்களின் மாணாக்கருள் ஒருவராகிய காரைக்குடி ராம.கு.மெ. மெய்யப்ப செட்டியாரால் இயற்றப்பெற்று, நாச்சியா புரம் பெரிய கறுப்பஞ் செட்டியார் குமாரர் முத்தையா செட்டியார் கேட்டுக் கொண்டபடி சென்னை மதராசு ரிப்பன் அச்சியந்திர சாலையில் வெளியிட்ட பெற்று விகாரி வருடம் மார்கழி மாதம் வெளியிட்ட நூலொன்று உள்ளது. அந்நூலில் அடங்கியுள்ள பிரபந்தங்கள் வருமாறு. 1) சிங்கப்பூர் சித்தி விநயாகர் நவமணி மாலை 2) சுப்பிரமணிய சுவாமி பிள்ளைத் தமிழ் 3) சண்முகமாலை 4) சுப்பிரமணிய சுவாமி பதிகம் 5) அங்கயற்கண்ணி மாலை 6) சுந்தரேசர் திருவிரட்டைமணி மாலை 7) அனுகூல விநாயகர் மாலை 8) அனுகூல விநாயகர் பதிகம்.

சிங்கப்பூர் வேலவர் மீது அருளிச் செய்த தோத்திரத் திரட்டு எனும் பேரில் ஒரு சிறு நூலொன்று கீழ்ச்சிவல் பட்டி அழகாபுரி பழ. சு. கரு. கருப்பஞ் செட்டியார் என்பவரால் தொகுக்கப்பெற்று இராங்கியம் நா. அ. சிதம்பரம் செட்டியாரால் அச்சிடப் பெற்று 1964-ல் ஒரு நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்நூல் இரண்டு பதிப்புகளைக் கண்டிருக்கிறது. (1964, 1967), இந்நூலில் வழிபாட்டுக்கு உதவும் வகையில் விநாயகர், முருகன், நடராஜர், (சிவன்) கலைமகள், இலக்குமி முதலியோர் பற்றிய பாடல்கள் உள்ளன. சிங்கை முருகன் தொடர்பான பாடல்களின் தலைப்பு வருமாறு. 1) வேலர் துதி 2) சுப்பிரமணியர் ரதமேறும் துதி 3) முருகன் துதி 4) திரு ஊசல் பதிகம் 5) எச்சரிக்கை, 6) கெட்டியம் 7) மங்களம் முதலியன உள்ளன.

மேலும் இக்கோயிலுக்கு வருகை தரும் கவிஞர்கள் பலர் அவ்வப்போது சிறு சிறு கவிதைகளையும் நூல்களையும் இயற்றி வெளி யிட்டுள்ளனர். தேவகோட்டை தத்புருஷ தேசிகர், பாலகவி லெ. இராமநாதன் செட்டியார் அவர்கள் சிங்கப்பூர் தேங் ரோடு தெண்டாயுதபாணி பதிகம் இயற்றியிருக்கிறார்.

மேலும் கவிஞர் கண்ணதாசன், சரசுவதி இராமநாதன், கிருபானந்த வாரியார், அலோர் ஸ்டார் கவிஞர், ரெ. ராமசாமி (பதினாறு பேறும் பாலிப்பான்), ஆகியோர் பாடல்கள் பாடியிருக்கின்றனர் உள்ளூர்க் கவிஞர்களாகிய வெண்பாச் சிற்பி இக்குவனம். பாத்தேறல் இளமாறன், முருகதாசன், முத்து மாணிக்கம் முதலியோரும். இம்முருகனைப் பற்றிப் பாடியிருக்கிறார்கள். கண்ணதாசன் சிங்கை வந்திருந்தபோது இம்முருகனைப் பற்றிப் பாடிய பாடல் வருமாறு:

காவடி எடுத்தல் நன்றாம்
கனிவுடன் வேண்டல் நன்றாம்
சேவடி தொழுதல் நன்றாம்




# NARERA'S

Supermarket



## NARERA INTER-TRADE

188-196 RACE COURSE ROAD, S-218612
TEL : 3230844 (8 LINES) FAX : 3231550
TLX : RS 37170 AB NARERA

Importer, Exporter, Wholesalers & Retailers of General Products like Canned Foodstuffs, Spices, Sauces, Pulses, Grains, Cement, Chemicals and Additives, Electronic Components, etc.

(Opening Hours : 9.30 am till 9.30 pm daily)

சிங்கப்பூர் முருகன் பேரை
நாவினால் உரைத்தல் ஒன்றாம்
நாளெலாம் தனை மறந்தே
கோவிலில் இருத்தல் நன்றாம்
குறைவிலா வாழ்க்கை சேரும்,

மைபூசும் விழியாள் வள்ளி
மங்கை தெய்வானை நீங்காத
தெய்வாகச் சிங்கப்பூரில்
திருவுலாக் கொள்ளும் வேலன்
தைப்பூசம் குலத்தைக் காக்க
தமிழ்மரபு நலத்தைக் காக்க

நெய்வாசக் குழலாரோடும்
நேயர்கள் வருக! வாழ்க!

### தமிழ்ப்பணிச் சிறப்பு

தண்டாயுதபாணி திருக்கோயில் நிருவாகத்தினர் சைவத்தையும் தமிழையும் இருகண்களாகக் கருதிப் போற்றும் இயல்பினர். இவர்கள் தமிழுக்குச் செய்த பணிகள் பலப்பல. சிங்கைக்கு வருகின்ற தமிழறிஞர்கள், சமயச் சான்றோர்கள், புலவர்கள் ஆகியோரைத் தம் திருக்கோயிலுக்கு அழைத்து வரவேற்பு அளித்து அவர்களைச் சமயச் சொற்பொழிவு நிகழ்த்த ஏற்பாடு செய்வதை இவர்கள் நீண்ட நெடுங்காலமாக ஒரு வழக்கமாகவே கொண்டுள்ளனர். இவ்வாறு வந்து இந்தத் திருக்கோயிலில் சமயச் சொற்பொழிவாற்றிய அறிஞர்கள் பலர். 1965-இல் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வருகைதந்த அறிஞர்களை இவர்கள் வரவேற்றுபசரித்தனர். அம்மாநாட்டிற்கு நன்கொடையும் அளித்துள்ளனர். 1983ல் நடைபெற்ற குடமுழுக்கு விழாவிற்குப்பின் அறிஞர்கள் பலரின் சமயச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடுகள் செய்தார்கள். உள்ளூர்க் கவிஞர்களை ஊக்கப்படுத்திக் கவியரங்கம் ஏற்பாடு செய்தனர். மேலும் இக்கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் கந்தர் சஷ்டி இலட்சார்ச்சனையின் போது இறை வழிபாட்டுப் பாடல்கள் தொகுப்பு அடங்கிய நூல்களும் வெளியிட்டு வழங்கி வந்தனர்.

சைவ சமயத் திருமுறைகளாகிய திருமுறைகளைப் பரப்பும் பணியில் இக்கோயிலார் செய்து வரும் பணி அளவிடற்கரியது. இந்தக் கோயிலில் ஓதுவார் ஒருவரை நியமித்து நாள்தோறும் மாலையில் 7 மணிமுதல் 8 மணிவரை திருமுறைப் பாராயணம் செய்வதற்காக ஓர் அறக்கட்டளையே உள்ளது. அதன் சார்பாக முருகப் பெருமான் திருமுன்னர் நாள்தோறும் திருமுறை ஓதும் பணி பல ஆண்டுகளாக நடந்து வருகின்றது. தேவார வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. சிங்கப்பூரில் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்று வரும் திருமுறை மாநாடு நிகழ்வதற்கு இக்கோயிலார் தங்கள் திருமண மண்டபத்தைத் தந்துதவுகின்றனர். மேலும் திருமுறை ஓதும் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வாங்குவதற்காக ஆண்டுதோறும் 200 வெள்ளி நன்கொடை கொடுத்து வருகின்றனர். 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற திருமுறை மாநாட்டிற்குப் புரவலராக இருந்து அறுபத்து மூவர் குருபூசை நடத்தி உதவினர். திருமுறையின் சாரமாகத் திகழும் சைவசித்தாந்தத் துறையை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நிறுவுவதற்கும் இவர்கள் நன்கொடை வழங்கியுள்ளனர். மேலும், மலேயாப் பல்கலைக்கழக இந்திய இயல் துறை நிறுவுவதற்கும் இவர்கள் நன்கொடை கொடுத்துள்ளனர். மேலும் நகரத்தார் குலதெய்வங்கள் போன்ற நூல்கள் வெளியிடு வதற்கும் இவர்கள் பொருளுதவி செய்துள்ளனர்.

### சமுதாயப் பணிச் சிறப்பு

தண்டாயுதபாணி கோயில் நிருவாகத்தினர் தங்களால் இயன்ற அளவு சமுதாயப் பணியும் செய்துள்ளனர். சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கமாகிய சிண்டாவுக்கு முதன்முதல் ஐம்பதாயிரம் வெள்ளி நன்கொடை கொடுத்து ஏனைய ஆலயங்களுக்கு வழிகாட்டியாக இருந்த பெருமை தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு உண்டு. சிங்கப்பூரில் சானா எனப்படும் போதை புழங்கிகளின் மறுவாழ்வு நலச் சங்கத்தின் இந்து நலப்பணிக்குப் பத்தாயிரம் வெள்ளி நன்கொடை கொடுத்துள்ளார்கள். மேலும் சிங்கப்பூர் இந்து செண்டர் கல்வி நிதிக்கு 1200 வெள்ளி உதவியுள்ளனர். சிங்கப்பூர் செயின்ட் ஜோன்ஸ் மருத்துவ வண்டிக்காக ஆண்டுதோறும் 500 வெள்ளி நன்கொடையும் 1988ஆம் ஆண்டு முதல் கொடுத்து வருகின்றனர். உடற்குறையாளர் சங்கத்துக்கும் 1000 வெள்ளி நன்கொடை அளித்துள்ளனர். தாங்ளின் காவலர் நிலையத் துக்கும் ஆண்டுதோறும் ஆயிரம் வெள்ளி நன்கொடை அளித்து வருகின்றனர். சமூக உண்டியல் நிதிக்கு 2000 வெள்ளி நன்கொடை வழங்கியுள்ளனர். இவ்வாறு இக்கோயில்கள் செய்து வரும் சமூகப் பணிகள் பலவகையாக இருப்பதைக் காணலாம்.

### பிறகோயில் தொடர்புச் சிறப்பு

சிங்கப்பூரிலுள்ள ஏனைய திருக் கோயில் களுக்கும் தண்டாயுதபாணி திருக்கோயிலார் பல்லாற்றானும் உதவி வருகின்றனர். இப்போது கேலாங் பகுதியிலிருக்கும் சிவன் கோவில் முன்பு ஆர்ச்சர்ட் ரோட்டில் அமைந்திருந்தது. இது சிங்கப்பூரிலுள்ள பழமையான கோயில்களில் ஒன்று. இந்தத் திருக்கோயிலில் அம்மனில்லாததைக் கண்ட தண்டாயுதபாணி கோயிலார் அம்மன் கோயில் கருவறை கட்டும் பொறுப்பினை 1964ல் ஏற்றுக் கொண்டனர். காசியில் உள்ளது போன்று விசாலாட்சி அம்மன் கோயில் இங்கு எழுப்பி அதற்கான பூசைப் படித் தரத்துக்குரிய செலவினையும் நகரத்தார்கள் ஏற்றுக் கொண்டனர். 1993ல் இப்போதுள்ள சிவன் கோயில் கேலாங்கில் கட்டுவதற்குத் திருப்பணிக்காக 31000 வெள்ளியும் அம்மன் கோவில் கோபுரக் கலசம் தங்கமுலாம் பூசுவதற்காக 15000 வெள்ளியும் பீடம் வெள்ளிப்பூச்சுக்காக 5000 வெள்ளியும் ஆகமொத்தம் 51000 வெள்ளி தண்டாயுதபாணி கோயிலார் நன்கொடை அளித்துள்ளனர். இந்து அறக்கட்டளைவாரியம் ஏற்றுக்கொண்ட நிலையிலும் இக்கோயிலை நிர்வகிப்பதற்குப் போதிய நிதி வசதி கிடைக்காத போது தண்டாயுதபாணி கோயில் நிர்வாகத்தினர் அன்றாடப் பூசைக்குத் தேவையான அரிசி, எண்ணெய் போன்ற பொருட்களுக்குத் தேவையான செலவுக்காகப் படித்தரம் கொடுப்பது என 1937 ஜனவரி 21 அன்று முடிவு எடுத்துக் கொடுத்து வருகின்றனர். இப்படித்தரம் இன்றும்

**with best compliments from ...**

## REYNOLDS SHIPPING PTE LTD

*CLEARING & FORWARDING AGENTS*

**WE PROVIDE THE FOLLOWING SERVICES :**

1. Cargo Shipments to all over the World
2. Import Cargo Clearance
3. Export Cargo by Sea/by Air
4. Sea Cargo by LCL/FCL
5. T.D.B. Permits Import/Export
6. Local Cargo Movements

DUAL

## DUAL MARKETING PTE LTD

*EXPORTERS OF ELECTRONIC PRODUCTS*

**WE IMPORT & EXPORT THE FOLLOWING:**

1. Electrical & Electronic Goods
2. Home Appliances & Crockeries
3. Granites & Marbles
4. Aquarium Products
5. Textiles & Garments
6. Edible items based on India

**REGISTERED OFFICE :**

**NO. 15 CUFF ROAD, SINGAPORE 209726**
**TEL : 2911343, 3920092, 2958014 FAX : 2980515**
**H.P. NO: 9-6324926 PAGER : 9-4917264**

தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

சிங்கப்பூரில் மிகப் பழமையான கோயில் எனக் கருதப்பெறும் சௌத் பிரிட்ஜ் ரோடு மாரியம்மன் கோயிலில் தண்டாயுதபாணி திருக்கோயிலார் தாங்கள் தைப்பூசம் நடத்துவதற்குமுன் புனர்பூசம் உபயம் ஒன்று வெகுகாலமாக நடத்திவருகின்றனர். இன்றுவரை இது வழக்கமாக இருந்து வருகின்றது. தைப்பபூசத்திற்கு முதல்நாள் வெள்ளிரதத்தில் தண்டாயுதபாணி மாரியம்மன் கோயில் வரும்போது சிறப்பு மரியாதை செய்யப்படும். நகரத்தார் காவடிகள் லயன் சித்தி விநாயகர் கோயிலிலிருந்து புறப்பட்டு மாரியம்மன் கோயில் வந்துதான் தண்டாயுதபாணி கோயில் வருவது வழக்கமாகும். 1921இல் அப்போதுள்ள அம்மன் உற்சவர் உடைந்துவிட்டதால் புதிய அம்மன் உற்சவர் பெறுவதற்கான உதவிகளை நகரத்தார்கள் செய்தனர். 1936ல் மாரியம்மன் கோயில் குடமுழுக்கு விழா நடைபெற்றபோது தண்டாயுதபாணி கோயிலார் தங்கள் வெள்ளி ரதத்தை மாரியம்மன் கோயிலுக்குக் கொடுத்துதவினர்.

சிங்கப்பூரின் சிராங்கூன் ரோட்டிலுள்ள ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஆலயத்திலிருந்துதான் தைப்பூசக் காவடிகள் புறப்பட்டுத் தண்டாயுதபாணி கோயில் வந்து சேரும். தைப்பூசக் காணிக்கைச் சீட்டு விற்பனையில் பாதிப்பகுதியை ஸ்ரீனிவாஸப் பெருமாள் கோயிலை நிர்வகிக்கும் இந்து அறக் கட்டளை வாரியத்துக்குத் தண்டாயுதபாணி நிருவாகத்தினர் தருகின்றனர். மண்டாய் மாரியம்மன் கோயிலுக்கு 1000 வெள்ளி நன்கொடையும் நகரத்தார்கள் கொடுத்திருக்கின்றனர்.

**நிர்வாகச் சிறப்பு**

தண்டாயுதபாணி கோயிலார் நிர்வாகத் திறனுக்குப் பேர் பெற்றவர்கள். சிங்கையில் தொழில் செய்யும் நகரத்தார்கள் வாழும் கிட்டங்கிகளைச் சார்ந்தவர்தான் கார்பார் எனப்படும் கோயில் மேலாண்மைக் குழுத் தலைவராக வரும் தகுதி பெற்றவர் ஆவார். அவர் ஆண்டுதோறும் தைப் பூசத்தினை ஒட்டி நடைபெறும் மகமைக் கூட்டத்தின் போது தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்பேற்றுப் பணி புரியத் தொடங்குவார். தண்டாயுதபாணி கோயில் நிர்வாகத்தினையும் லயன் சித்தி விநாயகர் கோயில் நிர்வாகத்தினையும் கவனிக்கும் பொறுப்பு அவருக்குண்டு. கிட்டங்கிகளின் பிரதிநிதிகள் அடங்கிய செயற்குழுக் கூட்டம் மாதந்தோறும் நடைபெறும். அக்கூட்டத்தில் வரவு செலவுக் கணக்குப் படிக்கப்பெற்று ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற மேம்பாட்டுப் பணிகளும் முடிவு செய்யப் பெறும். நகரத்தார் பொதுக்கூட்டம் நடைபெற்று முடிவுகள் எடுக்கப்படுவதும் உண்டு. இந்நிர்வாக அமைப்புமுறை நீண்ட காலமாக இருந்து வருகின்றது.

**முடிவுரை**

இத்தகைய பலசிறப்புகளையுடைய சிங்கப்பூர் தண்டாயுதபாணி திருக்கோயில் இப்போது மறு சீரமைப்புச் செய்யப்பெற்று வண்ணம் பூசப்பெற்றுப் புதுப் பொலிவுடன் திகழ்கின்றது. இதன் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா தாது ஆண்டு கார்த்திகைத் திங்கள் 14 ஆம் நாள் 29-11-1996 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறுகிறது. இதற்கெனப் பிள்ளையார் பட்டி பிச்சைக் குருக்கள் தலைமையில் பல சிவாசாரியார்கள் தமிழகத்திலிருந்து வருகின் றனர். இவ்விழா சீருடனும் சிறப்புடனும் நடக்கவும் இக்கோயில் மேன்மேலும் சைவமும் தமிழும் தழைக்கப் பாடுபடவும் சிங்கப்பூர் இந்துப் பெருமக்கள் நல்லாதரவு நல்குவார்களாக.

---

சிங்கப்பூர், ஞானதண்டாயுதபாணி திருக்கோயிலை, நகர தனவணிகர்கள், தங்கள் பரம்பரைக்கு ஏற்ப சீரும் சிறப்புமாகப் பரிபாலித்து வருகின்றார்கள்.

அக்காலத்தில் சேர சோழ பாண்டியர்கள் புதுக்கிய ஆலய கற்களை இக்காலத்தில் நகரத்தார்கள் பழுதுநீக்கி கல் திருப்பணிகள் பலபுரிந்து சைவத்தை நிலைநாட்டி வருவது உலகறிந்த உண்மை.

கடல்கடந்து வந்த இடத்திலும் குல முறை வழுவாது, எந்தை கந்தவேளை மெய்யன்புடன் வழிபடுகின்ற காட்சி மறக்க முடியாதது. முருகன் கருணையால் எல்லா நலன்களும் பெற்று நீடுவாழ்க.

அன்பன்
*கிருபானந்தவாரியார்*
26. 1. 57

EXPORT QUALITY

Crown Flower

THM INTERNATIONAL IMPORT & EXPORT PTE LTD
SINGAPORE

PT CAHAYA GEMILANG PRATAMA EXPORT & IMPORT
BANDUNG, INDONESIA

IMPORTER & EXPORTER OF INDONESIAN TEXTILE
& CHINA SILK
MANUFACTURER REPRESENTATIVE OFFICE

*SPECIALISTS IN:*

* INDONESIAN NYLON NET EMBROIDERY FABRIC & OTHER EMBROIDERY FABRICS & OTHER TEXTILE ITEMS EXCLUSIVELY FROM INDONESIA AND ALSO SILK MATERIAL FROM CHINA

**OVERSEAS TRADE ENQUIRIES WELCOME**

**81 ARAB STREET, SINGAPORE 199778**
**TEL : (65) 2918181 FAX : (65) 2930007**

**INDONESIA OFFICE : JALAN SULTAN AGUNG NO 21, BANDUNG 40115, INDONESIA**
**TEL : (62-22) 4200567, 430931 FAX : (62-22) 4203146**

# ARULMIGU THANDAYUTHAPANI TEMPLE, SINGAPORE

*A Palaniappan*

Sri Thandayuthapani Temple not only epitomizes the glory of Lord Muruga, but also that of the Chettiars, once a community of traders, merchant-bankers and money-lenders. They hail from the Pudukottai and Ramanathapuram (Muthuramalingam) Districts of Tamil Nadu. They are often referred to as Nattukottai Chettiars to distinguish them from other groups of Chettiars. The term means "people with palatial houses in the countryside." They are also referred to as Nagarathars meaning city dwellers which is what they were until Poompuhar on the east coast of Tamil Nadu went under the sea .

It is not certain when the Chettiars came to Singapore first. However, Tamil literature, especially Silapathikaram of the second century, speak of the many travels that the traders had made to this part of the world prior to the founding of modern Singapore by Stamford Raffles in 1819. In his book entitled, "The Rise of Malaya", P N M Muthu Palaniappa Chettiar writes that the Chettiars could have arrived in Singapore sometime before 1838. However, A. Ramanathan Chettiar who wrote the history of the Nattukkottai Chettiars, says that the Chettiars had come in sail boats to Penang and Singapore in 1824.

The first census in Singapore was held in that year. The records show the presence of 756 Indians. "The Klings were numerous and respectable as traders. The Bengalees few, and only as menials." (Buckley quoting Mr Crawford's letter of Jan 1824- from The first 150 years of Singapore by Donald & Joanna Moore). Some of these respectable traders could have been members of the Chettiar community as word had gone to Penang and India that there were business opportunities in Raffles' trading post Singapore, and that there was a need for merchants and money-lenders to provide the much needed finance for the newly established shop-keepers and businessmen.

The Chettiars with their trading experience were delighted to be of service. They established their trading business across the Singapore River at Market Street. Their business houses were known as kittangis - warehouses. The kittangis were long buildings with no partitions. Each of the money lenders occupied a space with a cabinet and a wooden cashier's box which they kept inside the cabinet after the day's business. The Chettiars in addition to running the money lending business had invested heavily in properties. A lot of warehouses along the Singapore River near River Valley Road had belonged to them. A good number of Chettiars had established themselves in that part of the city that some roads, Arnasalam Chetty Road, Narayanan Chetty Road and Muthu Raman Chetty Road, were named after them.

The Chettiars' contribution to the growing commerce cannot be under-estimated. Credit companies were unknown in those days. In addition to the banks, it was the Chettiars and some members of the Sikh community who provided the money that was needed by the small businessmen.

"...... the British - who provided government, law and order, in essence, security and immigrant groups, the Chinese and to a lesser extend but still notable extend, the Indians - who provided the sinews of commerce and colony building-were complementary, each indispensable to the other. The Chinese and Indians' contribution to the development of Singapore was just as important, just as necessary as that of the British....." ( The First 150 years of Singapore by Donald & Joanna Moore)

Having established several kittangis or business houses at Market Street, the Chettiars carried on a thriving businesses dealing in a variety of goods. Their kittangis were surrounded with spice and other sundry goods merchants with whom they had excellent business relationship. And almost after one hundred years of their arrival in Singapore , they established the Chettiars Chamber of Commerce in 1928, seven years before the Indian Chamber of Commerce was founded. Some elders of the community remember the time when the Chamber issued daily bulletins on the rubber and tin prices in Malaya and Singapore. It contained more information and analysis than the bulletins issued by the Indian Chamber of Commerce. The Chettiars focussed on

# *With Best Compliments from*

永盛建築(私人)有限公司

# ENG SENG CONSTRUCTION (PTE) LTD

24 Senoko Avenue Singapore 758310

Tel : 7545555 (5 Lines) W/Bridge

Tel : 7545471/91, 7525133

Fax : (65) 7546687

rubber because they were among the first planters in Malaya. The proprietors of some of these plantations lived in Singapore.

Some members of the community ventured into the money-lending business as well. In time to come, this business attracted more members of the community and they established their kittangis at Clemenceau Avenue and at Cantonment Road. However, these kittangis, were over period of time, acquired by the government . They also owned large pieces of land at Changi where they had coconut plantations and gardens. The flowers and young coconuts needed for the temple came from there until these lands were acquired by the government.

The kittangis at Market Street, where the Chettiars had concentrated their trading and money-lending business, were acquired for urban renewal in the 1970s and almost immediately the Chettiars found themselves displaced. It is indeed sad that the community which helped Singapore to earn its reputation as a financial centre, did not put up a landmark of its own in the area where it had its business for more than one and a half centuries. Being satisfied with the compensation they received, the Chettiars began to concentrate themselves at the remaining few kittangis at Tank Road. At present members of the 300 odd Chettiar families in Singapore can be found in the civil service, banking and educational institutions and the private sector and in the professions with no more than two scores engaged in money lending business.

The Chettiar community is deeply rooted in the Hindu tradition especially in the Saiva Siddhantha. Members of the community are very devoted to Thandayuthapani or Lord Muruga. But it was not until 35 years after their arrival in Singapore that they constructed a proper temple in honour of Thandayuthapani. C M Turnbull, in her book A History of Singapore 1819-1975 records that the Nattukkottai Chettiars built the Subramaniam Temple (a popular name given to the temple by non Chettiars) in Tank Road in 1859.

However prior to that year, they had installed a Vel (spear), a representation of Lord Muruga, under a tree where they offered their prayers. The Vel was installed below a pipal (arasa maram) tree at the bank of a tank (pond). Fresh water from the hill where the Central Park is now, emerged as a waterfall and filled the tank. The location was ideal for the establishment of a temple. The Chettiars took their bath there before offering their prayers to the Vel. The railway line nearby also provided an excellent form of transport to and from Malaya where they had also established their businesses. The tree had to be uprooted when the government acquired the land for re-doing Tank Road. The site where the Vel was now forms part of the slip road that leads to River Valley Road and Clemenceau Avenue.

Prior to the proper construction of their temple, the Chettiars visited and offered their prayers at the Sivan Temple, now relocated at Geylang East and at Sri Mariamman Temple at South Bridge Road. Their important associations with these two temples are described in their recent consecration ceremony souvenir magazines.

The slab stones found at Thandayuthapani Temple show that the temple was consecrated on 4.4.1859. That would mean that the building works had started one or two years earlier. In fact the community bought the land, where the present temple stands, from the estate of Mr Oxley, the first Surgeon General of Singapore. The temple in its original form was of a simple structure. At the entrance to the temple, two raised platforms similar to that found in Chettiar households in Tamil Nadu were erected. It had an alangara mandapam and an artha mandapam. The alangara mandapam was used to house the decorated deities on special occasions while the artha mandapam was the centre hall leading to the main sanctum. The main sanctum was of course dedicated to Lord Muruga in the form of Thandayuthapani. The Jambu Vinayagar and Iduambar sanctums were constructed on either side of the main sanctum somewhat similar to the present sanctums. A dining hall with a courtyard, called the Kaarthikai Kattu was used for serving food on Karthikai and special occasions such as Thaipusam. Under the chapter, "Many Gods", Roland Braddell, in his book , "the Lights of Singapore", (first edition 1935) describes quite light heartedly on how the Chettiars used to feed the people.

".........and a great reception is held at the temple to which all are welcome, whatever their race or creed, while the devotees are fed in the courtyard from huge cauldrons of rice and curry, which they pile upon fresh banana leaves, and from over-eating of which most them pass into a coma." The Kaarthikai Kattu, erected in 1859 was demolished about 122 years later in 1981 to make way for the Chettiars Wedding Hall. Food is served at the ground level of the wedding hall on days when Kaarthikai is observed

# *With Best Compliments from*

We are a gathered group of specialists from the Indian well known jewellery shops and formed The Little India Goldsmiths to make modern Indian style of jewelleries to the taste of Indians.

Today we recommend for 91.6 solid gold in 22 carat with full guarantee.
We welcome you and your friends at all times.

எல்லோருக்கும் எல்லா வைபவங்களுக்கும் ஏற்ற நவீனரக
தங்க ஆபரணங்களைக் கைதேர்ந்தவர்களைக் கொண்டு.
22 காரட்டில் 91.6 சதவீத தங்கத்தில் உத்தரவாதத்துடன்
செய்து தரும் குட்டி இந்தியாவிலுள்ள

## லிட்டில் இந்தியா கோல்டுஸ்மித்ஸ்க்கு

அனைவரையும் வரவேற்கிறோம்.

## Little India Goldsmiths Pte Ltd

Blk 664, #01-05/06
Buffalo Road, Singapore 219679
Tel : 2931668, 2945000 Fax : 2961562

Business Hours : 10.00 am to 8.00 pm



# *With Best Compliments from*

# ANGKA GROUP OF COMPANIES

**OFFICES IN**

**SINGAPORE • INDIA • AFRICA**

**ANGKA ELECTRONICS PTE LTD • ANGKA INTERNATIONAL PTE LTD**
**ANGKA INVESTMENTS PTE LTD • ANGKA (BURUNDI) PTE LTD**
**VIGRA MUSIC PRODUCTIONS PTE LTD • BAMAC EXPORTS (MADRAS)**

For Enquiries
**Head Office : ANGKA GROUP OF COMPANIES**
Block 108 Hougang Ave 1 #01-1269 Singapore 530108
Tel : (65) 382 8810 Fax : (65) 382 8831

**Manufacturers, Agents & Traders of:**

- Consumer Electronics & Accessories (Branded and Unbranded)
- Office Equipment
- Camera & Accessories (Branded)
- Music Products (CD's, Audio cassettes & Video tapes) & Music Production
- Sports & Fashionwear (Branded)
- Ethyl Vinyl Acetate (EVA) Goods : Brach sandals, Slippers, Caps and Mats.
- Garments

and on other occasions. Though the method of serving the food remains the same, one would be disappointed to see anyone passing into a coma.

It was a practice for the Chettiars to build Murugan temples wherever they settled. This was the case in Burma, Thailand, Vietnam, Malaya, Sri Lanka and Singapore. They had the advice of Sivachariars not to build any Sivan temples as certain rituals had to be observed. As the Brahmin Sivachariars were prohibited from crossing the seas, they advised them to establish Thandayuthapani temples where non Brahmin priests, the Pandarams could be employed. This does not mean that the Brahmin priests had not visited South Esat Asia before. Records show that they had been the priests at the royal courts of Thailand and Cambodia. The Hindu traditional practice of reciting Thiruvempavai during the coronation of Thai kings bear testimony to this. No one is certain when and why the Sivachariars - the Tamil speaking Brahmin priests stopped coming to South East Asia By the third quarter of the 19th century things changed and the Brahmin priests in India, particularly Tamil Nadu became adventurous as the rest of the Indians and decided to seek their fortunes in Malaya and Singapore.

With this development, the Chettiars decided to build a separate sanctum for Lord Siva and His consort. They placed Siva and Goddess Shakthi in that sanctum in 1878. However a consecration ceremony was only held, eight years later, on 26 Jan 1886. Because the Chettiars hailed from the Pandia district of Tamil Nadu, they refer to Lord Siva as Chockalingam and Shakthi as Meenatchi. The present temple has separate sanctums for Lord Siva and His consort Meenatchi Amman.

The old temple underwent some renovation and restoration works on two occasions when the consecration ceremonies were held in 1936 and in 1955. However, the community felt the need to upgrade the temple with modern facilities so as to keep pace with the development of Singapore. The Nagarathars decided in the late seventies, to rebuild the temple on the same site. The temple was to be in the centre with a wedding hall and staff quarters flanking its sides. The food courtyard known as the Karthikai Kattu was replaced by a wedding hall with car parking facilities. The piling work started on 4 Jan 1981 and was completed on 19 Jan 1983. A two storey staff quarters was also built at about the same time. An imposing rajagopuram or the entrance tower was erected. It is 75 feet high and is one of the tallest gopurams in this part of the world. As one enters the temple through the tower gate, the temple opens up into the arthamandapam, the alangara mandapam and an office on the right and the library on the left.

Figures of Hindu deities, especially that of the principal God-form, elaborately sculptured on the pillars draw attention of the visitor. The numerous stained glasses with Lord Ganesha and figures of other deities etched on them, are another attraction which elevate the minds of the devotees. The temple with its open concept adds space to the thousands of devotees who gather at the sanctums during the major festivities of the temple. The whole temple complex was built at a cost of $3.3 million most of which came from the Chettiars themselves. The newly built temple was consecrated on 20 November 1985. The then President Mr C V Devan Nair and the First Lady, Mrs Devan Nair together with MPs of Indian origin and other dignitaries were among the thousands of devotees who turned up at the temple to witness the consecration.

**Important Festivals**

The temple is popular amongst the Hindus in Singapore. It is here that the annual festival Thaipusam is held in much grandeur and religious fervour. The festival dedicated to Lord Muruga is an essential one to those who have taken a vow. This annual festival is observed on the full moon day of the Tamil month Thai (Jan-Feb). The festival is an important one for the Chettiars and the rest of the Hindu community especially the Tamil speaking Hindus. The main event of the day before Thaipusam is the chariot procession in which Sri Thandayuthapani (Muruguan) leaves the temple at Tank Road for a day's visit to His brother the Sithi Vinayagar at Keong Saik Road. The Sithi Vinayagar Temple is also administered by the Chettiars.

Sri Murugan is ceremoniously brought out of the Thandayuthapani Temple on the shoulders of devotees and installed in a large ceremonial silver chariot drawn by a vehicle. But in those days when motorised vehicles were not in vogue and when traffic conditions were not that acute, the large silver car was drawn by two white bulls. On its way, the chariot stops at Sri Mariamman temple at South Bridge Road where Murugan is said to greet the goddess within as She is one manifestation of goddess Parvathi, His mother. After a short poojah, the chariot proceeds to Keong Saik Road temple where Lord Murugan is installed. At about 7.00 pm on the same day Sri

# *With Best Compliments from*

## Mr Ali Abbas Ali

## M/S Kundanmals International Pte Ltd

Block 5, #02-224, Geylang Square

Singapore 380005

Murugan returns to His abode in the chariot, taking a journey down memory lane through Market Street where the Chettiars once had their kittangis or business houses.

In those days, as the chariot meandered its way, the Chettiars from each of their kittangis on both sides of the road, would tie a garland to a rope and swing it towards the chariot. The garland would be quickly snatched by the priests and placed on the God-form.

Some members of the Chettiar community carry kavadis whilst accompanying the chariot on its way back. This event is referred to as Chetty Poosam as only the Chettiars carry the kavadis, a practice which continues up to this day. Upon His arrival, Sri Murugan is carried in a procession, clockwise, into the temple and finally He returns to His sanctum to receive the kavadis that His devotees would bring the following day.

Over at Sri Srinivasa Perumal Temple, the devotees carrying kavadis, having had assembled the day before, make their way to the Chettiars temple. And upon their arrival they offer their kanikkai, and proceed to the open field where they dismantle their kavadis.

Thaipusam, has over the years become an important national festival and a tourist attraction. The Hindu Endowments Board which administers the Sri Srinivasa Perumal Temple, has taken an interest in co-ordinating the festival with the Chettiars. Though the Chettiars by and large are amenable to the changes proposed by the Board and other relevant authorities there is generally a reluctance to impose conditions that would make Lord Muruga's devotees uncomfortable. To them His devotees are as important as Murugan Himself. Some members of the community sometimes feel that any rule that would draw the displeasure of the devotees would also displease Lord Murugan.

They also fondly recall the days when Thaipusam was celebrated for five days. The festivities used to end with the godform being brought to the sea-side near Beach Road, right in front of the Raffles Hotel, where great fireworks were held. Singai Nesan, "a Tamil Journal designed to commemorate the Jubilee of Her Majesty Queen - Empress Victoria", dated Feb 6, 1888 gives a graphic description of the five day festival .

Another important festival that is observed in this temple is the Navarathiri festival, a nine day festival during which prayers and cultural activities are carried out in the evenings. The festival gives an opportunity to all local artistes to show their talents. Though the festival is observed in almost all the temples in Singapore now, Thandayuthpani temple has the honour of having first started it in Singapore during the second world war. The celebration has no place in other Murugan temples established by the Chettiars either in India or elsewhere.

The annual six day Kanda Sashti Viratham is another important festival that is observed at this temple. The monthly Karthikai prayers with lunch being served at the wedding hall also attracts hundreds of devotees.

As has been narrated before, the Nattukottai Chettiars are devout Saivaites dedicated to Lord Siva and Lord Muruga. They pay tribute, through a pooja called the Guru Pooja, to the four principal saints (the Naalvar), Sambandar, Thirunavukkarasar, Sundarar and Manickavasagar who through their literary works had glorified Lord Siva. Their works together with the works of other saints are referred to as the Thirumurais. Poojas are also conducted for Sekkilar and Kovilur Andavar. Sekkilar recorded the works and teachings of all the saints into a volume called the Periyapuranam. Kovilur Andavar is one of the spiritual gurus of the Chettiars. A short history on the life and teachings of each of the Gurus are read during the guru pooja after which lunch is served to all devotees present. The collection of hymns contained in the Thirumurai are sung daily by a specially trained person called the Othuvar who also teaches the Thirumurai hymns to young children. It was the Chettiars, who, introduced the Othuvar as part of the pooja (prayers) system and they also have honour of having first started the Thevaram classes in Singapore.

Sri Thandayuthpani had inspired many Tamil scholars and poets to compose songs in praise of Him. The earliest recorded works is that of Sadasivam Pandithar, a Jaffna Tamil. His poems, the Singai Nagaranthathi and Chitrakavikal published in 1887, give some description of the temple. His works also became the forerunner to Tamil literature in Malaya and Singapore. Notable among other literary works on Lord Thandayuthpani are by R M R Ramanathan and R K M Meyappa Chettiar. Kavignar Kannadhanasan, a Chettiar and a distinguished poet has also composed songs in praise of the principal godform when he visited the temple in the late 70s.

# *With Best Compliments from*

三和柏油私人有限公司

**SAMWOH ASPHALT PREMIX PTE LTD**

三和資源私人有限公司

**SAMWOH RESOURCES PTE LTD**

克力建築私人有限公司

**CREST CONSTRUCTION CO PTE LTD**

**Business Activities**

- Sales, supply and lay of asphalt remix/colour asphalt premix/graded stone
- Supply of granite materials/milled waste
- Road milling services
- Thermoplastic painting
- Transportation of bulk materials

52A Sungei Kadut St 1 Singapore 729356

Tel : 2697288 (ADMIN) 2697709/3 (DESPATCH)

Fax : 3682886

other temples to follow suit. A ten thousand dollars donation was made towards the rehabilitation work of the Hindu Aftercare Officers of SANA . The temple also made significant contributions to the Tan Tock Seng Hospital and to the People's Defense Fund when Singapore became independent. Regular contributions are being made to other organisations in the neighbourhood.

The Thandayuthapani Temple is the oldest Murugan temple and is visited by all Singaporean Hindus. It has, over the years, built up a reputation of being managed well. At the head of the management is a Trustee who is assisted by representatives of the various kittangis. The Trusteeship is rotated annually amongst the representatives of the kittangis. Important decisions affecting the temple and the community is made at a gathering of the entire Chettiar community, called the Nagara Koottam.






# *With*
# *Best Compliments*
# *from*

## Indian Overseas Bank

*GOOD PEOPLE TO GROW WITH*

64 Cecil Street

IOB Building Singapore 049711

Tel : 2251100 Cable : "OVERIND"

Telex : RS 23098 OVERIND Fax : 2244490

# முருகன் பெருமை

**'தமிழண்ணல்' டாக்டர் இராம. பெரியகருப்பன்**
*முன்னைத் தமிழ்த்துறைத் தலைவர் & சிறப்பு நிலைப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்*

முருகன். இயற்கையைக் கண்டு அதில் ஈடுபட்டு வணங்கிய மக்களின் மனத்தில் உருவான கடவுள். சங்க காலத்தில் '**சேயோன்**' எனப்பட்டது. அவனது ஒளிமயமான செந்நிறத் திருமேனியைக் குறித்தே ஆகும்.

**உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு**
**ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி**

என்று திருமுருகாற்றுப்படை தொடங்குகிறது. நீலநிறக் கடலை மயிலாகவும் செக்கச் செவேரென மேலெழும் உதய ஞாயிற்றை முருகனாகவும் காணும் இது கண்கொள்ளாக் காட்சியன்றோ?

திரு.வி.க. அவர்கள் 'முருகு' என்பதற்கு அழகு, இளமை, மணம், கடவுள் தன்மை என நான்கு பொருள் காண்பார். இவை யாவும் முருகன் இயற்கையோடு இரண்டறக் கலந்த கடவுள் என்பதைக் காட்டுகின்றன.

## தமிழ்க்கடவுள்

முருகன் வள்ளியை மணந்த நிகழ்ச்சி, தமிழர்தம் அகத்திணை இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. தினைப்புனம் காத்த வள்ளியை, வேடுவனாய் வந்த முருகன் காதலித்த நிகழ்ச்சி, குறிஞ்சித் திணை சார்ந்த அத்தனை துறைகளுக்கும் முன்னோடியாய் அமைந்தது.

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளாம் சிவபெருமானும் குன்றம் எறிந்த குமரவேளாம் முருகனும் தமிழ்ப்புலவர்கள் கூடிய முதல் தமிழ்ச்சங்கத்திற்குத் தலைமை தாங்கினர் என்பது வரலாறு. நக்கீரர் திருமுருகாற்றுப்படையில், முருகப் பெருமானை அருச்சிக்குமிடத்தில் 'நூலறி புலவ', 'அறிந்தோர் சொன்மலை', 'பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே' என்று ஓதுவன அவ் இறைவனைச் சிறந்த 'புலவன்' எனவும் அறுவுறுத்துகின்றன. 'அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக' என்ற நக்கீரர் கூற்றிலும், மற்றும் சங்கப் பாடல்களிலும் வரும் 'பெரும் பெயர்' என்ற அடைமொழி, சங்க காலத்தில் முருகன் பெற்றிருந்த அளவிலாப் பெரும்புகழைப் பறை சாற்றுகின்றன.

## தமிழர் பண்பாட்டுச் சின்னம்

முருகன் வரலாறும் பெருமையும் அக்கடவுளைத் தமிழர் பண்பாட்டின் சின்னமாக உணர்த்துகின்றன. தமிழர் வாழ்க்கையில் இரண்டற ஊடாடி நின்ற பெருமை முருகனுக்கே உரியதாகும்.. ஓர் இளம்பெண் காதல் நோயால் நலிவுறும்பொழுது, 'இது முருகனால் நேர்ந்ததோ' என்றே முதலில் தாயர் ஐயப்படுவர். அதனால் கட்டுவிச்சியை அழைத்துக் குறிகேட்பர். வேலனை அழைத்து 'வெறியாட்டு' எடுப்பர். வெற்றிபெற்ற மன்னன் பின்னே, 'வள்ளிக் கூத்து' ஆடிச் செல்வது வாகைசூடிய பெருமையைக் காட்டும் கொண்டாட்டமாக இருந்தது.

தமிழர்களுக்கு எதுவேண்டுமாயினும் முருகனிடமே வேண்டுவர். முருகன் எந்த நிலையிலும் பக்கத்தில் வந்துதவுவான் என்பது அவர்கள் நம்பிக்கை. தமிழர்கள் தங்கள் எதிர்காலத்தை அறியவும் நலந்தீங்கைக் கண்டுகொள்ளவும் 'குறி கேட்பது, முருகனை அழைத்தேயாகும். குறமகளாம் கட்டுவிச்சி களம் அமைத்து, முருகனை அழைத்துப் பக்தனிடம் ஆற்றுப்படுத்துவாள். பக்தனைக் கடவுளிடம் ஆற்றுப் படுத்தி - வழிகாட்டி அழைத்துப் போகாமல், இறைவனைப் பக்தனிருக்குமிடத்திற்கு அழைத்து வந்து குறிசொல்லவும் நலந்தீங்கு கூறி வாழவைக்கவும் முயற்சிசெய்வதை மிக நுட்பமாக எண்ணிப் பார்க்கவேண்டும்.

**முருகியம் நிறுத்து முரணினர் உட்க**
**முருகாற்றுப் படுத்த உருகெழு வியன் நகர்**

என்பது திருமுருகாற்றுப்படை. ஆற்றுப்படை என்பது வழிகாட்டுதல். ஆற்றுப் படை மரபே முருகனை ஆற்றுப் படுத்துவதிலிருந்துதான் தோன்றியது. 'முருகு ஆற்றுப்படுத்த' என்பது பழந்தமிழ் இலக்கியத்தில் பயின்றுவரும் தொடர்.

தமிழர் சிறப்புடைய ஆண்மகனின் ஆளுமை களை விளக்கவும் காதல் வாழ்வைச் சிறப்பிக்கவும் பெண்மகளைப் போற்றவும் வெற்றி பெற்ற மன்னனைப் பாராட்டவும் என வாழ்வுநிலைகள் அனைத்திற்கும் முருகனையே எடுத்துக்காட்டாகக் கூறுவது வழக்கம். ஒருசில காண்போம்: வலிமையுடைய அழகான ஆண்மகனைச் சுட்ட 'முருகு உறழ் முன்பின்' (முன்பு-வலிமை) என்பர். சினங்கொண்ட ஆண்மகனை, 'முருகற் சீற்றத்து உரு கெழு குரிசில்' என்பர். நினைத்ததை முடிக்கும் பேராற்றல் பெற்றவனை, 'முருகு ஒத்தியே முன்னியது முடித்தலின்' என்பர்.

காதலனும் காதலியும் உடன்செல்வதை, 'முருகு டன்றியன்ற வள்ளிபோல' என்பர். பகைவரை வென்ற மன்னனை, 'சூரனை அழித்த முருகனைப்போல' என்றே பாராட்டுவர்.

சிலப்பதிகாரத்தில் கோவலனை அறிமுகப் படுத்தும் பொழுது, 'கண்டேத்தும் செவ்வேள்' எனவும் குன்றக் குறவர் கண்ணகியைக் கண்டு வியந்து யாரெனக் கேட்கும் பொழுது 'மலை

# *With Best Compliments from*



## GREAT WIN INTERNATIONAL PTE LTD.

**#10-05 ASIA CHAMBERS, 20 MC CALLUM STREET,**

**SINGAPORE 069046**

**PHONE : 323-1332 FAX : 323-1832 TLX : RS 25200 GWIPL**

வேங்கை நறுநிழலின் வள்ளி போல்வீர்' எனவும் இளங்கோவடிகள் குறிப்பிடுதல் காணலாம். பரவையார் சுந்தரமூர்த்தி நாயனாரை முதன் முதல் கண்டு காதல் கொண்ட பொழுது, 'முன்னே வந்து எதிர்தோன்றும் முருகனோ' என வியப்புற்றகாகவே, சேக்கிழார் பாடுவார்.

## வழித்துணை முருகன்

தங்கள் தரைவழி, கடல்வழிப் பயணங்களில் எல்லாம் வழித்துணை வந்து காப்பவன் முருகனே எனத் தமிழர்கள் நம்பினார்கள். இதன் வழிவந்த பழமொழியே 'செட்டி மக்கள் கப்பலுக்குச் செந்தூரான் துணை' என்பது. இதனால் செட்டிமக்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம், ஊர்கள் அனைத்திலும் முதற்கண் 'தண்டாயுத பாணிக்குக்' கோயில் எழுப்பினர். 'தண்டு' என்பது மிக நீண்ட வேல். பாய்மரக் கப்பலில் செல்வோரும் யானைமீதமர்ந்து போர் செய்வோரும் இத் 'தண்டு ஆயுதம்' எனப்படும் மிகநீண்ட வேலைப் பயன்படுத்தியதாகச் சங்க இலக்கியத்தில் குறிப்புக்கள் கிடைக்கின்றன. அதனால்தான் குன்றங்கண்ட இடமெல்லாம் குடியிருக்கும் குறிஞ்சிக் கடவுளாம் குமரனை, நகரத்தார்கள் தங்கள் வழிப் பயணத்திற்கு – அக்காலப் பாய்மரக் கப்பல் பயணத்திற்குக் காப்பாக வந்த அக்கடவுளை, 'தண்டாயுதபாணி' என்ற பெயரிட்டுக் கிழக்காசிய நாடுகளில் எல்லாம் வழிபடலாயினர்.

கந்தரலங்காரத்தில் அருணகிரிநாதர்,

**விழிக்குத்துணை திருமென்மலர்ப் பாதங்கள்;**
**மெய்ம்மைகுன்றா**
**மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள்; முன்புசெய்த**
**பழிக்குத்துணை அவன்பன்னிரு தோளும்; பயந்ததனி**
**வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே!**

என்று பாடினார். வடித்த கூரிய வேலும் மயிலும் (மயூரம்) துணையாதற்குரிய, தனிச் சிறப்புடையன. 'தண்டாயுதபாணி' எனத் தம் 'பயந்த தனி வழிக்குத்துணை' யான தனிச்சிறப்பை உட்கொண்டு, பெயரிட்டு வழிபட்ட நகரத்தார் நம்பிக்கை வீண் போகவில்லை. இன்றும் இனியும் அலைகடலுக்கு அப்பால் வாழும் நம் நகரத்தார்களுக்குத் தண்டாயுதபாணி 'வழிவழி வந்த துணையாவான்' என்பதுறுதி'.

## நினைத்ததை முடித்துத் தருபவன்

முருகன் தாம் நினைத்ததை முடித்துத் தருபவன் எனத் தமிழர்கள் நம்பினர். 'வேண்டத் தக்கது அறிவோய்நீ, வேண்டமுழுதும் தருவாய்நீ' என்ற மணிவாசகர் வாக்கு, முருகப் பெருமானிடம்தான் பெரிதும் காணப்பட்டது.

கன்னிப் பெண்கள் திருமணம் வேண்டியும், திருமணமானோர் குழந்தை வேண்டியும், நோய் வாய்ப்பட்டோர் அது தீர வேண்டியும், துன்பம்–தடை–இடுக்கண்களால் இடர்ப்பட்டோர் அவ் இடர் களைய வேண்டியும் முருகனை வேண்டுவது பெருவழக்காக இருந்தது.

'காவடி' எடுக்கும் பழக்கம் உலகெங்கும் பரவியது இதனாலேயாம். முறைவேண்டியும் குறைவேண்டியும் மண்ணுலக மக்களிடம் காவடி எடுப்பதை விட ஆண்டவனிடம் செல்வதையே தமிழர்கள் விரும்பினர். காவடி செலுத்துவது என்பது காணிக்கை செலுத்துவதாகும். நவதானியம் முதல் பொன்னும் பொருளும் ஆடும் மாடும் கோழியும் சேவலும் சர்க்கரையும் பழமும் எனத் தாம் விரும்பும் எதையும் தம்மிடமிருக்கும் எப்பொருளையும் முருகனுக்குக் காவடியாய்த் தூக்கிச் சென்று காணிக்கை செலுத்துவது என்பது தமிழர் மரபாயிற்று.

பரிபாடல் முருகனிடம் மக்கள் 'வேண்டுதலைச்' செய்வதை மிக விரித்துப் பேசுகிறது. நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் இதை மிகத் தெளிவாகச் சுட்டுமிடங்கள் இரண்டு உள.

**எய்யா நல்லிசைச் செவ்வேல் சேஎய்**
**சேவடி படரும் செம்மல் உள்ளமொடு**
**நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும்**
**செலவுநீ நயந்தனை யாயின்**

திருப்பரங்குன்றப் பகுதியில் வரும் இது, இன்று பழனிக்கு நடக்கும் பாத யாத்திரையை நினைப்பூட்டுகிறது. குறையாத புகழுடைய சிவந்தவேலைத் தாங்கிய முருகனது பாதங்களை அடையும் செவ்விய உள்ளத்தோடு, நன்மையை விரும்பி இடம்விட்டு இடம் செல்லும் பயணத்தை – யாத்திரையை நீ விரும்பினால் – அதாவது முருகனிருக்குமிடம் நாடி நீ நடந்தால்,

**பரிவுடன்**
**நன்னர் நெஞ்சத்து இன்-நசை வாய்ப்ப**
**இன்னே பெறுதிநீ முன்னிய வினையே!**

உனது நல்ல நெஞ்சத்தில் நீ அடைய விரும்பிய உன் விருப்பம் நிறைவேற, இப்பொழுதே – இன்றே – நீ நினைத்த காரியத்தை அடைவாய்!

நீ எண்ணிய காரியம் இப்பொழுதே நடக்கும். திருமுருகாற்றுப் படையைப் பலகால் ஓதுபவர்கள், வாழ்க்கையில் தாம் நினைத்ததை அடைந்து வெற்றிபெறுவர் என்பதுறுதி. இறுதியில் பழமுதிர்சோலைப் பகுதியிலும்,

**இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்தில்**
**ஒருநீ ஆகத் தோன்ற, விழுமிய**
**பெறலரும் பரிசில் நல்குமதி!**

என்றுதான் நக்கீரர் குறிப்பிடுகின்றார். கடலால் சூழப்பட்ட இந்த உலகில் நீ தனிச் சிறப்புடன் திகழப் பெறுதற்கரிய பரிசில்களைத் தருவான் முருகன் என்று கூறுதல் காண்க.

திருமுருகாற்றுப்படை வெண்பாக்கள் பெருஞ் சிறப்புடையன. அவை ஓதுதற்கு எளியன; தீதுவராது ஓட்டுவன.

**உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்**
**பின்னை ஒருவரையான் பின்செல்லேன் –**
**பன்னிருகைக்**
**கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்**
**வேலப்பா செந்திவாழ்வே!**

*With*

***Best Compliments***

*from*

KEWALRAM CHANRAI GROUP

Kewalram Singapore Limited

Redington Private Limited

Olam International Limited

என முருகனிடம் முழுநம்பிக்கை வைக்க வழிகாட்டுவன.

### மனக்கவலைக்கு மருந்தாகும் முருக வழிபாடு

முருகவழிபாடு மனக்கவலைக்கு மருந்தென்பது மிகவிரித்துப் பேசப்படுகிறது. திருமுருகாற்றுப் படை இறுதி வெண்பா இதைத் தெளிவாகக் கூறக் காண்கிறோம்.

**நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப் படையைத்**
**தற்கோல நாள்தோறும் சாற்றினால் -- முற்கோல**
**<u>மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்</u>**
**<u>தானினைத்த எல்லாம் தரும்.</u>**

நம் மனக்கவலை இறைவழிபாட்டாலேயே குறைகிறது. தீருகிறது. இம்மைப் பயன்களில் முதன்மைப் பயன் இதுவே. மனக்கவலை தீர்ந்தால் ஊக்கம் பிறந்து வாழ்வில் முன்னேற முடிகிறது. திருவள்ளுவரும்

**தனக்குவமை இல்லாதான் தாள்சார்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அறிது**

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.**

என்று கூறுகிறாரன்றோ? முருகன் பெருமைக்கும் புகழுக்கும் இதுவும் ஓர் அடிப்படைக் காரணம் ஆகும்.

**இன்னம் ஒருகால் எனது இடும்பைக் குன்றுக்கும்**
**கொன்னவில்வேர் சூர்தடிந்த கொற்றவா - முன்னம்**
**பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட**
**தனிவேலை வாங்கத் தரும்.**

இடும்பை தீர்த்தருளும் இறைவன் முருகன் என்பது குறிப்பு. நம் மனம்தான் நமது வாழ்வின் அடிப்படை. அந்த மனத்தில் துயரம் புகாமல் காக்கும் கடவுளை முருகன் எனத் தமிழர்கள் நம்பினர். இன்றும் உலகம் எங்கும் தமிழர் வாழும் இடமெல்லாம் முருகன் கோயிலும் மாரியம்மன் கோயிலும் காணலாம். தமிழையே மறந்த தமிழரும் இவ்விரு வழிபாடுகளையும் மறந்திலர். காவடிச் சிந்து பாடினால், பொருள் விளங்காத நிலையிலும் தமிழராகப் பிறந்தவர்கள் காவடி எடுத்து ஆடத் தொடங்கி விடுவதை உலகத் தமிழர்களிடம் காணலாம். காவடிச் சிந்து ஒன்றே போதும், தமிழை மறந்த தமிழர்களை மீண்டும் தமிழ் தெரிந்த தமிழராக்குவதற்கு!

### நகரத்தார்களும் முருகனும்

நகரத்தார்கள் முருகனை வழிபடு தெய்வமாகவே கொண்டு, பலநூறு ஆண்டுகளாக வழிபட்டு வருகின்றனர். பழனிக்கு யாத்திரையாக நடக்கும் வழக்கம் கடந்த நானூறு ஆண்டுகளாக நிலவி வருகிறது. நெற்குப்பை, குன்றக்குடி, மேலைச்சிவபுரி, தேவகோட்டை, காரைக்குடி, கண்டனூர் எனப் பல ஊரவரும் தொன்றுதொட்டுப் பழனிக்குப் பாதயாத்திரை சென்று, காவடி செலுத்தி வருகின்றனர்.

இன்று நகரத்தார்கள் வாய்க்கு வழங்காத பெயர்களையெல்லாம் தங்கள் பிள்ளைகளுக்கு இட்டு வழங்குகின்றனர். ஒருவர் பெயரை வைத்து, முன்பு இவர் நகரத்தார் மரபினர் எனக் கூறிவிடலாம். மெய்யப்பன், நாச்சியப்பன், தேனப்பன் என இவ்வாறு பல பெயர்கள் செட்டிநாட்டிற்கே உரியவை. இன்று பெண்ணுக்கும் ஆணுக்கும் உஷா, சுஜி, ராஜி என்றும் மகேஷ், ரமேஷ், சுரேஷ் என்றும் எல்லாம் பிறமொழிப் பெயர்மயமாகிவிட்டன. முருகனடிமை என வழிபட்டு முன்னேறிய சமூகம் தடம்மாறிப் போவதையே இது காட்டுகிறது. நம் மொய்ப்பண ஏடுகளில் இப்போது குப்பாஞ்செட்டி பழனியப்பன், இராமசாமிசெட்டி பெரியகருப்பன் என்று எழுதி வருகிறோம். இம் மொய்ப்பண ஏடுகள், அவ்வப் பங்காளிகளின் கரை வழி - கால்வழிப் பரம்பரையை வரிசைப்படி காட்டுவன. **இத்தகைய மொய்ப்பண ஏட்டு முறையை உலகில் வேறு எங்கும் காண <u>முடியாது.</u>** பட்டினத்தாரே இம் மொய்ப்பண ஏடு பற்றிக் குறிப்பிடுகிறார்.

அவர் இமயமலைச் சாரலுக்கு, உமையைச் சிவன் மணந்த ஞான்று அத்திரு மணத்திற்குச் சென்றிருந்தாராம்.. அதனால் பட்டினத்தார் இறைவனிடம் "**நின் தமர்பெயர் எழுதிய வரிநெடும் பொத்தகத்தில், என்னையும் எழுத வேண்டுவல்**" என்று வேண்டுகின்றார். பங்காளிகள், உறவினர் பெயர் எழுதி, மொய்ப்பணம் வரவுவைத்தால்தான் இன்னார் இன்னார் கலியாணத்திற்குக் கூடினர் என்ற விவரம் தெரியும். அஃது ஒரு பதிவேடு. பட்டினத்தார் சிவபெருமான் திருமணத்தில் கலந்துகொண்டதைப் பதிவுசெய்ய விரும்புகிறார். தமர் - சுற்றத்தார். தமர் பெயர் எழுதிய வரி நெடும் பொத்தகம் - மொய்ப்பண ஏடு. பொத்தகம் - ஏடு. இதிலிருந்தே புத்தகம் வந்தது. இன்றும் மொய்ப்பண ஏட்டில் வரிசை வரிசையாக - வழிவழியாகப் பெயர்கள் எழுதப்படுவதைக் காணலாம். அதே நினைவில்தான் பட்டினத்தார் 'வரிநெடும் பொத்தகம்' என்று கூறுகிறார். கலியாணத்திற்குக் கூடியும் பெயர் விடுபடலாமா? பிறகு ஒருநாள் பார்க்கும் பொழுது, மொய்ப்பண ஏட்டில் பெயர் பதிந்து வரவு வைத்திருந்தால்தானே கூடியமை உறுதிப்படும். அதனால்தான், தம் பெயர் விடுபடக் கூடாதே என்ற பேரார்வத்தில், பட்டினத்தார் அவ் 'வரி நெடும் பொத்தகத்தில், என்னையும் எழுத வேண்டுவல்' என்று கூறுகிறார். இத்தகைய மொய்ப்பண ஏட்டில் முத்துராமன்செட்டி சுப்பிரமணியன் என்றும் சுப்பிரமணியன் செட்டி முத்துராமன் என்றும் வாரிசு வழிப்படி எழுதிய காலம் போய், இனி ரமேஷ்செட்டி சுரேஷ் என்றும் வினோத் செட்டி கார்த்திக் என்றும் இப்படி எழுதலாமா? எழுதினால் நன்றாயிருக்குமா?

மற்றொன்றும் நினையத்தகும். பேரன் என்பது பெயரன். தந்தை பெயரைத் தன் மகனுக்கு இடுவது மரபு. மூத்த பையனுக்குத் தந்தையின் தந்தையாம் ஐயா பெயரும் அடுத்த பையனுக்குத் தாயின் தந்தையாம் ஐயா பெயரும், இவ்வாறே பெண்மக்களுக்கு அப்பத்தாள், ஆயாள் பெயரும் இடும் மரபுகள் இருந்தன. இதனால் ஒரு குடும்பத்தில்

# *With Best Compliments from*

# GOVITEX ENTERPRISES PTE LTD

No. 1 North Bridge Road
#07-02 High Street Centre
Singapore 179094
Tel : 3360507/3393560
Fax : 3360503

கால்வழி மரபை யூகித்தறிய வாய்ப்பிருந்தது. இப்போது குழம்பிக்கிடப்பது தகுமா?

பெரும்பெயர் முருகன் பெயர்களின் பல்வேறு நாமங்களே நகரத்தார் பிள்ளைகளுக்கு இடப்பட்டன. அடுத்ததாக இராமனுடைய பல்வேறு நாமங்கள் இடப்பட்டன. மூன்றாவதாகக் குலதெய்வப் பெயர்களும் நான்காவதாகப் பிறபெயர்களும் இடம் பெற்றன.

இப்பெயர்களை இடுவதிலும் நகர்த்தார்களிடம் ஒரு தனிமரபைக் காணலாம். தெய்வப் பெயர்களை இடும்போது ஒரு மரியாதையுடன் - பயபக்தியுடன் அவை இடப்படும். வேலன், பழனி, முருகன், முத்தன் என்று நகரத்தார்கள் பெயர் வைப்பதில்லை. வேலப்பன், பழனியப்பன், முருகப்பன், முத்தப்பன் என்று இவ்வாறுதான் மதிப்பும் மரியாதையும் பக்தியும் காட்டிப் பெயர்வைப்பார்கள்! பழனியிலுள்ள அப்பன், முருகனாகிய அப்பன், வேலையுடைய அப்பன் என்று இவை 'இறைவன்' (அப்பன்) என்று முடியுமாறு பெயர்களிடும் மரபு நகரத்தார்களிடம் மட்டுமே சிறப்பாகக் காணப்படும் மரபாகும். முருகவழிபாட்டில் வேரூன்றிய இனம் தடம் மாறாது காக்க எனத் தண்டாயுத பாணியை வேண்டுவோமாக!

## முருகன் அருச்சனை

அருச்சனை என்பது என்ன? 'அருச்சனை பாட்டேயாகும்!' 'ஆத்தி சூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே' என, ஔவையார் 'ஏத்தி ஏத்தித் தொழுவோம்' எனக் கூறியதே அருச்சனைப்பாட்டாகும். தமிழில் செய்யும் அருச்சனையையே, தமிழ்க் கடவுளாகிய முருகன் விரும்புவார். நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் பக்தனாகிய இரவலன் முருகனை விளித்துப் பாடுவதை நமக்குப் பாடிக் காட்டுகிறார்.

**அறுவர் பயந்த ஆறமர் செல்வ!**
**ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை**
**மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!**
**வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!**
**இழையணி சிறப்பிற் பழையோள் குழவி**
**வானோர் வணங்குவில் தானைத் தலைவ!**
**மாலை மார்ப! நூலறி புலவ!**

அருச்சனைப் பாட்டுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும் இது. நாமும் பரிபாடல், திருப்புகழ், காவடிச்சிந்து, கந்தபுராணம் போலும் பலவகை நூல்களிலிருந்து 108 என்றும் 1008 என்றும் முருகன் பெருமை கூறும் கண்ணிகளைப் பாடிவைத்துக்கொண்டு, முருகனை அருச்சித்து வழிபடுவோமாக! முருகனுடைய நூற்றுக்கணக்கான பெயர்கள் அதில் இடம்பெறும். நம் பெண்மக்களும் ஆடவரும் அதைக் கண்டேனும், தங்கள் பிள்ளைகட்குப் புதுமை கருதி இடும்பெயர்களும் தமிழ்ப் பெயர்களாகவே அமைய - அதிலும் முருகன் தொடர்பான பெயர்களாகவே அமைய உணர்வும் அறிவும் பெறுவர்!

## மகார் நோன்பும் பிள்ளையார் நோன்பும்

மகார் நோன்பு என்பது சிறுவர் பூந்தொடை விழாவாகும். மகார் நோன்பைத் திருமலை நாயக்கர் நவராத்திரி விழாவாகப் புதுப்பித்ததால், அதன் பழம் மரபு மறக்கப்பட்டுவிட்டது. ஆயினும் நகரத்தார்கள் 'மகார் நோன்பாக'வே இதைக் கொண்டாடி வருகின்றனர். நகரத்தார்கள் மன்னர் பின்னோர். அதனால் குதிரை ஏற்றம், விற்பயிற்சி, வாள்பயிற்சி பெறுதல் வழக்கமாக இருந்தது. அவர்களுடைய வணிகக் குழுக்கள் நாடு கடந்துபோகும் பொழுது பாதுகாப்புத் தேவைப்பட்டது. பூந்தொடை என்றால், வில்லை வளைத்து அம்பைத் தொடுத்து முருங்கை, வாழைமரங்களில் எய்து பழகுவதாகும். அவை அம்பு போய்த் தைக்கும்படியான மரங்கள். போருக்கு அல்லாமல், விளையாட்டாய் எய்து பழகுவதால் பூந்தொடை எனப்பட்டது. (தொடை-தொடுத்தல், அம்பு தொடுத்தல்). கிலுக்கி என்பதும் ஒருவகை ஆயுதத்தின், விளையாட்டுக்கான வடிவமே. இன்றும் வாழை மரத்தில் போய்க் குத்திவிட்டுத் திரும்புதல் இதன் எச்சசொச்சமாகும். புரட்டாசி மாதம் மகார் நோன்பு - கிலுக்கி எடுப்பு சமயத்தில்தான் நமது கிராமங்களில் சின்னஞ்சிறுமியரைப் பள்ளியில் சேர்க்கும் பழக்கம் இருந்தது. பள்ளிப் பிள்ளைகள் கும்மி, கோலாட்டம் என்று ஆடிப்பாடிப்போய், புதிய பிள்ளையைப் பள்ளிக்குக் கூட்டிவருதல் மிகச் சிறப்பாக நடக்கும். பள்ளிப் பிள்ளைகள் அனைவருக்கும் தொன்னையில் அல்லது அதுபோன்ற ஒன்றில் கடலை, பொரி கடலை, இனிப்புக்களை வைத்து வழங்குவர்.

'பிள்ளையார் நோன்பு' - வீர விளையாட்டுத் தொடர்புடையதே. பிள்ளை - சிவபெருமான் உமையம்மையின் பிள்ளை. அச்சிறப்பு நோக்கி ஆர் - சேர்த்துப் பிள்ளையார் என்று விநாயகரையும் முருகனையும் குறிப்பர். நச்சினார்க்கினியர், திருமுருகாற்றுப்படையில் முருகனைப் 'பிள்ளையார்' என்றும் 'இளைய பிள்ளையார்' என்றும் குறிப்பார். 'விநாயகர் 'மூத்த பிள்ளையார்' எனப்பட்டார். காலப்போக்கில் 'பிள்ளையார்' என்பது வினைதீர்க்கும் விநாயகப் பெருமானையே குறிக்கலாயிற்று. ஆயினும் பிள்ளையார் நோன்பில் இழை எடுத்து, தீயில் காட்டி, எரியும் தீயொடு வாயிலிடும் வீரமரபு இளைய பிள்ளையாராம் முருகனை ஒட்டியும் எழுந்த நோன்பேயாகும். இது நகரத்தார்க்கு மட்டும் உரிய நோன்பு என்பதும் அறிந்ததே.

முருகப் பெருமான் நம் வாழ்விலும் அன்றாட நடைமுறைகளிலும் நாம் 'வழிபடும் தெய்வம்' ஆயினமையும், நமக்கு வழித்துணை ஆயினமையும், நம் மக்கள் பெயர்களில் இடம்பெற்றமையும், மன்னர் பின்னோர் எனப்பட்ட நமது சிறப்புக்கேற்ற சடங்குகள், விழாக்களில் இடம்பெற்றமையும் எண்ணியெண்ணி மகிழத் தக்கனவாகும்.

நாம் தேடிப் போகாமல் நம்மைத் தேடிவரும் தெய்வம் என்பதே, முருகனுக்குரிய பெருமைகளில் எல்லாம் சிறந்த பெருமையாகும். அத்தகைய தெய்வமென்பதாலேதான் நாம் ஆண்டுக்கு ஒரு முறை தைப்பூசத்தன்று முருகனைத் தேடிச் செல்கிறோம். எதற்காக? மற்ற நாளில் அப்'பெரும் பெயர்ச் செல்வன்' நம்மைத் தேடி வரவேண்டும் என்பதற்காகவே!

**தண்டா யுதபாணி தன்துணையை நாமெய்தி**
**எண்டிசையும் வெல்வோம் இனிது!**

WITH CONGRATULATIONS AND COMPLIMENTS

# SCITECH GROUP

SCITECH MEDICAL -PRODUCTS-

SCITECH GENETICS -LIMITED-

*The Scitech Group of Companies is committed to bringing healthcare products and therapeutics to the Asia Pacific Region.*

Scitech Medical Products Pte Ltd
with its head office in Singapore is the marketing arm of the Group. It has branches in Taiwan, Korea, Philippines, Malaysia and Thailand.

- Sure & Easy - Pregnancy & Ovulation Tests
- Bioderma - Skin Care Products
- Testoderm - Testosterone Transdermal System
- Scitropin - Human Growth Hormone

Scitech Genetics Ltd
A biotechnology company with licenses in pharmaceutical products, carries out clinical trials in the region, conducts its own R & D program, and engages in the manufacturing of products.

- Sci-B-Vac - Recombinant hepatitis B vaccine
- Sci-DaPT-Vac - DPT vaccine incorporating an *acellular* pertusis component
- Sci-Feron-A - Recombinant human interferon alpha-2a
- Sci-Lin - Recombinant human insulin

HEAD OFFICE : 14 Science Park Drive, #04-01A, The Maxwell, Singapore 118226
Tel: 65-779 6638, Fax: 65-779 3784, E-mail: scigen@pacific.net.sg

# KANTHAR AVATHARAM

*Professor R. Kanagasuntheram, Singapore*

**What is God?**

God is infinite and cannot therefore be confined to a single concept. Hence the method of the sages and saints is to assign various names and forms. This assignment of various names and forms has its origin at the intellectual and emotional levels of mankind and is depicted in the form of art, architecture, sculpture and rituals. They are therefore a symbolic representation of the abstract in concrete forms so that it becomes understandable even to the ordinary person. Hence the images of Gods worshipped in Saivaism such as Shiva, Ganesha and Subramaniya are only symbolic representations of the infinite which is beyond name, form and words. Hence in Periapuranam sung by Sekilar (சேக்கிழார்), description of Siva commences with the words 'உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்.'

In the intellectual plane, God is referred to as Brahman while at the emotional level he is described as a person. The word Kadavul (கடவுள்-கட-உள்) means that he is everywhere (transcendent) and also residing inside the heart of a person and therefore immanent. It may also be asserted that the worship of the immanent. It may also be asserted that the worship of the immanent can lead to the realisation of the infinite, just like in physics where the subatomic particles are seen to appear and then disappear. Moreover, our sages have said that what is found in the macrocism is also residing inside the heart of person and therefore immanent. It may also be asserted that the worship of the immanent can lead to the realisation of the infinite, just like in physics where the subatomic particles are seen to appear and then disappear. Morever, our sages have said that what is found in the macrocosm is also present in the microcosm.

**The advent of an Avathar**

Kaliyuga is notorious for misdeeds and atrocites and hence Sri Krishna states in the Gita that "whenever Dharma declines and adharma raises its ugly head, I incarnate myself in every yuga to protect the good and destroy the wicked and re-establish Dharma. Similiarly, when the Devas were threatened by the Rakshashas, there was the emergence of Skanda (Murugan) whose glories were sung by sage Vyasa as Skanda Purana.. In Tamil, it was narrated by Kachiappa Sivachariar (கச்சியப்ப சிவாச்சாரியார்) as Kantha Puranam in the 12th century A.D.

**What are Puranas**

Puranas are regarded as the ancient history of God. But puranas, in fact, explain the intricate meanings of the Vedas and Agamas in easily understandable language to the ordinary public. Hence, Vedas may be regarded as the soul and the Puranas as the body of religion. In the Puranas, there is a mixture of fact, fiction and science. Of the Puranas, three are pre-eminent in the Tamil language. These are Periyapuranam, Thiruvilaiyadatpuranam and Kantha Puranam would have all their evil tendencies destroyed as Murugan transformed all the wicked asuras into his devotees and not killed them as is usually understood.

**Worldly Life**

Everyone in the world wants to be happy but happiness eludes them. Only those enlightened souls, having no attachment to the world realize bliss and happiness. Although the soul is inherently blissful, it is usually bound by the three malas (ஆணவம், கன்மம், மாயை) but mainly by the ego (ஆணவம்). The ego hides the soul from enlightenment of God just like the scum floating on the surface of the pond or lake hides the bottom of the pond from view. Moreover as the scum or slime produces a slippery surface, similiarly the soul covered by ego prevents the soul from attaching itself to the lotus feet of God. Thus it is attachment to the materialistic world that prevents the soul from realising its goal.

**Truth and Wealth**

The soul usually believes that the transient world to be real although it observes the transitory nature of the objects outside. One even forgets that இளமையும், செல்வமும், யாக்கையும் நிலையா. So it may be concluded that only that which is

*With*
**Best Compliments**
*from*

# காந்தி உணவகம்

எங்களிடம் சிறந்த அசைவ உணவுகளுடன்
ஸ்பெஷல் காலை மாலை பலகார வகை
உண்டு.

C. பக்கிரிசாமி
31, சந்தர் ரோடு
சிங்கப்பூர் 219679
போன்: 2995343

வருக! வருக!

எல்லா நாட்களிலும் கடை திறந்திருக்கும்
எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஆர்டர்கள்
எடுக்கப்படும்.



*With*
**Best Compliments**
*from*

# முத்தையா உணவகம்

சைவமா - அசைவமா - பலகாரமா -
சாப்பாடா?
சுவையுடனும் சுடச்சுடவும் கிடைக்கும்.
கேழ்வரகு இடியப்பம்
இப்போது கிடைக்கும்

# MUTHIAH RESTAURANT

No. 7 Veerasamy Road
Singapore 207315
Tel : 2911485



*With*
**Best Compliments**
*from*

மீ லீ கோல்டுஸ்மித் & ஜுவல்லரி
பிரைவேட் லிமிடெட்

# Mee Lee Goldsmith & Jewellery Pte. Ltd.

We are specialised in making modern Indian style
of jewelleries to the taste of Indians.
We make your new designs and give guarantee
for 91.6 solid gold in 22 carat.
We welcome you and your friends at all times.

**Opening Hours :**
Monday to Saturday 11.30 am - 8.00 pm
Sunday - Holiday

இந்தியர்களுக்குப் பிடித்த நகைகளைத் கைதேர்ந்தவர்களைக் கொண்டு செய்துதருகிறோம். 22 காரட் 91.6 சதவீத அளவு தங்கத்தில் செய்கிறோம் என உத்தரவாதமளிக்கிறோம். அனைவரையும் வரவேற்கிறோம்.

கடை திறந்திருக்கும் நேரம்:
**திங்கள் - சனி: காலை 11.30 முதல் 8.00 வரை**
**ஞாயிறு விடுமுறை**

152, சிராங்கூன் ரோடு, சிங்கப்பூர் 218043
தொலைபேசி எண்: 2947886

152, Serangoon Road, Singapore 218043 Tel : 2947886



*With*
**Best Compliments**
*from*

**UCO Bank**

For
Best Returns
And
Friendly Service
Bank With
UCO BANK

We offer attractive interest rates on Singapore Dollar and Foreign currency deposits.
Please invest your hard earned savings with us and watch your money grow multifold.
Personalised service with traditional Indian hospitality awaits you at:

| Singapore Main: | Serangoon Branch: | Tanjong Pagar Branch: |
|---|---|---|
| Bharat Building | 26 & 28 | 15, Enggor Street, |
| No. 3, | Dunlop Street | #01-02, |
| Raffles Place | Singapore 209354 | Realty Centre |
| Singapore 048617 | Tel : 2931133 | Singapore 079716 |
| Tel : 5325944 | | Tel : 2205836 |

permanent, unchangeable and undestructible i. e. God is real and He alone can provide us with unalloyed happiness. The battle in Kanthapuranam, like the battle of Kurukshetra, is a battle between truth and untruth or good and evil.

**Kanthar Avatharam**

The Difference between the gnanis and the ignorant is revealed by the following song from Thirumanthiram

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்துள் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்துள் மறைந்தது பார்முதற் பூதம்

For the sake of the destitute souls, God descends from his transcendental aspect to the immanent form in order to liberate the bonded souls. This descent of God (அவதாரம்) takes place whenever evil forces take the upper hand. This happened when Suran (சூரன்) started to torment the Devas and as a result there was the Avatharam of Murugan. The Devas requested Lord Shiva "வேதமும் கடந்து நின்றவிமல ஓர் குமரன் தன்னை, நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க." This implies that the Lord himself must grant them a child who does not have an origin from the womb - பெம்மான் முருகன் பிறவான் இறவான்.

As a result of the prayers of the Devas, the Lord granted them a six faced child having all the six characteristics of Lord Shiva himself emerging as six sparks from his spiritual eye (நெற்றிக்கண்). These sparks eventually reached the Saravana pond (சரவணப் பொய்கை). This origin of Muruga is described beautifully by the following song from Kanthapuranam

அருவமும் உருவமுமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய் பிரமமாய் நின்ற சோதி பிழம்பதோர் மேனியாகிக் கருணை கூர்முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் ஒரு திருமுருகள் வந்தாங்குதித்தனன் கொண்டே உலகமுய்ய.

Thus the Lord passes from his transcendental state of Brahmmam (arupa) to the state of sparks of light (arupa rupa) and finally to the immanent state of Murugan with six faces (rupa). This, in fact, depicts also the evolution of the universe as space first (arupa) then as sound (arupa rupa) and finally as the material universe (rupa). Similiarly, we provide form to the formless God so that He can be easily comprehended by the senses. The form (விக்கிரகம்) seen in the temple is the image which provides the most exalted place for the residence of God. Therefore by temple worship, we can realise the infinite through the finite. This reflects the power of the mind to evolve from the conscious to the state of superconsciousness.

The word Murugu (முருகு) means youth, sweet smell, beauty, godliness, honey and festival. That is why he is called பெரும்பெயர் முருக by Nakkirar. The word முருகு comprising three letters implies protection at three different times i.e. past, present and future and in the three worlds. Because he protects this world, nether world and also provides salvation, his appearance is described as Avatharam. He has come into existence only for the sake of redeeming the souls from the ocean of worldliness. Even the word Avatharam may be inappropriate and that is why the word உதித்தனை (like the rising sun) is used in the verse அருவமும் உருவமாகி. It also means that he is ever existent, as something which was not always present cannot be described as உதித்தனன்.

**Significance of his names**

His names are many and varied. Since the six sparks were carried by the Ganga, he is called Kangeyan. As he was seated initially in the Saravana lake, he is known as Saravanapavan. Since he was brought up by six Karthigai ladies, he takes the name of Karthigeyan. As the six sparks (faces) were joined together, the names செவ்வேள் and சண்முகம் are given to him. He is the remover of ignorance and therefore called Kumaran (குமரன்). As he is seated in the cave of the heart of the devotee, he is known as Kuka (குகா). He is also known as Kanthan (கந்தன்) since Kanthu (கந்து) means a chain (bond) that anchors the elephant. Once one unites his soul with God, then He severs the bonds and frees his devotees from the knots of the senses (elephants). Hence the name Kantha is commonly used as in Kanthapuranam, Kantharanthathy, Kantharalangaram, Kantharanuputhy and Kantharkali venpa. So we must use the name Kantha in our common usage and the jepam of this name will give the devotee liberation from birth and death.

இந்திர ராகிப் பார்மேல் இன்பமுற்றினிது மேவிச்
சிந்தையில் நினைந்து முற்றிச் சிவகதியதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த
செவ்வேல்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித்தோதுவோரே.

Adapted and modified from
கந்தபுராணச் சொற்பொழிவுகள் by
Thangamma Appacutty

***With***

***Best Compliments***

***from***

# Balram Hariram Daryani Insurance Agency

**Baloo H. Daryani** B.Sc.
*(Sole Proprietor)*

**General Insurance**

**C/O INDIA INTERNATIONAL INSURANCE PTE LTD**
64 Cecil Street IOB Building
Singapore 049711
Tel : 2229411
Fax : 2257743/2244174
Telex : RS 34470 NIACO

**Res Add:**
43, Greenleaf Road, Singapore 279343
Tel : 4666507



***With***

***Best Compliments***

***from***

ESTD. 1948

# அணி மணி பொற்சாலை

பிரைவேட் லிமிட்டெட்

பவுன், நவரெத்தின, வெள்ளி நகை வியாபாரம்

# Ani Mani Porchalai Pte Ltd

*Goldsmiths & Silver Jewellers*
*Dealers in Precious Stones*

73 Serangoon Road Singapore 217978
Tel : 2931918 Fax : 2990263



***With***

***Best Compliments***

***from***

# THIRU MURUGAN CLEANING SERVICES

**Rajan**
MANAGER

- Professional services for industrial and commercial buildings
- Private residence
- Gardening and tree cutting
- Rubbish disposal etc

#07-06, OG Building, No 102,
Upper Cross Street Singapore 058360
Tel : 7388652 Pager : 94009123



***With***

***Best Compliments***

***from***

SHG

**SOON HUAT GOLDSMITH PTE LTD**
ஸூன் ஹுவாட் நகைக்கடை
順發金莊私人有限公司

110 & 112 சிராங்கூன் ரோடு, சிங்கப்பூர்-218015
SERANGOON ROAD, SINGAPORE 218015
TEL: 294 0181, 296 5404
FAX: 292 2407

# முருகன் எளியவன்

*டாக்டர் அர. சிங்காரவடிவேலன்*
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்: ஸ்ரீ சேவுகன் - அண்ணாமலை கல்லூரி: தேவகோட்டை

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"

என்பது, தொல்காப்பியம், அகத்திணை இயலில் நிலமாகிய முதற்பொருளை விளக்கும் நூற்பா. நூற்பா என்றால் சூத்திரம்.

தொல்காப்பியர் காலத்தில் தமிழ்பேசும் நல்லுலகம் நான்கு வகையாக அமைந்திருந்தது. மலை, காடு, சமவெளி, கடல் என்பவையே அக்கால நான்கு வகை நிலப்பாகுபாடு ஆகும். நான்கையும் சேர்த்து மண்ணுலகம் அனைத்தையும் ஒரு சேர் 'நானிலம்' என்ற சொல்லால் குறிப்பிட்டனர்.

காடும் காடு சார்ந்த நிலமும் 'முல்லை' எனப்படும். மலையும் மலை சார்ந்த நிலமும் 'குறிஞ்சி' எனப்படும். நீர்வளம் பொருந்திய சமவெளி 'மருதம்' எனப்படும். கடலும் கடல்சார்ந்த நிலமும் 'நெய்தல்' எனப்படும்.

காதலில் அரும்பிக் கடமையாக மலர்ந்து மற்றவர்க்காகக் கனியும் மானிட வாழ்க்கை 'திணை' எனப்பட்டது. உயர்தரமான-மற்றவர்க்கு உதவுதற் காகவே வாழுகிற - மானிட வாழ்வு உயர்ந்ததாகலின் 'உயர்திணை' எனப்பட்டது. தனக்காகவே வாழுகிற - தனக்கு நன்மை குறையுமென்றால் மற்றதன் வாழ்வைச் சாடுகின்ற இயல்பினை உடைய விலங்கு வாழ்க்கை 'அஃறிணை' எனப்பட்டது. விலங்கு வாழ்க்கையையும், 'தாழ்திணை' என்று தாழ்த்தித் தள்ளாமல், 'உயர்வு அல்லாத திணை' என்று பொருள்படும். 'அல்' என்ற அடைமொழி கொடுத்து 'அல்திணை' என்ற சொல்லால் குறிப்பிட்டனர். இது பண்டைத் தமிழரின் எதனையும் வெறுத்து ஒதுக்காத பண்பாட்டுச் சிறப்புக்கும், நாகரிகச் சொல்லாடலுக்கும் எடுத்துக்காட்டு ஆகும்.

மானிட வாழ்வு உள்வாழ்வு, வெளிவாழ்வு என்று இருவகையது. ஒருவன் - ஒருத்திக்கு இடையே நிகழும் அந்தரங்கமான உள்வாழ்வு 'அகம்' அல்லது 'அகத்திணை' எனப்படும். மற்றவருக்கும் புலனாக மன்பதையில் நடைபெறும் வெளிவாழ்வு புறம்-புறத்திணை எனப்படும்.

எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களையும் ஒவ்வோர் அதிகாரத்திற்கும் ஒன்பது ஒன்பது இயல்களையும் கொண்ட தொல்காப்பியம், அகத்திணை இயலில் அகவாழ்வின் இலக்கியமாகப் புனையும் இலக்கணத்தைச் சூத்திர வடிவில் கூறுகிறது.

உள் வாழ்வாகிய அகத்திணையை முதல், கரு, வரி என்று முப்பகுதியாகப் பிரித்தும் இணைத்தும் பண்டைத்தமிழர் புனைந்து இலக்கியமாக்கினர். முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றும் அகத்திணைப் பாடல்களில் அமைந்து, காதற்காட்சிகளைப் படிப்பவர்கட்குச் சுவையாகப் படைத்துக் காட்டும். 'உரிப்பொருள்' என்ற வாழ்க்கையின் ஏதாவதொரு நிகழ்ச்சியை, முதற்பொருளாகிய நிலமென்னும் அரங்கில், கருப்பொருளாகிய மரம், பறவை, விலங்கு, முதலிய கருவிகளின் உதவியால், பண்டையப் புலவர்கள் சொல்லோவியம் தீட்டுவர்.

'உலகவாழ்வு' என்ற சொல்தொடரில் உலகம், வாழ்வு என்ற இருசொற்கள் பிரிப்பின்றி இணைந்து ஒன்றே போலத் தோன்றி உலக வாழ்வின் இயல்பை உணர்த்துகின்றன. வாழ்வு பொதுவாக உயிர்களின், சிறப்பாக மனிதர்களின் நிகழ்ச்சி, பிறப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி, இறப்பு என்று அடுத்தடுத்து நடக்கும் இயக்கத்தின் தொடர்ச்சி. நிகழ்ச்சிகள் நடைபெறும் களம், நிலமாகிய உலகம். அந்நிலத்தை உண்டாக்கியது யார்? 'பெருங்கல்' என்று மனிதன் மலைத்து நின்று பெயர் சூட்டினாலும், மலையைப் படைத்தவன் அவன் அல்லன். குளத்தை வெட்டி நீரைத் தேக்கும் மனிதனால் கடலை உருவாக்க முடியாது; பயிராக்கத் தெரியுமே அன்றி மனிதனால் பயிர் விளையும் நிலத்தை உண்டாக்க முடியாது. மனிதனின் செயற்கைக்கு மலை, காடு, வயல், கடல் என்ற இயற்கைகள் தான் அரங்காக - களமாக அமைகின்றன. படைத்துள்ள இயற்கையைப் பயன்கொள்ளுவதே மானிட வாழ்வு; படைப்பது வேறு எதுவோ ஒன்று; அவனைவிட மேலானது; அனைத்தும் உருவாக அடிப்படையாக முதற்காரணமாக அமைவது; அதனை அவரவர் அறிவு விளக்கத்திற்கேற்பப் பெயர்சூட்டி மக்கள் அழைப்பர். 'இயற்கை' என்பர் சிலர்; கடவுள் என்பவர் பலர். திருவள்ளுவர் உலகைப் படைத்தவன் கடவுள் என்பதை உணர்ந்துகொண்டு அக்கருத்தை உவமை மூலம் எடுத்துக்காட்டி விளக்குகிறார்.

மொழிக்கு அடிப்படைக் காரணம் சொல். சொல்லுக்கு அடிப்படை எழுத்து. எழுத்து என்பது உள்ளே இருந்து எழுகிற ஒலி. பல்வேறு வகையாக எழுப்பப்படுகின்ற ஒலிகட்கு அடிப்படை முதல் ஒலி, 'அ' என்ற அகரம். வாயைத் திறந்தவுடன் வருகின்ற - எழுகின்ற முதல் ஒலியாகிய அகரம்தான் அனைத்து வகை மொழிகட்கும் அடிப்படை.

இத்தகைய கடலனைய கருத்தைக் கடுகனைய குறளில், வள்ளுவர்,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்று உள்ளடக்கி வணக்கம் பாடினார். கடவுள் வாழ்த்துப் பகுதியில் அமைந்த முதற் குறளுக்கு அடிப்படை, கட்டுரையின் முதலில் காட்டிய தொல்காப்பிய நூற்பாவில் தொக்கி நிற்கிறது.

**With**
**Best Compliments**

# MAMELEC TRADING PTE LTD

**SINGAPORE**

***EXPORTERS / IMPORTERS***

***OF***

***AUDIO / VIDEO / HOME APPLIANCES***
***TELEPHONE SYSTEMS / FACSIMILES***
***PROFESSIONAL EQUIPMENT***
***OFFICE AUTOMATION***

***FOR***

***NATIONAL / PANASONIC / TECHNICS***
***SHARP * JVC***

***108, Robinson Road***
***#08-01 GMG Building***
***Singapore 068900***
***Tel : 65 227 9511 Fax : 65 227 5611***

**With**
**Best Compliments**
**from**

# எஸ். ஐ. சாமி

**டிரேடிங் கம்பெனி பிரைவேட் லிமிட்டெட்**

*குறைந்த செலவில் வீடியோக்கள் வழி*
*குடும்பத்துடன் மகிழ்ச்சியாக ஓய்வைக் களிக்க....*
அன்றைய - இன்றைய "திரைப்பட வீடியோ டேப்" கள்
வாடகைக்கும் விற்பனைக்கும் கிடைக்கும்.

*மளிகைப் பொருட்கள்*
சமையலுக்குத் தேவையான அனைத்து வகை
சுத்தம் செய்யப்பட்ட மளிகைப் பொருட்களும்
சாப்பாட்டுப் பொருட்களும் சகாயமான
விலையில் கிடைக்கும்.

*டெலிவரி சேவை*
மளிகை சாமான்கள் ஆர்டர்களை
மகிழ்வோடு உடனுக்குடன் வீடுகளுக்கு
டெலிவரி செய்கிறோம்.

போன்: **2997770**

**S.I. SAMY TRADING CO. PTE. LTD.**
**57/59 Kerbau Road, Singapore 219181.**
**Tel : 2972021 Fax : 2992622**

**With**
**Best Compliments**
**from**

ANDHRA curry
(Classic Indian Restaurant)

41 & 43, Kerbau Road,
Near Teka Market,
Singapore 219170
Telephone : 2933935

**With**
**Best Compliments**
**from**

Gokulam
கோகுலம்
Jewels & Crafts

*Specialist in Silver & Gold-Plated Jewelleries and Custom made Prayer Altars*

#01-02 Little India Arcade,
48 Serangoon Road,
Singapore 0821
Tel: 2989184 • Fax: 2945354

51 Kerbau Road,
Singapore 0821
Tel: 2986275

**முல்லை** நிலமாம் காடுறை உலகத்தின் காரணமும் காரியமும் மாயோன்; மாயாவதாரன்; கருமை நிறமுடைய திருமால்.

**குறிஞ்சி** நிலமாம் மைவரை உலகத்தின் காரணகர்த்தா சேயோன் ஆகிய முருகன். அவனைப் பற்றிய விரிவும், விளக்கமும் கட்டுரையின் பிற்பகுதியாகும்.

**மருதம்** தீம்புனல் உலகமாம் மருதநிலத்தின் காப்புக் கடவுளும், தோற்ற முதலும் வேந்தன் இந்திரன்.

**நெய்தல்** பெருமணல் வெளியாம் நெய்தல் நிலத்தின் தோற்ற முதலும் இயக்கமும் வருணன்; (மழை). கடலின் காரியமும் காரணமும் மழைதானே?

மேய என்ற தொல்காப்பிய நூற்பாவின் சொல்லுக்கு ஆழ்ந்த - விரிந்த பொருள் உண்டு. மேய என்ற சொல்லுக்கு 'மேவிய' -காரணமாகக் கொண்டு விரிந்த, 'பொருந்திய' என்று பல பொருள் உண்டு. 'வித்து' ஒன்றுக்குள் முறையே மரம், பூ, காய், கனி என்ற பலவும் அடங்கியிருப்பது போல, கடவுள் என்ற ஒன்றுக்குள் அணு முதல் ஆகாயம் வரை உள்ள அனைத்தும் அடங்கியவை என்ற கருத்தை 'மேய' என்ற சொல்லும் அடக்கியுள்ளது. முதல் திருக்குறளின் 'முதற்றே உலகு' என்ற தொடரில் உள்ள 'முதற்று' என்ற சொல்லும் 'மேய' என்ற சொல் போன்றே பொருள் விரிவினை உடையது. கடவுள் ஒருவன்தான். அவன் விரிவுதான் உலகம். அவனை நிலத்திற்கேற்பப் பெயரும், வடிவும் கற்பித்து வணங்குவது நானில மக்களின் வாழ்க்கைமுறை என்பது தொல்காப்பிய நூற்பாவின் உட்பொருள்:

இனி, கட்டுரை மகுடமாகிய முருகனைப் பற்றி விளக்குவோம்.

தொல்காப்பியம் முருகனைச் 'சேயோன்' என்று குறிப்பிடுகிறது. முதற்பொருளாகிய நிலத்தை, அதற்கும் முதலாகிய தெய்வத்தை முன்னிறுத்திப் பேசிய தொல்காப்பியர், கருப்பொருட்கள் இவை என எண்ணும்போது, 'தெய்வம்' -என்பதை முதலில் வைத்து எண்ணுகிறார். தனுகரண புவன போகங்களாகிய உலகத்தை வாழ்வின் முதற்பொருளாகப் படைத்தவன் கடவுள் என்பதும், அவனை நிலந்தோறும் பொருத்தி வழிபாடு நிகழ்த்தும் போது பல்வேறு பெயரும் வடிவும் கற்பித்து வணங்கினர் என்பதும், அவ்வாறு வழங்கிய கடவுளின் நிலப்பெயர்களே மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்பதும் அறியவேண்டிய உண்மைகளாம்.

'சேயோன்', என்ற சொல்லுக்கு ''சேய் - பிள்ளை வடிவானவன்'' என்றும் 'சிவந்தவன்' என்றும் இருபொருள் உண்டு. ஆடல் பாடல்களாலும், விழாவெடுத்தும் கொண்டாடத்தக்க கடவுள் முருகன். குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் தானே? சேயோனாம் முருகன் குழந்தையாகவும் இருக்கிறான். தெய்வமாகவும் காக்கிறான். 'சேயோன்' என்ற சொல்லுக்கு எட்டாத தொலைவில் இருப்பவன்' என்ற பொருளும் உண்டு. அவனை மலைமேலே ஏற்றிக் 'குன்று தோறாடும் குமரன்' என்று தமிழர் கொண்டாடி வருகின்றனர். எட்டாத உயரத்தில் சேயோனாக விளங்குகின்றது 'முருகன்' - மட்டில்லாப் பக்தியினால் மனமுருகிப் பாடும் போதும், மலையேறியும் காவடி தூக்கியும் ஆடும்போதும் மனத்தில் செம்மையாகவும், மடியில் குழந்தையாகவும், மலையிறங்கி வந்து மனமிரங்கி அருள்காட்டுகிறான்.

முருகன் இளையவன் மட்டும் அல்லன். அழகானவன், அழகுடனே மணமும் அமைந்தவன். அவனிடம் அமைந்த கட்டழகும் கடிமணமும் மொட்டிளமையும் பருவச் சுழற்சியால் என்றும் இருப்பவை.

காலம் கடந்த தெய்வமாம் முருகனை இடம், பொருள், ஏவல்களுக்கேற்பப் பல்வேறு பெயர்களிட்டுக் காலம் தோறும் அடியவர்கள் வழிபட்டனர்.

வைகறை விடியல், மனத்தைக் கழுவும் மணம் தவழ் அமைதி, நீலப்பெருங்கடல், அருகே பெரியமலை, மலை முழுவதும் இலை செறிந்த மரங்கள். இலைகளின் பச்சை கடல்மீதும், அலைகளின் நீலம் மலைமீதும் மாறிமாறிப் படிந்து, பசுமையா, நீலமா என்று இனம் காண முடியா நிறம். அகல்வான விளிம்பில் ஆயிரம் கைகளை மெல்ல மெல்ல விரித்துச் செஞ்சுடர் வட்டம் ஒன்று, கடலில் கால் ஊன்றி மலையைக் கைகளால் பற்றி மேலே மேலே ஏறுகிறது. உதயஞாயிற்றின் ஒளி வெள்ளம் உலகையே மயக்குகிறது. இமை கொட்டாது காணும் மனித மனம், கழிபேருவகையில் ஆழ்கிறது. கன்னித்தமிழில் சுருதி கூட்டிக் கவிதை பாடுகிறது.

> "உலகம் உவப்ப வலனேர்பு திரிதகு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
> ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி"

என்பது செவ்வேளாம் முருகனைத் தித்திக்கப் பாடும் திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் பிடிக்கும் ஒளிப்படம்.

குமரகுருபரர் தீட்டும் குமரப்படம் வருமாறு:

முருகன், உலகம் குளிர மனித மனங்களில் இறங்கும் சந்திரனின் அமுத கிரணம். உருகும் அடியார்களின் உணர்வு வெளிப்பாடு, கலை, நிறை, அறிவு ஆகியவற்றின் முதிர்ச்சி; அடியவர் முழுகும் கருணை வெள்ளம்; அண்டங்கள் முடியும் ஆகாயப் பரவெளியில் நிலவும் அருள்நிலையம்; அறிவுக்கு எட்டாத பரம்பொருள்; மலைமகளின் மகன்.

காலந்தோறும் முருகன் எடுத்த வடிவங்களும் காட்டிய அருள் செயல்களும் பல. இடைக்காலப் புலவர் ஒருவர் காட்டும் முருக வடிவம் வருமாறு:

தீமை களைந்து நன்மை காக்க முருகன் கையில் வேலை ஏந்தினான்; அடியார் அழைத்த உடனே அருகில் எழுந்துவர மயிலை ஊர்தியாகக் கொண்டான்; அடியவர் உள்ளத்தில் தென்றலாய்த் தவழ்ந்தான்; தீயவர்க்குத் தீயாய்ச் சுட்டான்; கற்பு மணத்துக்கும், காதல் மணத்துக்கும் வழிகாட்டியாகத் தெய்வானையையும் வள்ளியையும் திருமணம் புரிந்தான். முருகன் செயல்களைக் கதையாக்கியும் புராணமாக்கியும் காலந்தோறும் புலவர் பெருமக்கள் அவன் புகழ் பரப்பினர். அனைத்து நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கிய இடைக்காலப் புலவர் பாடல் வருமாறு:

> 'வடிவேல் முருகன் வையாபுரி நாடன் வள்ளியங்கன்
> அடியவர்க்கு எளியவன் சூரசம் மாரன் ஆறுமுகவன்
> படியால் அளந்த திருமால் மருகன் பழநிக் கந்தன்
> குடிகாணும் நாங்கள் அவர்காணும் எங்கள்
> குலதெய்வமே!

இப்பாட்டில் 'அடியார்க்கு எளியவன்' என்ற தொடர் குறிப்பிடத்தக்கது. அவன் பரவும் மெய்யடியார்கட்கு எளியவன். அவனை நினையாது தீமை புரியும் சூரனைப் போன்ற கொடியவர்கட்குத் கொலைசெய்யக் கூடியவன் என்பது பாடலின் இரண்டாமடியின் நேர்பொருள். அதன் உட்பொருள்

***With***
***Best Compliments***
***from***

# KUHONG ENTERPRISE PTE LTD

122, Middle Road #05-03
Midlink Plaza
Singapore 188973
Tel : 3398993 / 3378663
Fax : 65-3366174

*Major Exporter and Importer of Sea Foods*

***With***
***Best Compliments***
***from***

# விக்னேஷ் ஜுவல்லர்ஸ் (பி) லிமிடெட்

# Viknesh Jewellers Pte Ltd

Block 668, Chander Road
#01-20 Singapore 210668

உத்திரவாதத்துடன் கூடிய பவுன். வைர.
எனாமல் நகைகள் கிடைக்கும்.
ஆர்டரின் பெயரில் குறித்த காலத்தில் கைதேர்ந்த
ஆட்களைக் கொண்டு அழகிய பவுன். வைர
நகைகள் செய்து தரப்படும்.

***With***
***Best Compliments***
***from***

# K.N.S. PTE LTD

#23-03 Peninsula Plaza
111 North Bridge Road
Singapore 179098
Tel : 3373506
Fax : 3392895

***With***
***Best Compliments***
***from***

ALHAMBRA

Barcelona MOTORS

SEAT VOLKSWAGEN GROUP

Welcome the new SEAT ALHAMBRA. Welcome its level of design, equipment and technology that only few can reach. Welcome its complete concept of active and passive safety. But most of all, welcome its comfort. Because sharing the journey with those you love in unsurpassed comfort will make you feel just like at home. Welcome the new SEAT ALHAMBRA. Welcome for a test drive. The SEAT ALHAMBRA, a class of its own.

**9 Leng Kee Road Tel : 272 3333**
**Dealer : Vig Auto, 77 Upper East Coast Road, #01-03**
**Tel : 442 4211**

ஆழமானது. அடியார் என்பதற்கு (1) அடிமை பூண்டொழுகும் பக்தர்; (2) பிறரை அடியாத - வன்முறையில் இறங்காத அன்பர்; (3) அவன் திருவடியை அடைந்தவர்; (4) பாடல்புனையும் கவிஞர் என்று பல பொருள் சொல்லலாம்.

மனித மனம் எதன் நினைவாக இருக்கிறதோ அதன் தன்மைபெறும். முருகன் திருவடிகளையே நினைப்பவர் அடியார். அவர்கட்குத் தண்ணீர்போல, காற்றுப்போல, பெற்றோர்போல மிக எளியவன் முருகன்.

மேலும் முருகனே மட்டுமின்றி அவன் வடிவ அடையாளமான வேல், மயில், மலை - எதனை இடையறாது நினைத்து வழிபட்டாலும் அவன் எளியவனாக மனம் இரங்கி வந்து வரம்கொடுக்கும் கலியுக வரதனுமாவான். அதனை உள்ளடக்கி எளியேன் பாடிய வெண்பா ஒன்றினைச் சொல்லிக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

காலைத் தொழுதாலும் கந்தா உன் கையிருக்கும்
வேலைத் தொழுதாலும் வேல்கழுவிக் கால்தழுவும்
பாலைத் தொழுதாலும் பாய்ந்துவரும் உன்மயிலின்
வாலைத் தொழுதாலும் வாழ்வு.

கலியுக வரதனாம் கந்தனை எவ்வகையிலாவது நினைத்தால் வறுமை தொலையும், வளம் நிறையும், இன்முறை ஓங்கும், வன்முறை நீங்கும்.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

# முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்

## குமரகுருபர சுவாமிகள்

*ஒழியாத புவனத்து உயிர்க்குயிர தாய்நிற்பது*
*ஒருதெய்வம் உண்டுஎன, எடுத்து*
*உரையால் உணர்த்துவதை ஒழிய, எவர் எவர்கட்கும்*
*ஊன்கண் உளக்கண்ணதாம்*
*விழியாக முன்நின்று, தண்ணளி சுரந்து, அவர்கள்*
*வேண்டிய வரம் கொடுப்பான்;*
*மெய்கண்ட தெய்வம் இத்தெய்வம் அல்லாற் புவியில்*
*வேறுஇல்லை என்று உணர்தியால்;*
*பொழியாத புயல்தங்கு புவனமும், திசைமுகப்*
*புத்தேள் பெரும்புவனமும்,*
*பொன்னுலகும் மண்ணுலகும் எவ்வுலக வேண்டினும்,*
*பொருள்அன்று இவற்கு; மற்றை*
*அழியாத வீடும், தரக்கடவன்; இவனுடன்*
*அம்புலீ ஆட வாவே!*
*அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்,*
*அம்புலீ ஆட வாவே?"*

*With*
*Best Compliments*
*from*

**ARVEE International Pte. Ltd.**

10 Anson Road #27-09
International Plaza, Singapore 079903
Tel : (65) 227-8131
Fax : (65) 225-9348
Telex : RS 25551 ARVEE
E-mail : arv01@singnet.com.sg

*With*
*Best Compliments*
*from*

விமானப் பயணிகளுக்குச் சிறப்பு மலிவு கட்டணம்
குழுப் பயணிகளுக்குத் தனி சலுகை கட்டணம்
எல்லா ஏர்லைன்சுகளுக்கும் அதிகாரபூர்வமான

ஏஜெண்ட்:

**கணேஷ் டிராவல் சர்வீஸ்**

**Ganesh Travel Service**

#03-39 The Arcade No 11 Collyer Quay
Singapore 049317
Tel : 2213744/45 Fax : 2213746

*With*
*Best Compliments*
*from*

SAGARCO

**THE SAGAR TRADING CO**

IMPORTER & EXPORTER, COMMISSION AGENT AND WHOLESALES OF AGRICULTURAL PRODUCTS:

Spices: Black & White Pepper, Coffee, Tea, Cloves, Long Pepper, Cummin Seeds, Desi. Coconut, Cocoa Powder, Betelnut Whole & Split, Cassia Starani Seeds, Nutmegs, Turmeric Finger, Cardemon Seeds, Ginger Whole & etc.

Pulses: Urid Whole & Dhall, Moong Dhall, Chana Dhall, Massor Dhall, Chick Peas, Tover Dhall & etc.

General: Gum Copal, Gum Benjamin, Damar Batu, Gambier, Latex, Rubber, Computer Accessories & etc.

**No 10 Anson Road International Plaza #17-09**
**Singapore 079903**
**Tel : (O) (65) 2248816 (R) (65) 3457484**
**Fax : (65) 2242706 Telex : RS 23206 BAKUL**

*With*
*Best Compliments*
*from*

**HI-REL (SINGAPORE) PTE. LTD.**

55, Lorong L, Telok Kurau, #03-61
Bright Centre, Singapore 425500
Tel : 4406725
Telefax : 3449177

*Exporters of ferrous & non-ferrous steel scraps, primary metals, chemicals & commodities*

# தைப்பூசம்

டாகடர் சுப. திண்ணப்பன், நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், சிங்கப்பூர்

சிங்கப்பூரில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் என்று அழைக்கப்பெறும் நகரத்தார்களால் கட்டப் பெற்று நிர்வகிக்கப்பட்டு வரும் தண்டாயுதபாணி திருக்கோயிலில் நடைபெறும் விழாக்களில் தலைசிறந்த விழா தைப்பூச நன்னாள் ஆகும். இத்தைப் பூச நன்னாளை ஒரு காலத்தில் சிங்கப்பூர் அரசாங்கம் பொது விடுமுறை நாள்களில் ஒன்றாக அறிவித்திருந்ததும் இதன் சிறப்பை வலியுறுத்தும். தை மாதத்தில் பூச நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் ஒன்றாகக் கூடும் நாளே தைப்பூச நன்னாளாகும். இதன் சிறப்புகள் பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## குருவாய் வரும் முருகன்

தேவர்களின் குருவாக விளங்கும் வியாழ பகவானாகிய பிரகஸ்பதி அறிவின் தேவதை என்று இந்துக்கள் நம்புவதால் பூச நட்சத்திரத்தை வணங்கினால் பிரகஸ்பதியின் அருள் கிடைக்கும் என்பர். தேவர்க்கு மட்டுமின்றி மூவர்க்கும் யாவர்க்கும் மூல முதற்குருவாக - வாலறிவின் சொரூபமாக விளங்குபவன் முருகப் பெருமான். எனவேதான் "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்றழைக்கிறார் அருணகிரியார். ஆறுபடை வீடுகளுள் ஒன்றாகும் திருவேரகப் பதியாகிய சுவாமி மலையில் முருகப் பெருமான் குருவாய் இருந்து பிரணவப் பொருளைச் சிவபெருமானுக்கு உரைத்த செய்தியும் சிந்திக்கத் தக்க ஒன்று. அங்கு வியாழக்கிழமை அவனுக்குகந்த நாளாகக் கருதப்படுவதையும் காண்க. எனவே முருகப் பெருமானைத் தைப்பூச நன்னாளில் வழிபடுவதால் பிறவி ஊனம் நீங்கி ஞானம் பெறலாம். அதனால் பேரின்பம் கிடைக்கும். இம்மையில் கல்விச் செல்வம் பெற்றுச் சிறப்புடன் விளங்கவும் முடியும்.

## விடிஞாயிறு

தேவர்களுக்கு ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் ஈறாக இராக் காலம் என்றும், தை மாதம் முதல் ஆனி மாதம் ஈறாகப் பகற் காலம் என்றும், தை மாதம் ஒளியைத் தரக்கூடிய எழு ஞாயிறு தோன்றும் உதய காலம் என்றும் ஆன்றோர் கூறுவர். மார்கழி மாதத்தில் திருப்பள்ளி எழுச்சி நடைபெறுவதும் காண்க. முருகப் பெருமான் விண்ணோர்க்கு மட்டுமின்றி மண்ணோர்க்கும் விடிஞாயிறு எனத் திகழ்பவன். "உலகம் உவப்ப வலனேர்பு திரி திரு, பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டா அங்கு, ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவி ரொளி" என்று நக்கீரர் அவனை எழு ஞாயிறாகக் கண்டு இன்புறுகிறார். முருகப் பெருமானுக்கு இவ் வகையிலும் தைப்பூச நன்னாள் உகந்ததாகிறது.

## நடராசர்

தில்லைவாழ் அந்தணர்க்கும், மனுமகன் இரணிய வர்மனுக்கும், பதஞ்சலி வியாக்ரபாதர்க்கும், தில்லை நடராசப் பெருமான் தன் எல்லையில் தனிப் பெரும் பேரின்பக் கூத்தாகிய திருநடனக் காட்சியைக் காட்டிய நாளும் தைப்பூச நன்னாளே ஆகும். தில்லையில் - சிதம்பரத்தில் - அத்திருவிழா இன்றும் கொண்டாடப்படுகிறது.

## ஞானசம்பந்தர்

ஞானசம்பந்தப் பெருமான் மயிலாப்பூரில் வணிகர் மகளாகிய பூம்பாவையை எழுப்பப் பாடிய பதிகத்தில் "மைப் பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக், கைப்பூச நீற்றால் கபாலீச்சுரம் அமர்ந்தான். நெய்ப் பூசும் ஒண் புழுக்கல் நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்" என்று தைப்பூச விழாவைச் சிறப்பித்துப் பாடுகின்றார். ஆண்டவனுக்கும் அடியார்களுக்கும் அமுதுசெய்விப்பதை நோக்கமாகக் கொண்டது தைப்பூச விழா என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

## தைப்பூச நீராட்டு

தைந்நீராடல் என்ற நோன்பு பற்றிச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. தைப்பூச நன்னாளில் புண்ணிய நதிகளில் நீராடினால் மிகுந்த புண்ணியம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இந்துக்களிடம் நிலவுகிறது. தஞ்சை மாவட்டத்தில் திருவிடை மருதூரில் தைப்பூச விழாவன்று கோயிலிலுள்ள சித்த தீர்த்தத்தில் முழுகுவதும், வில்வமரத்தைச் சுற்றி வருவதும், சுவாமி தரிசனம் செய்வதும் பாவங்களைப் போக்கும் என்பர். நெல்லை மாவட்டத்தில் தாமிரவர்ணி நதியில் தைப்பூச நாளன்று தீர்த்தமாடுவதும் நலம்தரும் என்று நம்புகின்றனர்.

"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொழுபவர்க்கு வார்த்தை சொலச் சற்குரு வாய்க்கும்" என்பது தாயுமானார் வாக்கு. திருவிடை மருதூரில் நடைபெறும் தைப்பூசத் தீர்த்த விழாவைப் பற்றித் திருமுறைகளில் ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் குறிப்பிடுகின்றனர். "பூசம் புகுந்து ஆடிப் பொலிந்து அழகாய, ஈசன் உறைகின்ற இடை மருது ஈதோ" என்றும், "வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர்

*With*
*Compliments*
*and*
*Best Wishes*
*from*

WELL WISHER

*With*
*Best Compliments*
*from*

INDIA (INCORPORATED IN SINGAPORE) INTERNATIONAL INSURANCE PTE LTD

64, Cecil Street
IOB Building (4th - 6th Floors) Singapore 049711
Tel : 223 8122 / 222 9411
Fax : 224 4174 / 225 7743
Tlx : RS 27235 INDINS

We provide all classes of Personal Insurance including Motor, Personal Accident and Hospitalization, Industrial Insurance including Engineering Classes, Workmen's Compensation, Liability, Insurance of Ships (Marine Hull), Transit of Goods (Marine Cargo) and Property Insurance against Fire, Theft, Burglary, etc.

**With India International you rest assured.**

வந்து ஈண்டிப் பொருந்திய தைப்பூசம் ஆழ" என்றும் ஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடல்களில் திருவிடை மருதூர்த் தைப்பூசம் பற்றிப் பேசுகிறார்.

திருநாவுக்கரசர்

**"பாசம் ஒன்று இலராய்ப் பத்தர்கள்**
**வாச நாண்மலர் கொண்டு அடி வைகலும்**
**ஈசன் எம்பெருமான் இடை மருதினில்**
**பூச நாம் புகுதும் புனல் ஆடவே"**

என்று திருவிடை மருதூர்த் தைப் பூச நீராடல் பற்றிக் குறிப்பிடுகிறார்.

### சேந்தனார்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் முருகப் பெருமானைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்ற பாடல்கள் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படையும், சேந்தனார் பாடிய திருவிடைக்கழி பற்றிய திருவிசைப் பாவும் ஆகும். முன்னது பதினோராம் திருமுறையிலும், பின்னது ஒன்பதாம் திருமுறையிலும் உள்ளன. நகரத்தார் மரபினராகிய பட்டினத்தடிகளின் கணக்கராக விளங்கியவர் சேந்தனார். தில்லைப் பெருமானிடத்து எல்லையில்லா அன்புடையவர். தில்லைத் திருவிழாவில் ஓடாது தடைப்பட்டு நின்ற தேரினைத் திருப்பல்லாண்டு பாடி ஓடும்படி செய்தார். பின்னர் திருவிடைக்கழி என்னும் தலத்தை அடைந்து அங்கு குரா நிழற்கீழ் அமர்ந்த முருகப் பெருமானை வணங்கி வழிபட்டுத் திருமடம் அமைத்து வாழ்ந்து வந்தார்; திருவிடைக்கழி முருகப் பெருமான் மீது திருவிசைப்பா பாடியுள்ளார். இத்தகைய அடியார் இறைவனடி சேர்ந்த நாளும் தைப்பூச நன்னாளே ஆகும். எனவே தைப்பூச நன்னாள் திருவிடைக்கழியில் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது.

### இராமலிங்கர்

வடலூர் வள்ளற் பெருமான் ஆகிய இராமலிங்க அடிகளார் தனிப்பெருங் கருணையாளனாகிய இறைவனுக்கு அருட் பெருஞ்சோதி வழிபாட்டைத் தொடங்கி வைத்ததும் தைப்பூச நன்னாளில்தான். எனவேதான் இந்நன்னாளில் வடலூரில் பலமுறை சோதி தரிசனம் காட்டப்படுகின்றது. முருகப் பெருமான் சோதி வடிவாக விளங்குகின்றான் என்பதை, "அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய், பிரமமாய் நின்ற சோதிப் பிழம்போர் மேனியாகக் கருணைகூர் முகங்களாறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டே, ஒரு திருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய" என்று கந்தபுராணம் பேசுகிறது.

### ஞானியார்

சைவவானில் ஒரு தனி ஞாயிறாகவும், தமிழுக்கு ஒரு தண்மதியாகவும் விளங்கிய அவர்கள் பரிபூரணமடைந்த நாளும் தைப்பூச நன்னாளே (1942) ஆகும். இவர் திருப்பாதிரிப் புலியூரில் மடம் ஒன்று நிறுவித் தமிழுக்கும் சைவத்திற்கும் தனிப் பெருந் தொண்டாற்றினார். இவரது குருபூசை இன்று தைப்பூச நன்னாளில் அங்கு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

### நகரத்தாரும் தைப்பூசமும்

இவ்வாறு பல்லாற்றானும் சிறப்புடைய தைப்பூச நன்னாளில் முருகப் பெருமானை - பழநி ஆண்டவனை வழிபட்டு அவன் அடியார்களையும் அவனாகவே கண்டு வணங்கி, அவர்களுக்கு அமுது படைத்து, மகேசுவர பூசை செய்து வணங்குவது மண்ணினிற் பிறந்தார் பெறும் பெரும் பயனாகும்.

இதனை நன்கு உணர்ந்த நகரத்தார்கள் தமிழகத்தில் பழநியில் இருக்கும் முருகப் பெருமானைத் தங்கள் குல தெய்வமாகக் கொண்டு வழிபடத் தலைப்பட்டனர். முருகப் பெருமானைச் 'செட்டி' என்றே சுந்தரர் தம் தேவாரப் பாடலில் குறிப்பிடுகிறார். மன்னர் பின்னோராகச் சங்க காலம் முதற்கொண்டு மதிப்பிடப் பெற்ற நகரத்தார்கள் திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் இயல்பினர். இவர்களின் மரபினராகிய கோவலன், கண்ணகி பெற்றோர் பெருங்கல வணிகராகத் திகழ்ந்ததைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. இத்தகைய செட்டியார் கப்பலுக்குச் செந்தூரான் துணை என்பது ஒரு பழமொழிக் கருத்தாகும். இவர்கள் பூம்புகாரில் செய்த நவமணி வியாபாரத்தை விடுத்துப் பாண்டி நாட்டில் அரிசி, உப்பு முதலிய நவதானியங்களை விற்கத் தொடங்கிய காலத்தில் (சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்) முதல் முதலில் வணிகம் குறித்து வெளியூர் சென்ற இடம் பழநிமலை. இவ்வணிகத்தில் நல்ல பலன் எய்தியதால் பின்னர் வணிக நிமித்தம் எங்குச் சென்றாலும் பழநி ஆண்டவனை, தண்டாயுதபாணியை, வைத்து வழிபடத் தலைப்பட்டனர்.

பழநியில் நடைபெறும் தைப்பூசத்திற்குச் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே நெற்குப்பை, கண்டனூர், காரைக்குடி, தேவகோட்டை முதலிய இடங்களிலிருந்து பாதயாத்திரை மேற்கொண்ட செய்தியை - காப்புகளுடன் சென்ற செய்தியை கி.பி.1788ல் தோன்றிய செப்பேட்டுப் பட்டயங்கள் நன்கு விளக்கம் தருகின்றன. பழநியில் தைப்பூசத்தை ஒட்டிப் பழநி ஆண்டவருக்குக் காவடி செலுத்தி வழிபாடு செய்வதும், அடியார்களுக்கு அன்னதானம் செய்வதும் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு இப்பாத யாத்திரை அமைகிறது. இது இன்றும் சிறப்பாக நடக்கின்றது. இவ்வாறே செட்டிநாட்டின் நடுநாயகமாக அமையும், குன்னக்குடியில் முருகப் பெருமானுக்கு அவரவர் ஊரிலிருந்து தைப்பூசத்துக் காக நகரத்தார்கள் காவடிகள் எடுத்து வந்து ஆண்டவனை வழிபட்டு அன்னதானம் செய்து அகமகிழ்கின்றனர்.

*With*
***Best Compliments***
***from***

# TUBEMAL EXPORTS PTE LTD

*• Importers & Exporters •*

56 Kampong Java Road
Singapore 228863
Tel : 2992767, 2948134 Fax : 2992712, 2950159
Mobile Tel : 7277514

*With*
***Best Compliments***
***from***

# A DEVOTEE

நகரத்தார்களின் முயற்சியினால் பினாங்கு, சிங்கப்பூர், இரங்கூன் (மியன்மார்), செய்கோன் முதலிய கடல்கடந்த பகுதிகளிலும் தைப்பூசம் பெரு விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. இவ்விழா விற்காக இவர்கள் வெள்ளிரதம் செய்து வைத்து அதில் முருகப் பெருமானுக்குப் பொன்னாலும் மணியினாலும் அலங்காரம் செய்வித்து ஊர்வலம் சிறப்புடன் செய்கின்றனர். இரதத்துடன் காவடிகள் எடுத்து வந்து அவர்கள் வழிபடுகின்றனர்.

### *சிங்கப்பூரில் தைப்பூசச் சிறப்பு*

சிங்கப்பூரில் தைப்பூசத் திருவிழா மூன்று நாட்கள் நடைபெறும். முதல்நாள் புனர்பூசத்தன்று காலையில் சுவாமி வெள்ளி ரதத்தில் தேங் ரோடு தண்டாயுதபாணி கோயிலிலிருந்து கியோங் சேக் ரோட்டிலுள்ள நகரத்தார் பிள்ளையார் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்து மாலை அங்கிருந்து சர்க்கரைக் காவடிகளுடன் நகரத்தார்கள் தொழில் செய்த மார்க்கட் வீதி வழியாக இரவு 10 மணிக்கு தேங் ரோடு திரும்பும். இன்று நகரத்தார்கள் மட்டும் காவடி எடுத்து வருவதால் இந்நாளைச் 'செட்டி பூசம்' என்று அழைப்பர். பூசத்தன்று அதிகாலையிலிருந்து சிங்கப்பூர்த் தமிழ்ப் பெருமக்கள் சிராங்கூன் ரோடு பெருமாள் கோவிலிலிருந்து பால் குடம், சர்க்கரைக் காவடி, வேல் காவடி, ரதக் காவடி ஆகியவற்றை ஆண்களும் பெண்களுமாக பல்லாயிரக்கணக்கில் எடுத்து வந்து தேங் ரோடு முருகனுக்கு அபிடேகம் செய்து வழிபடுவர். பலர் அலகு குத்தி வருவர். சீனர்களும் காவடி, அலகுடன் வழிபட்டு வரும் காட்சியையும் காணலாம். பூசத்தன்று பகல் 11 மணிமுதல் மகேசுவர பூசை எனப்படும் அன்னதானம் சிறப்பாக நடைபெறும். இரவு 7 மணி வரை இது நடக்கும். பல்லாயிரக்கணக்கான பேர்க்கு உணவு வழங்கப்படும். இரவு சுவாமி கொலு வீற்றிருக்கும்போது அதிபர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள், தூதுவர்கள் எல்லாரும் வந்து வழிபடுவர். வருபவர்களுக்கு மாலை மரியாதை செலுத்தி நகரத்தார்கள் சிறப்புச் செய்வர். மூன்றாம் நாள் (தைப்பூசத்தின் மறுநாள்) ஏலம், நகரத்தார் மகமைக் கூட்டம், புதிய மேலாண்மைக் குழுத்தலைவர், பணி ஏற்பு முதலியன நடைபெறும். மூன்று நாட்களுக்கு முருகப் பெருமான் தண்டாயுதபாணித் திருக் கோலத்தில் காட்சி அளிப்பார். ஆனால் பல ஆண்டுகளுக்கு, இரண்டாவது உலகப்போருக்கு முன்பு முருகப் பெருமானை அலங்கரித்து வெள்ளிக் கேடயத்தில் வைத்து ஆர்ச்சர்டு ரோடு வழியாகக் கடற்கரைக்குக் கொண்டு வந்து இரவு வாண வேடிக்கை நடத்தித் திரும்பும் வழக்கம் இருந்ததாகவும் 1937ல் நிறுத்தப் பட்டதாகவும் மலேயாவின் தோற்றம் என்னும் நூல் ஆசிரியர் பெ.நா.மு. முத்துப்பழநியப்ப செட்டியார் குறிப்பிடுகிறார். தைப்பூசக் காவடிகள் பற்றி ரோலண்ட் பிராடெல் என்பவரும் தம் நூலில் குறிப்பிடுகிறார்.

### காவடித் தத்துவம்

தைப்பூசத்தில் எடுக்கப்படும் காவடி என்பதன் பொருளைக் காண்போம். கா + அடி என அமையும் இந்தச் சொல்லுக்கு இருபக்கமும் தொங்கும் தண்டு என்று பொருள் கூறலாம். "காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும் என் நோனா உடம்பின் அகத்து" (1163) என்னும் குறளுக்குப் பொருள் கூறும்போது காவா என்பது தாவரத் தண்டு எனப் பொருள் காண்கின்றனர். உரையாசிரியர்கள் மலைமேல் இருக்கும் முருகப் பெருமானுக்குரிய அபிடேகப் பொருள்களை எளிதாகத் தூக்கிச் செல்லும் பொருட்டுப் பக்தர்கள் தம் தோளில் தண்டு ஒன்றினை வைத்து இருபக்கமும் பொருள்களை செம்பு, குடம், கூடை முதலியவற்றில் வைத்துக் காவடியாகத் தூக்கிச் சென்றனர். இதுவே காவடியின் தோற்றம். காவடியில் இருபக்கமும் இருக்கும் அபிடேகப் பொருள்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமே ஒழியக் காவடியின் அளவு, ஒப்பனை ஆகயவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல் கூடாது. அபிடேகப் பொருள்களைக் காவடியில் தூக்கிச் செல்லும் அன்பர்கள் முருக நாமத்தைச் சொல்லிக் கொண்டும், அவன் புகழைப் பாடிக் கொண்டும் பக்தியுடன் சென்று காணிக்கை செலுத்துதல் வேண்டும். மனித மனமாகிய தண்டில் ஒருபக்கம் நான் என்னும் செருக்கும் மறுபக்கம் எனது என்னும் பற்றும் இருக்கக் காண்கிறோம். அவற்றைத் தூக்கிச் சென்று இறைவனிடத்தில் செலுத்தி அவன் திருத்தாளை அடைந்து பக்தி நீரால் - அன்பு நீரால் அவனைக் குளிப்பாட்டிப் பேரின்பமாகிய வீடுபேற்றினை அடைவதுதான் காவடியின் உட்பொருள் என்பதை அன்பர்கள் உணர்ந்து பயன்பெற வேண்டும்.

### முடிவுரை

தைப்பூச விழாவில் ஆண்டவன் வழிபாடு, அடியார் வழிபாடு ஆகிய இரண்டும் இடம் பெற்றிருக்கக் காணலாம். இவ்விழாவினைத் தமிழகத்தில் மட்டுமன்றித் தென்கிழக்காசிய நாடுகளிலும் பரவச் செய்த நகரத்தார் மரபு போற்றத் தக்க மரபாகும். மொரிசீயஸ் தீவிலும் தமிழர்கள் தைப்பூச விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடு கின்றனர். தைப்பூச விழாவினைத் தமிழகத்திலும் தரணியின் ஏனைய பகுதிகளிலும் பரப்பிய தனவணிகர் குலம் தழைக்கவும் தமிழ்ப் பண்பாடு மேலோங்கவும் இறைவனை வணங்குவோமாக.

* **1888–ஆம் ஆண்டில் கொண்டாடப்பெற்ற தைப்பூச விழா பற்றி சிங்கை நேசன் என்னும் பத்திரிகையில் அவ்வாண்டு பிப்ரவரி 6–ல் வெளியிடப் பெற்ற செய்தியை இம்மலரில் காணலாம்.**

# *With Best Compliments from*

the bedeil group of companies

## BEDEIL TRADING CO PTE LTD
(IMPORTERS, EXPORTERS & MANUFACTURERS)

105 Cecil Street, #03-02 The Octagon Singapore 069534
Tel : 3242950 (7 Lines) Fax : (65) 3245052
Telex : RS 51274 BEDEIL Cable : BEDEIL SINGAPORE

THAILAND FACTORY

**A.S. MAHARAJA CO. LTD.**
2091 Sukhumvit Soi 115, Samuthprakan
Tel : (662) 3846229, 7577314
Fax : (662) 3845220

U.A.E. DUBAI

**BEDEIL GENERAL TRADING L.L.C.**
P.O. Box 52018 Dubai. UAE
Tel : 243131
Fax : 235655 Telex : 46786 BEDEIL

# ஆறுபடைவீடுகள்

*ச. தெய்வநாயகம்*

பேரழகனாகவும் பெருவீரனாகவும் பெருங் கருணை வள்ளலாகவும் திருமுருகாற்றுப் படையில் நமக்குக் காட்டப் பெறுகின்ற முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் படைவீடுகள் ஆறு ஆகும். திருமுருகாற்றுப்படை என்பது முருகப் பெருமானின் அருளைப் பெற்ற ஒருவர் அந்த அருளைப் பெற விழையும் மற்றொருவரை முருகன்பால் ஆற்றுப் படுத்துவதாக அமைந்த, பக்தியுணர்ச்சி நிரம்பிய நூல். இந்நூலில் முருகன் உறையும் இடங்களாக ஆறு இடங்களைக் குறிப்பிடுகிறார் நக்கீரர். அவர் அப்படிப் பாடியது முதல் ஆறுபடைவீடுகள் என ஒரு வழக்காறு ஏற்பட்டு வழங்கிவருகின்றது. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகிய ஆறும் அவர் குறிப்பிட்ட ஆறுபடைவீடுகள் ஆகும்.

**"ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்தும்**
**அன்பினுடன்**
**கூறுமவர் சிந்தை குடிகொண்டோனே"**

என்று குமரகுருபரமுனிவரும்

**"ஆறு திருப்பதியில் வளர் பெருமாளே"**

என்று அருணகிரிநாதரும் ஆறுபடைவீடுகளில் எழுந்தருளியிருக்கும் முருகனைப் போற்றுகின்றனர்.

படைவீடு என்பது அரசன் ஒருவன், தன் பகைவரோடு போர்புரியும் பொருட்டுப் படைகளுடன் தங்கியிருக்கும் இடமாகும். முருகப் பெருமான் சூரபன்மனுடன் போர்புரியச் செல்லும் போது தங்கியிருந்த படைவீடு திருச்செந்தூர் ஆகும். இவ்வாறே, பழமையும் சிறப்பும் மிக்க ஏனைய தலங்களையும் படைவீடு என்று சொல்லும் வழக்காறு ஏற்பட்டது. முருகப் பெருமான் தேவர்களின் படைத் தலைவன் ஆதலின் அவன் எழுந்தருளியிருக்கும் இடங்களைப் படைவீடுகள் என்று சொல்வது பொருந்தும்.

**திருப்பரங்குன்றம்**

முதல் படைவீடாகிய திருப்பரங்குன்றம் பழமையும் சிறப்பும் வாய்ந்ததாகும். மதுரை, பாண்டியநாட்டின் தலைநகராக இருந்த கடைச் சங்க காலத்திலேயே பரங்குன்றம் புகழ்பெற்று விளங்கியதால் திருமுருகாற்றுப்படை, பரிபாடல், மதுரைக் காஞ்சி, கலித்தொகை முதலிய சங்க நூல்களில் அது சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

திருமுருகாற்றுப் படையின் முதற் பகுதியை நக்கீரர் "மாடமலி மறுகில் கூடல் குடவயின்" என்று தொடங்கித் திருப்பரங்குன்றத்தைச் சிறப்பிக்கின்றார். 'மாடங்கள் நிறைந்த வீதிகளையுடைய மதுரையின் மேற்கே திருப்பரங்குன்றம் அமைந்துள்ளது. வண்டுகள் பகல் நேரத்தில் தாமரை மலர்களிலுள்ள தேனை உண்டு மகிழ்ந்திருக்கும் வேளையில் மாலை வந்துவிட்டதால் தாமரை மலர்கள், இதழ்களாகிய கதவை அடைத்துவிடுகின்றன. பின்னர்க் காலை வரவே தாமரை இதழ்க் கதவு நெகிழ்கிறது அவ்வண்டுகள் துயில் எழுகின்றன. இவ்வாறு, வண்டுகள் இன்பமாக வாழும் இடமாகவும் வயலும் பொய்கையும சூழ்ந்த வளமான இடமாகவும் திருப்பரங்குன்றம் விளங்குகின்றது என நக்கீரர் மிகவும் அழகுபட விரித்துரைக்கின்றார்.

மதுரையிலிருந்து மக்கள் திரள் திரளாகத் திருப்பபரங்குன்றத்துக்கு வந்து வழிபடும் முறைகளைப் பரிபாடல் விவரிக்கின்றது.

திருப்பரங்குன்றத்தில் தான் முருகப் பெருமான் இந்திரன் மகளாகிய தேவயானையைத் திருமணம் செய்துகொண்டருளினார். இத்திருமணத்தின் சிறப்பைக் குமரகுருபரர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில்

**"மழைக்கொந்தளக் கலபமயில் இளஞ்சாயல் நெடு**
**மதர் அரிக் கெண்டையுண்கண்**
**மாள்கன்றை அமருலகு வாழப் பிறந்திடும்**
**மடப்பிடியை வானவில்லை"**

முருகப் பெருமான் மணந்துகொண்டதாகப் பாடி மகிழ்கிறார்.

இத்திருமணக் காட்சியைக் கந்தபுராணம் 'தன் பக்தர்களுக்கு இந்த உலக வாழ்க்கையையும் மேலுலக வாழ்க்கையையும் கொடுக்கிற கருணை நாயகனான முருகன், இங்கே இந்திரன் கொடுக்கத் தேவயானையை ஏற்றான்' என்று கூறிச் சிறப்பிக்கிறது.

**"மருத்துவன் மாமறை மந்திர நீரால்**
**ஒருத்தி பொருட்டினில் ஒண்புனல் உய்ப்பக்**
**கரத்திடை ஏற்றனனால் கழல் சேர்ந்தார்க்**
**கருத்திகொள் முத்தியும் ஆக்கமும் ஈவோன்"**

என்பது கச்சியப்ப சிவாச்சாரியரின் திருவாக்கு.

திருப்பரங்குன்றம் தேவாரப்பாடல்கள் பெற்ற தலம். திருஞானசம்பந்தர் 'இந்தக் குன்றை நித்தம் தொழுதால் வினைகளெல்லாம் தீர்ந்துவிடும்' எனப் பாடியுள்ளார்.

**"மைத்தகு மேனி வாளரக்கன்றன் மகுடங்கள்**
**பத்தினதிண்தோள் இருபதுஞ் செற்றான்**
**பரங்குன்றைச்**
**சித்தமதொன்றிச் செய்கழலுன்னிச் சிவனென்று**
**நித்தலுமேத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே"**

என்பது அவர்தம் திருவாக்கு.

திருப்பரங்குன்றத்திலுள்ள மலை சிவலிங்க வடிவிலே தோற்றமளிப்பதால் 'பரன் குன்றம்' என வழங்கப்பட்டுப் பின்னர்ப் பரங்குன்றம் ஆயிற்று. 'திரு' என்னும் அடைமொழி பெற்றுத் திருப்




Komala Vilas was established
in 1947 and serves one of the finest
South Indian Vegetarian Cuisines in Singapore.
Originating in Tanjavur a district
in South India the cuisine is best
served on a fresh banana leaf.
Come taste our authentic
South Indian Vegetarian meals, Bombay Thalis,
Chappattis, Pooris and Bhattura.
In addition South Indian Snacks like
Dosai, Idli, Vadai, Samosa ...
We also have a selection of both
North & South Indian Sweets.

komala vilas
VEGETARIAN RESTAURANT
ESTD 1947

76-78 Serangoon Road Singapore 217981
Tel : 293 6980

Komala's
RESTAURANT

3-9 Upper Dickson Road Singapore 207463
Tel : 2943547

Chettiars Temple Society Singapore

பரங்குன்றம் என வழங்கப்பெற்று வருகின்றது.

*திருச்சீரலைவாய்*

திருச்சீரலைவாய் என்னும் இரண்டாவது படைவீடே இப்போது திருச்செந்தூர் என்று வழங்கப் பெறுகின்றது. இந்தத் தலத்துக் கோயிலின் மதில் புறத்தே கடல் அலைகள் வந்து மோதுதலை இன்றும் நாம் காணலாம். ஆதலின், இப்பதிக்கு 'அலைவாய்' என்னும் பெயர் பண்டைக் காலத்திலேயே ஏற்படுவதாயிற்று. 'திரு' என்னும் அடைமொழி பெற்றுத் திருச்சீரலைவாய் ஆயிற்று. செந்தி என்னும் பெயர் செந்தில் ஆகிச் செந்தூராயிற்று. முருகப் பெருமான், சூரபன்மனோடு போராடிப்பெற்ற வெற்றியைக் கொண்டாடிய இடமாதலின், அதற்கு 'ஜயந்தி' என்ற பெயர் வந்தது என்றும் அதுவே தமிழில் 'செந்தி' என மருவி வழங்கப் பெறுகின்றது என்றும் கூறப்படுகிறது.

நக்கீரர் தமது திருமுருகாற்றுப் படையில் திருச்சீரலைவாயை,

**"உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்**
**அலைவாய்"**

என்று புகழ்கின்றார். சீர் என்பது இன்னதென்றுணர்த் துதற்கு, "உலகம் புகழ்ந்த சீர்" எனக் குறிப்பிட்டார். அச்சீரை "ஓங்குசீர் - உயர்சீர் - விழுச்சீர்" என மூன்று அடைமொழிகள் கொடுத்து நக்கீரர் சிறப்பிக்கின்றார்.

புறநானூற்றுப் பாடல் ஒன்றில் மருதன் இளநாகனார் என்னும் புலவர் செந்திலை,

**"வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில்**
**நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை"**

என்று சிறப்பிக்கின்றார். இப்பாடலில், செந்திலைக் கடலலைகள் வந்து மோதும் தலம் என்னும் பொருளில் ''வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில்'' என்றும் அங்கு முருகப் பெருமான் எழுந்தருளி, நிலைபெற்று இருத்தலை "நெடுவேள் நிலை இய" என்றும் கடற்கரையானது காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து, விரிந்து பரந்து விளங்குதலைக் "காமர் வியன்துறை" என்றும் புலவர் குறிப்பிட்டிருக்கும் திறம் உணர்ந்து மகிழ்தற்குரியது.

இவ்வாறே, பரணர் என்னும் புலவர் அகநானூற்றுப் பாடல் ஒன்றில் திருச்சீரலைவாயின் சிறப்பை,

**"திருமணி விளக்கின் அலைவாய்ச்**
**செருமிகு சே எயொடு உற்றசூளே."**

என்று குறித்துள்ளார். 'கடல் அலைகள் கரையிற் கொண்டுவந்து சேர்க்கின்ற அழகிய மணிகள், விளக்குகள் போல ஒளிவிடுகின்றன. அத்தகைய அலைவாயாகிய செந்திலில் சூரபன்மனோடு நிகழ்த்திய போர்த்திறத்தில் வல்லசேயாகிய முருகன் எழுந்தருளியிருக்கின்றான்' என்பது இப்பாடற் பகுதியின் பொருளாகும்.

செந்திலை இன்னும் பல சான்றோரும் தத்தம் நூல்களில் சிறப்பித்துப் பாடியிருக்கின்றனர்.

**"சீர்கெழு செந்தில்"**
என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளும்

**"சீரலைவாய் வருசேயைப் போற்றுவோம்"**
என்று கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியரும்

**"செந்தமிழ் மணக்கும் திருச்செந்தில்'**

என்று திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழில் பகழிக்கூத்தரும்

**"சீரலைவாய்த் தெள்ளுதிரை கொழிக்கும் செந்தில்"**

என்று குமரகுருபரரும் செந்திலைப் போற்றி மகிழ்ந்திருக்கின்றனர். குமரகுருபரர் ஊமைத் தன்மை நீங்கப்பெற அருளியவனன்றோ செந்தில் முருகன்!

*திருவாவினன்குடி*

முருகப் பெருமான் படைவீடு கொண்ட தலங்களில் மூன்றாவதாகத் திகழ்கின்றது, திரு வாவினன்குடி. இப்போது பழனி என்று வழங்கப் பெறும் தலம் இது. மலையடிவாரத்திலுள்ள கோயிலைத் திருவாவினன்குடி என்று இப்போது வழங்குகிறார்கள்.

பழனியை அகநானூற்றுப் பாடல் ஒன்றில், மாமூலனார் என்னும் புலவர்,

**"முழவுறள் திணிதோள் நெடுவேள் ஆவி**
**பொன்னுடை நெடுநகர்ப் பொதினி"**

என்று சிறப்பிக்கின்றார்.

**"படிக்கின்றிலை பழநித் திருநாமம்"**

என்கின்றார், அருணகிரிநாதர். மேலும், அஞ்ஞான இருளகற்றும் மெய்ஞ்ஞான பண்டிதனைப் ''பழனாபுரிவாழ் பெருமாளே'' என்று அவர் போற்றுகிறார்.

பழனி என்பது பழம்நீ என்பதன் திரிபு என்று பழனித் தலபுராணம் கூறுகிறது. நாரதர் அளித்த பழத்தைத் தனக்குச் சிவபெருமான் வழங்காமையால் சினங்கொண்ட செவ்வேள், இம்மலையில் வந்து நின்றான். சிவபெருமானும் அம்மையும் இங்கே வந்து, "பழம் நீ ஆக இருக்கையில் உனக்கு வேறு பழம் எதற்கு?' என்று கூறி அன்பு பாராட்டினர். அவர்கள் கூறிய "பழம் நீ" என்ற தொடரே இதற்குப் பெயராகிப் பின்பு நீ என்பது குறுகிப் பழநி என்று ஆயிற்று" என்று தலபுராணம் கூறுகிறது.

பழனி மலையின் பழம்பெயர் பொதினி ஆகும். முதலில் பொதினி என்று இருந்ததுதான் காலப் போக்கில் பழனி என மருவி மக்களிடையே வழங்கியது என்னும் கருத்து ஏற்கத்தக்கதே. "ஆவி, பொன்னுடை நெடுநகர்ப் பொதினி'' என்பது அகநானூறு.

மயிலுக்குப் போர்வை அருளிய பேகனின் முழுப்பெயர் வையாவிக்கோப்பெரும் பேகன் என்பதாகும். அவன் ஆவியர் குலத்தில் பிறந்தவன். அக்குலத்தினர் தமக்குத் தலைநகராகக் கொண்ட

With Compliments

# The World's Fastest Flowing Performance Engine Oil.




"Exceeds the new API SJ performance"

Only Castrol Formula SLX can claim that. It's the world's only synthetic engine oil with a rating of 0W/30. Not only does it improve the fuel economy of your car, it also gives your engine maximum protection. Castrol Formula SLX. Don't ever settle for anything slower.

**To find out more, call 661 1831 or 661 1827.**

THE LEADING LUBRICANT SPECIALIST

Castrol


TIRUPPARANKUNDRAM


TIRUCHENDUR





*With*
*Best Compliments*
*from*

KCS

**KAY ESS ENTERPRISES PTE. LTD.**

315 Outram Road
#02-03
Tan Boon Liat Building
Singapore 169074
Tel : 2250409 Fax : 2256012

ஊரே ஆவிநன்குடி. காலப்போக்கில் ஆவிநன்குடி என்பதே ஆவினன்குடி ஆயிற்று.

திருவாவினன் குடியில் எழுந்தருளியிருக்கும் முருகனைத் தரிசித்து நன்மை பெறத் தேவர்களும் வருவதாகத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

**திருவேரகம்**

நான்காவது படைவீடாகிய திருவேரகம் இப்போது சுவாமிமலை என்று வழங்கப்பெறும் தலம். அது வயல்களாலும் சோலைகளாலும் சூழப்பட்ட இடத்தில் அமைந்து இயற்கை வனப்புடன் பொலிவுறுகின்றது. இத்திருத்தலத்தின் பெயர் 'ஏரகம்' என்று பழங்காலத்தில் வழங்கப்பட்டுள்ளது என்பதை

**"சீர்கெழுசெந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்"**

என்னும் சிலப்பதிகார அடிகளால் அறியலாகும். ஏரகம், 'திரு' என்னும் அடைமொழி பெற்றுத் திருவேரகம் என்றும் வழங்கப்பெற்றிருக்கிறது.

அந்தணர்கள் அதிகாலையில் எழுந்து நீராடி, தலைமேல் கரங்களைக் குவித்து, நாத்தழும்பேற முருகன் புகழைப் பாடிக்கொண்டே வந்து முருகப் பெருமானின் திருவடியில் மலரிட்டு, திருவேரகத்தில் வணங்குவதாகவும் அப்பூசையை விருப்பமுடன் ஏற்றுக்கொண்டு முருகப்பெருமான் வீற்றிருப்ப தாகவும் திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் அழகுறப் பாடியுள்ளார்.

**"ஒன்பது கொண்ட மூன்று புரி நுண்ஞாண்
புலராக்காழகம் உலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர், தற்புகழ்ந்து
ஆறு எழுத்து அடக்கிய அருமறைக்கேள்வி
நா இயல் மருங்கில் நவிலப் பாடி
விரை உறு நறுமலர் ஏந்தி - பெரிது உவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்"**

என்பது நக்கீரனார்தம் திருவாக்கு.

முருகப் பெருமான் குருநாதராக இருந்து சிவபெருமானுக்குப் பிரணவப்பொருளை உபதேசித்த இடம் சுவாமிமலை. சுவாமிமலையின் சிறப்புக்கு, இதுவே முக்கியக் காரணமாகும். முருகப் பெருமான், சிவபெருமானுக்குக் குருமூர்த்தியாக இருந்து உபதேசித்ததால் சுவாமிநாதன் என்றும் குருநாதன் என்றும் திருப்பெயர்கள் பெற்று விளங்குகிறார்.

**"ஏரகவெற்பெனும் அற்புதமிக்க சுவாமி
மலைப்பதி"**

என்பது அருணகிரிநாதரின் திருவாக்கு.

**"நீரகத் தேதனை நினையுமன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்
தாரகத் துருவமாந் தலைமை யெய்திய
ஏரகத் தறுமுகனடிகள் ஏத்துவாம்"**

என்பது கந்தபுராணம்

**குன்றுதோறாடல்**

திருமுருகாற்றுப் படையில் வரும் ஐந்தாம் பகுதியின் இறுதியில் "குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே" என்று நக்கீரர் கூறுகிறார். 'ஒவ்வொரு குன்றிலும் திருவிளையாடல் புரிவதும் நிலைபெற்ற முருகனுடைய இயல்பு' என்பது இதன் பொருளாகும். எனவே, குன்றுதோறாடல் என்பது முருகன் எழுந்தருளியிருக்கும் மலைத் தலங்கள் எல்லாவற்றையுமே குறிக்கும். அவற்றுள் சிறப்பானதொரு தலமாகத் திருத்தணி குறிப்பிடப்படுகிறது. அருண்மொழி அரசு கிருபானந்தவாரியார் ஒரு கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்.

"ஆறு ஆதாரங்களே அப்பரமனுடைய ஆறுபடைவீடுகளாம். திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, (பழனி) திருவேரகம் (சுவாமிமலை) குன்று தோறாடல், பழமுதிர் சோலை என்பன அவை.

உல்லாசம் - திருப்பரங்குன்றம
நிராகுலம் - திருச்செந்தூர்
யோகம் - திருவாவினன்குடி
இதம் - சுவாமிமலை
சல்லாபம் - திருத்தணி
விநோதம் - பழமுதிர்சோலை"

முருகப்பெருமான் வள்ளிநாயகியை மணம் செய்துகொள்ளும் பொருட்டு வந்து தங்கியதலம் திருத்தணிகை. திருத்தணிகையின் சிறப்பிற்கு இதுவே சிறந்த பெருங் காரணமாகும்.

'மலர்களில் சிறந்தது தாமரை; நதிகளில் சிறந்தது கங்கை; பதிகளில் சிறந்தது காஞ்சியம்பதி; மலைகளில் சிறந்தது தணிகை மலை' எனக் கந்தபுராணம் கூறுகிறது. அதன் ஆசிரியராகிய கச்சியப்ப சிவாச்சாரியர் இதனை,

**"விரையிடங்கொளும் போதினுள் மிக்க
பங்கயம்போல்
திரையிடங்கொளும் நதிகளிற் சிறந்த
கங்கையைப்போல்
தரையிடங்கொளும் பதிகளிற் காஞ்சியந்
தலம்போல்
வரையிடங்களில் சிறந்ததித் தணிகைமால்
வரையே"**

என அழகுபடக் கூறியுள்ளார்.

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், தணிகையின் இறப்பை,

**"இமையவர் பணி திருத்தணி பொற்பதி"**

என்றும்

**"எத்திக்கு முற்ற புகழ் வெற்றித் திருத்தணி"**

என்றும்,

**"திரைகடல் சூழும் புவிக்குயிராகும் திருத்தணி"**

என்றும் போற்றிக் கூறியுள்ளார்.




Select from our wide range of electronic products and more
TVs • Video Cassette Players / Recorders • Video Cameras • Computers • Audio / Video Cassettes • Watches • Cameras • Colour Films • Home Appliances • Electronic Games & more.

**Thakral Brothers** (Pte) Limited
1 Colombo Court #08-17/25 Singapore 179742. Tel : 3374292 (20 lines)
Fax: (65) 336 3095 / 337 3295 Telex: RS 23884 THAKRAL Cable: THAKRAL

### பழமுதிர்சோலை

ஆறாவது படைவீடாகத் திகழ்கிறது, பழமுதிர் சோலை. இஃது அழகர்கோயில் என்றும் வழங்கப் பெறுகிறது. முருகப் பெருமானின் தலமாகவும் திருமாலின் தலமாகவும் இது விளங்குகின்றது. திருமாலுக்கு உரியதாய் விளங்கும் அழகர் என்னும் திருப்பெயர் முருகனுக்கும் பொருந்துவதாகும்.

நக்கீரர், பழமுதிர் சோலையில் வீழும் அருவியின் அழகை வருணித்துள்ளார். திருமுருகாற்றுப் படையில் வரும் அப்பகுதியின் இறுதியில், அவர் "பழமுதிர்சோலை மலைகிழவோனே" என்று குறித்துள்ளார். ''பழமுதிர்சோலை'' என்பதற்கு நச்சினார்க்கினியர், 'பழம் முற்றின சோலை' என்று பொருள் கூறுகிறார். 'பழம் உதிர்ந்த சோலை' என்றும் பிற உரையாசிரியர்கள் அதற்குப் பொருள் தந்திருக்கின்றனர்.

வள்ளிநாயகிக்கு அருள்புரிந்த முருகவேளே பழமுதிர்சோலையில் எழுந்தருளியவன் என்று கந்தபுராணம் கூறுகிறது. அருணகிரிநாதர் திருப்புகழில்,

**"சோதியின் மிகுந்த செம்பொன்மாளிகை**
**விளங்குகின்ற**
**சோலைமலை வந்துகந்த பெருமாளே"**

என்று முருகப் பெருமானைப் போற்றுகிறார்.

பழமுதிர்சோலை என்னும் பெயர் முருகப் பெருமானது திருவிளையாடலின் அடியாகத் தோன்றியது என்றும் கூறப்படுகிறது. இத்தலத்தில் முருகப் பெருமான் ஔவைப் பிராட்டிக்கு நாவற் பழங்களை உதிர்த்தார் என்றும், சில வினாக்களைக் கேட்டு, தமிழ் மூதாட்டியின் வாயிலாகப் பயனுள்ள நீதிகளை உலகுக்கு உணர்த்தினார் என்றும் கூறப்படுகிறது.

அழகர் கோயில் மலைமேல் பழமுதிர்சோலை முருகப்பெருமான் கோயில், அமைதியை நல்கும் இயற்கை எழில் நிறைந்த இடத்தில் அமைந்திருக்கிறது.

ஆறுமுகனுக்கு உகந்த ஆறுபடை வீடுகளுக்கும் சென்று குன்றுவாழ் குமரவேளை வழிபட்டு, முருகப்பெருமானின் வென்ற சீரருளைப் பெற்று உய்வோமாக.






*With*

***Best Compliments***

*from*

联兴牌业私人有限公司

**Liang Heng Signs & Sports Pte Ltd**

JTC Blk 52 Kallang Bahru #05-14/15

Singapore 339335 Tel : (65) 2926389 / 2984040

Fax : (65) 2962023 HP: 96389890 Pg : 93089989

# அறுவர் குருபூசை

*பேராசிரியர் சொ.சொ.மீ.சுந்தரம், எம்.காம்.,*
*தலைவர், வணிக இயல் துறை, சௌராஷ்டிர கல்லூரி, மதுரை*

**பாதமலர் மீதுபலர் பலமலர்கள் வைத்தாலும்**
**பாட்டுமலர் நீகேட்கிறாய்**
**பத்தியொடு பாடுமவர் சித்தமிசை குடிகொண்ட**
**பழனியாண் டவ மூர்த்தியே.**

என்று போற்றப்படும் ஞான தெண்டாயுதபாணி தன்னை வழிபடும் தமிழன்பர்களாகிய நகரத்தார்களின் பக்திக்கு இரங்கிச் சிங்கப்பூரில் அருள் மழை பொழியும் ஆண்டவனாக வீற்றிருக்கிறான். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப்பெருமான் வாழ்த்திய நெஞ்சங்களுக்கு வரங் கொடுக்கவும் வளங்கொடுக்கவும் ஞான வேலாயுத மூர்த்தியாய்க் காட்சியளிக்கிறான். 1859ல் கட்டப்பெற்ற தெண்டாயுதபாணி திருக்கோயிலில் ஆண்டுதோறும் அறுவர் குருபூசைகள் நிகழ்கின்றன. சித்திரைச் சதயத்தில் அப்பரடிகளுக்கும், வைகாசி மூலத்தில் திருஞான சம்பந்தருக்கும், ஆனி மகத்தில் மாணிக்க வாசகருக்கும், ஆடிச் சுவாதியில் சுந்தரமூர்த்திக்கும், வைகாசிப் பூசத்தில் சேக்கிழாருக்கும், பங்குனி உத்திரத்தில் கோவிலூர் ஆண்டவருக்கும், குருபூசை வழிபாடுகள் நிகழ்கின்றன. சைவம் தழைக்கத் தழைத்த பெருமக்கள் சமயாசாரியர்கள் எனப்படும் நால்வர். "அந்த நாலு பேருக்கு நன்றி" என்றும் "நாலுபேர் சென்ற வழியில் செல்ல வேண்டும்" என்றும் நாம் கூறுவது எழுதிக்காட்ட முடியாத இறைவனை நம் கையில் உள்ள நெல்லிக்கனியாகக் காட்டிய இந்த நால்வரைத் தான். இத்தகைய அடியார்கள் பெருமையை எடுத்துக்காட்டியவர் சேக்கிழார். அவர் கூறியபடி, இறைவனுக்குத் திருப்பணி செய்து கோயில் கட்ட, நகரத்தார்களைத் தூண்டிவிட்டு, பதிபுண்ணியமும் பசு புண்ணியமும் பெறச் செய்தவர் கோவிலூர் ஆண்டவர். அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் காட்டும் முருகப்பெருமான் இந்த ஆறு பெருமக்களின் குருபூசைகளையும் தன் ஆலயத்தில் நடத்தத் திருவுள்ளம் பற்றியிருக்கிறான். பெட்டியடி வைத்த இடமெல்லாம் பிள்ளையார் கோயில் கட்டி, திரைகடல் ஓடித் திரவியம் தேடும் பொழுதும் தெண்டாயுதபாணியை உடன்கொண்டு செல்லும் நகரத்தார் பெருமக்கள் மூலம் இந்தச் சைவப்பணியும் தமிழ்ப்பணியும் சிறக்கச் செய்ய வேண்டும் என்பதும் அவன் திருவுள்ளம் போலும்.

**நால்வர் பெருமக்கள்**

இருண்ட காலத்தில் தோன்றிச் சைவநெறிக்கும் தமிழ்மொழிக்கும் ஒளிகொடுத்தவர்கள் நால்வர்.

**சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்**
**சுந்தரனும்**
**சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி**
**வந்திலரேல் நீறெங்கே? மாமறைநூல்**
**தானெங்கே?**
**எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே?**

என்றபடி, சமணமும் பௌத்தமும் அரசோச்சிய காலத்தில், சடங்கும் வேள்வியும் தலைமைபெற்ற நேரத்தில், அன்பும் தொண்டுமே இறைவனை அடையச் செய்யும் எனக் காட்டி, பல ஊர்களுக்கும் சென்று மக்களைச் சந்தித்து, அவர்கள் துன்பங்களை மாற்றி, இறைவன் 'வாழ்த்துப்பொருள் மட்டுமல்ல, வாழும் பொருள்' எனக் கூறிச் சமயம் நமக்காக இருக்கிறது என்பதை நிலைநாட்டிச் சைவத்தை நிலைநிறுத்திய பெருமை இந்த நால்வருக்கே உரியது. இந்த நால்வரும் இறைவனை அடைவதற்கு நான்கு வழிகளைக் காட்டினர். சரியை என்னும் ஆண்டான்-அடிமை முறையைப் பின்பற்றி இறைவனைத் தலைவனாக்கித் தன்னைத் தொண்டனாக்கி, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று தாசமார்க்கத்தில் நின்றவர் திருநாவுக்கரசர். கிரியை என்னும் தந்தை - மகன் முறையைப் பின்பற்றி இறைவனாகிய தந்தையிடம் மகனாக அன்பு காட்டிப் பொற்றாளமும் முத்துச்சிவிகையும் பெற்று, சற்புத்திர மார்க்கத்தில் வாழ்ந்தவர் திருஞானசம்பந்தர்.

யோகம் என்னும் தோழமை நெறியைப் பின்பற்றி இறைவனை நண்பனாக்கிப் பொன்னும், பெண்ணும், கண்ணும் பெற்று, சகமார்க்கத்தில் நிலைத்தவர் சுந்தரமூர்த்தியார்.

ஞானம் என்னும் நாயக நாயகி நெறியைப் பின்பற்றி இறைவனைக் காதலனாக்கி பாவையும் கோவையும் பாடிக் கொடுத்து, சன்மார்க்கத்தில் திளைத்தவர் மாணிக்கவாசகர்.

தில்லையம்பலத் திருக்கோயிலுக்குச் செல்லும் பொழுது நான்கு பெருமக்களும் நான்கு வாயில்களின் மூலம் சென்றனர் என்பது அவர்கள் பின்பற்றிய நான்கு மார்க்கங்கள் எனப்படும் வழிகளையே குறிக்கும்.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர், வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கத் தோன்றியவர். பிறமொழிகளின் ஆதிக்கம் அதிகமாக இருந்தபொழுது, அசைவில் செழுந் தமிழ் வழக்கே இயல் வழக்கின் துறைவெல்லவும், பர சமயத் தருக்கொழியவும், பாண்டியனார் கூன் நிமிரவும், எண்ணரிய சிவஞானத்து இன்னமுதப் பாலுண்டு எழுந்து வந்தவர். பூணூல் அணியுமுன்பே வேதம் உணர்ந்தவர். படிக்கத் தொடங்கும் பருவத்துக்கு முன்பே படித்து முடித்தவர். திருநீற்று நெறிபரப்பிச்




# K. SYED MOHAMED CO.

COMMITTED TO CASHEW INDUSTRY

**IMPORTERS OF RAW CASHEWNUTS & AGRO PRODUCTS.**
**EXPORTERS OF CASHEW KERNELS**

37-B, HONG KONG STREET, SINGAPORE 059676

TELEPHONE : 532 4579 (4 LINES) DIRECT LINE : 534 2059 MOBILE NO : 96300817

TELEX : RS 22461 KSMCO CABLE : THANZEEL FAX : 65 - 535 6835

WE BANK WITH इंडियन बैंक Indian Bank SINGAPORE

செந்தமிழின் இசைவளர்த்தவர். திருமருகல் என்ற ஊரில், தனக்கு நிச்சயித்த கணவன் பாம்புகடித்து இறந்தபொழுது, வருந்தியழுத வணிகப் பெண்ணின் துயர் மாற்றி, திருமணம் செய்து வைத்து இறைவன் "பாடுவார் துயர்களைவான் பரவுவார் பசிதீர்ப்பான்" எனக் காட்டியவர். பக்கத் துணையிருப்பான் சொக்கலிங்கப் பெருமான் என்பதை விளக்க, மூன்றாண்டுப் பருவத்திலேயே முதிர்வடைந்த ஞானத்தால் "இவனன்றே" என்று பக்கத்தில் கை காட்டிப் பரமனுக்கு விளக்கம் தந்தவர். தன்னைப் பெற்ற தந்தையார் வந்து சந்தித்தபொழுது, நீங்கள் நலமா? அம்மா நலமா? என்று கேட்காமல் எனக்கும் பாலூட்டி ஞானம் தந்தருளிய இறைவனும் உமையவளும் நலமா? (பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே) எனக்கேட்டவர். பயனில்லா ஆண்பனையைப் பயன்தரும் பெண்பனையாக மாற்றி, சிவனடியார் வாழ்க்கை, சமூகத்திற்குப் பயன்தருவதே எனச் சொல்லாமல் சொன்னவர். மண்ணில் பிறந்தார் பயன் இறைவனை வழிபடுவதும் அடியார் திருத்தொண்டுமே எனக் காட்டச் சாம்பலைப் பெண்ணாக்கிச் சரித்திரம் படைத்தவர். மங்கையர்க்கரசியின் மங்கல நாணைப் "பையவே" எனச் சொல்லிப் பாதுகாத்தவர். அவர் இல்லையேல் சைவம் இல்லை; தமிழ் இல்லை; நீறில்லை; நெறியுமில்லை. "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" ஓதினால் மட்டுமே நாதன் அருள்கிட்டும் என்று நமக்குக் காட்டி, "இல்லறமல்லது நல்லறமன்று" என்பதால் திருமணம் செய்துகொண்டு மணக்கோலத்துடன் ஒளிவாழ்வு பெற்றவர் திருஞான சம்பந்தர்.

தமிழ்மழை பொழிந்த தாண்டக வேந்தரான திருநாவுக்கரசர், தொண்டும் பணிவும் துணையென வாழ்ந்தவர். கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாக நமச்சிவாயத்தைப் பெற்றவர். உலகச் சரித்திரத்திலேயே முதன்முதலில் பிரெஞ்சுப் புரட்சிக்கும் முன்னால் ஆறாம் நூற்றாண்டிலேயே அரசனை எதிர்த்து அறங்காக்கப் போராடி, "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என முழக்கம் செய்தவர். துறவிக்கு வேந்தன் துரும்பென்பதால் "அஞ்சுவது யாதொன்றுமில்லை. இனி அஞ்சவருவதுமில்லை" என்று வீர வரலாறு படைத்தவர். கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புல இன்பங்களையும் நிமலன் அருளால் நீற்றறையில் பெற்று "மாசில் வீணையும் மாலை மதியமும்" பாடியவர். எப்பொழுதும் சிரித்தபடி ஆடும் தில்லையம்பல நடராசர் திருமுகத்தைக் கண்டதும் "என்று வந்தாய் என்று என்னைக் கேட்கிறார்" என உணர்ந்து அருளுக்கு மனம் நெகிழ்ந்து அன்புக் கண்ணீர் சிந்தியவர். பிள்ளையாயிருந்த ஞானசம்பந்தப் பிள்ளையார் அன்பு பெருக 'அப்பரே' என்று அழைத்தபொழுது, ஆணவச் செருக்கால் ஆமாம் என்றுரைக்காமல் அன்புப் பணிவினால் அடியேன் என்றவர். தன்னைக் காண வேண்டித் தமிழோடு வந்த சம்பந்தர் பல்லக்கைத் தான் தூக்கிச் சென்றவர். செப்பரிய திருமுறையில் தேவார ஒளிசேர்த்தவர். அப்பூதி அடிகளுக்கு ஆண்டவனாய்த தோன்றியவர். பழையாறையில் சமணர் மறைத்துவைத்த சிவலிங்கத் திருமேனியை வெளிப்படுத்த உண்ணாவிரதமிருந்து, பின்னால் வந்த காந்தியடிகளுக்குப் பெரும் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். வட நாடு நோக்கிக் கயிலாயம் காணச் சென்ற நாவுக்கரசரை இறைவன் திருவருள், செந்தமிழ் போற்றும் திருவையாற்றுக்குத் திருப்பி விடுகிறது. அங்கே காதல் மடப்பிடியோடும் களிறு வருகிறது. ஆண்மயிலும் பெண்மயிலும் அன்போடு வருகின்றன. சேவலும் பெட்டையும் சேர்ந்து வருகின்றன. இது தான் கயிலாயக் காட்சி. மனமொத்த கணவன் மனைவியர் மகிழ்வோடு வரும் இடமெல்லாம் கயிலாயம் தான். கயிலாய யாத்திரைக்கு அன்புதான் வழிகாட்டி என்று இறைவன் காட்டுகிறான். வெளியில் தேடாமல் அன்பினால் உள்ளே காணத் தொடங்கிய நாவுக்கரசர்

**தேடிக் கண்டுகொண்டேன் திருமாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே**
**தேடிக் கண்டுகொண்டேன்.**

என்று பாடிப் பாடிப் பரவசம் கொள்கிறார்.

அன்புப் பெருநெறியான சைவத்தைவிட்டுப் பேச்சில் அன்பும் செயலில் கொடுமையுமாக வாழ்ந்த சமணத்தின் பால் மக்களும் மயங்கி மன்னனும் மயங்கிய பொழுது, தடுத்தாட்கொண்ட பெருமை திருஞான சம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்குமே உரியது. தலைஎழுத்து என்று விட்டுவிடாமல், நஞ்சினால் இறந்தவர்களை நற்றமிழ்ப் பதிகம் பாடி எழுப்பியும், பஞ்சம் வந்தபொழுது இறைவன்பால் படிக்காசு பெற்று எல்லோருக்கும் சோறு போட்டும், திருமறைக்காட்டில் பலரும் பயன்படுத்த வேண்டிய திருக்கோயில் கதவு அடைத்துக் கிடந்தபொழுது, திறக்கவும் அடைக்கவும் தேவாரமும் திருக்கடைக்காப்பும் பாடியும் சமூகத்தொண்டாற்றி மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனக் காட்டிய இப்பெருமக்கள் இருவரும் சைவக் கோட்டையைத் தாங்கும் தூண்களாகத் திகழ்கிறார்கள்.

திருநெறிய தமிழ்ப் பாதை செப்பனிடப்பட்ட பிறகு, அந்தப் பாதையில் தேரோட்டிச் செல்லும் வாய்ப்பு சுந்தரருக்கும் மாணிக்க வாசகருக்கும் கிடைத்தது.

"அன்புக்கெளியவனாய் அருள்பொழியும் ஆண்டவன் உரிமைத் தோழனாய் ஓடிவந்து உதவுவான்" என்று காட்டத் தோன்றியவர் சுந்தரர். "துன்பம் வந்தால் துவண்டு விடாதே. ஒரு கதவு அடைக்கப்பட்டால் உனக்காக இறைவன் கருணை இரண்டு கதவுகளைத் திறந்து வைக்கும்" என்று காட்டுவதற்காகச் சுந்தரருக்கு ஒரு மணத்தைக் கெடுத்துத் தடுத்தாட்கொண்ட இறைவன் இரண்டு மணங்களுக்கு ஏற்பாடு செய்கிறான். கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஊடல் ஏற்பட்டால் அதற்குக் கடவுளா தூது போவார்? என்று கேட்காதே. அன்புக்கு இரங்கும் ஆண்டவன் அதையும் செய்வான். ஆரூரர் மனைவியுடன் அன்பாக வாழ்வதற்குத் தேரூரும் திருவாரூர்த் தெருவெல்லாம் அவன் நடப்பான். காட்டிலே சுடலைப்பொடி பூசிப் பூதங்களோடு ஆடும் சிவன் இல்லறத்துக்கு

*With*
**Best Compliments**

*For fine Indian Jewelleries*
*Visit us at*

GMT JEWELLERS PTE LTD

70, Serangoon Road, Singapore 217975
Tel : 2973242 / 2973243 Fax : 2973244

*Manufacturer Export & Import Gold & Silver Jewellers*



*With*
**Best Compliments**
**from**

**Wingscargo Container and Warehousing Pte Ltd**

32, Wallich Building #03-57, Wallich Street
Singapore 028880

- Specialise in Trucking, Packing and Warehousing -


Chettiars' Temple Society Singapore

உதவமாட்டான் என்று எண்ணாதீர்கள். அவன் பொன்னும் கொடுப்பான். மெய்ப்பொருளும் கொடுப்பான். அடியவர் பசித்தால் அவன் தாங்க மாட்டான். அவருக்குச் சோறு போடுவான். வீடு வீடாய்ச் சென்று சோறு வாங்கி வந்து போடுவான். (மடைப் பள்ளிச் சோற்றை எடுத்துப் போட மாட்டான். அது எப்படியிருக்கும் என்பது நாள்தோறும் அனுபவிக்கும் அவனுக்குத் தானே தெரியும்!) சாப்பாடு போட்டுக் காப்பாற்றும் அவன் சத்தியத்தை மீறினால் தண்டிக்காமல் விடமாட்டான். கண்ணைக் கெடுப்பான்; ஊன்றுகோல் கொடுப்பான். உணர்ந்து திருந்தினால் கெடுத்த கண்ணைக் கொடுத்தாட் கொள்வான். ஆண்டவனைப் பாடுவதைவிட அவன் அடியாரைப் பாடுதல் அவனுக்கு விருப்பமானது. இதற்காகத் "தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று அடியெடுத்துக் கொடுத்து முத்தமிழ் செழிக்க முதல் போடுவான். இதுதான் சுந்தரர் வாழ்வின் பொருள். அவனோடு அவர் விளையாடியதைவிட, அவரோடு அவன் விளையாடியது அதிகம். எந்தச் சமயத்திலும் இறைவன் இவ்வளவு எளியவனாகக் காட்சியளித்த வரலாறு இல்லை.

நால்வர் பெருமக்களில் தனித்து நிற்பவர் மாணிக்க வாசகர். அன்புக்கு மறுபெயர் மாணிக்கவாசகர்.

**என்னால் அறியாப் பதம் தந்தாய்**
**யான் அது அறியாதே கெட்டேன்**
**உன்னால் ஒன்றும் குறைவில்லை**
**உடையாய் அடிமைக்கு யாரென்பேன்?**

என்று அழுதடி அடைந்த அன்பர். அவர் பாடிய திருவாசகம் போப் என்ற பாதிரியார் மனத்திலும் நிலைபெற்றது. "இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க'' என்று பாடும் திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகாதார். யாரொடும் பகை கொள்ளக் கூடாது. படை வளர்ந்தால் பகைவளரும் என்பதால் குதிரை வாங்கக் கொடுத்த பணத்தில் கோயில் கட்டினார் மாணிக்கவாசகர். குதிரை வரவில்லை என்று மன்னன் துன்புறுத்தினாலும், வந்துவிட்டது எனப் பாராட்டினாலும், மீண்டும் நரியாகிவிட்டது என்று வைகை மண்ணில் போட்டு வருத்தினாலும், "நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று வாழ்ந்த பெருமை அவருக்குரியது. குருந்த மரத்தடியில் குருவைப் பார்த்ததும் அவருக்கு

**"யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்**
**ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே.**

என்ற எண்ணம் வந்துவிட்டது. குருநாதன் தன்னைவிட்டுப் பிரிந்தும், அந்தப் பிரிவுத்துயர் 658 திருவாசகப் பாடல்களுக்கு வித்திட்டது. பண் சுமந்த பாடலுக்குப் பரிசு கொடுக்கும் பரம் பொருள் அவருக்காக மண் சுமந்தான், கூலிகொண்டான், மன்னவனால் அடிபட்டான்.

**தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனை**
**பையவே கொடு போந்து பாசமெனும் தாழ் உருவி**
**உய்யும் நெறி காட்டுவித்திட்டு ஓங்காரத் துட்பொருளை**
**ஐயன் எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே**

என்று பாடவைத்து அந்தப் பாட்டையும் தானே வந்து எழுதிக்கொண்டு, பாட்டுக்குப் பொருளாகவும் காட்சி தந்தான். இவ்வாறு ஞானக்கனியாகி இறைவனோடு தில்லையில் கலந்த திருமுறைச் செல்வர் மாணிக்கவாசகப் பெருமான்.

இந்த நால்வரையும் இறைவன் நாலுவிதமாக ஆட்கொண்டான். பாலைத் தந்து சம்பந்தரை ஆட்கொண்டான். சூலை அருளி நாவரசை ஆட்கொண்டான். ஓலை காட்டிச் சுந்தரரை ஆட்கொண்டான். சிவஞான போதங் கூறும் நூலைக் காட்டி மாணிக்கவாசகரை ஆட்கொண்டான்.

**பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் சுழல்போற்றி**
**ஆழிமிசை கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி**
**வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி**
**ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள் போற்றி**

என்று வழிபடப் பெறும் பேறுபெற்றவர்கள் இந்த நால்வர் பெருமக்கள்.

### சேக்கிழார்

சிங்கப்பூர்த் தெண்டாயுதபாணி ஆலயத்தில் நால்வர் வழிபாட்டுடன் சேக்கிழார் வழிபாடும் நடைறெுகிறது. பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியவர் சேக்கிழார். ஆறாம் நூற்றாண்டிலும் ஏழாம் நூற்றாண்டிலும் புரட்சிவீரர்கள் கட்டிய சைவக்கோட்டைக்கு அரண் செய்ய வேண்டிய அவசியம் பனிரெண்டாம் நூற்றாண்டில் ஏற்பட்டது. இடைக்காலச் சோழர்கள் பெற்ற பெரு வெற்றியும் எல்லையற்ற செல்வமும் மக்களைக் குறிக்கோளற்ற வாழ்க்கை வாழச்செய்துவிட்டன. இன்ப வேட்கையில் மயங்கிய மக்களைத் தட்டியெழுப்பி, சைவக் கோட்டையைக் காக்கச் சேக்கிழார் பெரிய புராணம் இயற்றினார்.

**கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்**
**ஒடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.**

என்று அடியார் தன்மையை எடுத்துக் காட்டினார். திருத்தொண்டும்அன்புமே சிவத்தைக் காட்டும் எனத் தெரிவித்தார். வழிவழிவந்த மரபை மதித்தார். புதிய வழியில் புரட்சியும் செய்தார். சடங்குகளைவிட அன்பே சிறப்பானது என்று காட்ட, சடங்குகள் செய்த சிவக்கோச்சரியாரைப் பார்க்க வைத்து அன்புப்

*With*

***Best Compliments***

*from*

*"We Seek the Blessings of Lord Thendayuthapani"*

**Trusha International Pte Ltd**

455, Tagore Avenue
Singapore 787825

*With*

***Best Compliments***

*from*

**LAXUS SINGAPORE (PTE) LTD**

101 Cecil Street
#18-08 Tong Eng Building
Singapore 069533

பிழம்பாய்த் திரியும் கண்ணப்பரைச் செயல்பட வைத்தார். ஐயரான அப்பூதியார் வீட்டில் வேளாளரான அப்பருக்கு விருந்து வைத்தும், தாழ்த்தப்பட்ட இனம் எனக் கருதப்பட்ட மரபில் வந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் தன் மனைவியோடும் திருநீலநக்கர் என்ற அந்தணர் வீட்டிற்குள், அவர் அழைப்பை ஏற்று வேள்வித் தீக்குப் பக்கத்தில் சென்றபொழுது, தீ வலம் சுழித்து எரிந்து வரவேற்றதைக் காட்டியும் சாதிக் கோட்டையைத் தகர்த்தெறிந்தார். கணவனை இழந்தவளுக்கு மதிப்பில்லாக் காலத்தில் தோன்றிய சேக்கிழார், அம் பொன் மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கிய திலகவதியாரைத் தம்பிக்கு உபதேசம் செய்யும் ஞானகுருவாக மாற்றித் திருநீறு வழங்கச் செய்தார். ஆள்பவன் கட்டிய கற்கோயிலைவிட அடியார் கட்டிய மனக்கோயில் சிறப்பான தென்பதால் "பூசலார் கோயிலுக்கு இன்று போக வேண்டும். உன் ஆலயக் குடநீராட்டைப் பிறகு வைத்துக்கொள்'' என்று புவியாளும் மன்னனிடம் சிவபெருமானைப் பேச வைக்கிறார். தவறு செய்தால் தண்டனையை அனுபவிக்க வேண்டுமே தவிரப் பிராயச்சித்தம் செய்துகொள்ள முடியாது என்று காட்ட மனுநீதிச் சோழன் வரலாற்றை முதலில் கொண்டுவந்து சேர்க்கிறார். ''அருச்சனை பாட்டே ஆகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று கடவுளைப் பேசவிட்டு, திட்டிய தமிழ்ச் சொல்லையே திருப்பாட்டுக்குத் தொடக்கம் ஆக்குகிறார். சிவவேதியர் மரபில் தோன்றிய சுந்தரருக்கு, உருத்திர கணிகையர் மரபில் தோன்றிய பரவை நாச்சியாரைத் திருமணம் செய்துவைத்தும் சிவனேசச் செட்டியார், தன் மகள் பூம்பாவையைத் திருஞான சம்பந்தருக்கு மணம்செய்ய முடிவுகட்டுகிறார் என்று காட்டியும் கலப்புத் திருமணத்துக்குக் கை காட்டுகிறார். தங்கச் சங்கிலியில் காசுகளைக் கோர்த்துக் காசு மாலை செய்வதுபோல் தொண்டுச் சங்கிலியில் அறுபத்து மூன்று நாயன்மார் வரலாறுகளைக் கோர்த்து, தமிழ்நாட்டுக்கு அப்பால் உள்ள அடியார்களையும் வருங்காலத்தில் தோன்ற விருக்கும் அடியார்களையும் ''அப்பாலும் அடிச்சார்ந்தார்'' ஆக்கி வைத்து, உள்நாட்டுச் சைவத்தை உலகளாவிய சைவமாக மாற்றிய பெருமை சேக்கிழாருக்கே உரியது. கோயிலுக்குப் போனால் உண்டியலில் பணம் போடுகிறோம். அர்ச்சகர் கற்பூரத் தட்டில் பணம் போடுகிறோம். ஆனால் கோயிலைச் சுத்தம் செய்யும் பணியாளர்களுக்குக் கொடுப்பதில்லை. இந்த உழவாரப் பணிக்காகவே அப்பருக்கு வாசியில்லாக் காசு தந்தான் இறைவன் எனக் கூறி நாம் மறந்ததை நினைவூட்டுகிறார்.

குமரனும் குமரியுமாகப் பிரிந்த திருநீலகண்டரும் அவர் மனைவியும் கிழவனும் கிழவியுமாக ஆனபொழுது சிவனே வந்து அவர்களுக்கு இளமையைத் தருகிறான். சைவம் நம்மைக் கயிலாயத்துக்கு அழைத்துச் செல்லும் சமயமல்ல - இங்கேயே வாழவைக்கும் சமயம் என்பதைக் காட்டி ஒரு வீட்டில் கணவனுக்கும் மனைவிக்கும் 'அற்புறு புணர்ச்சி இன்மை சிவனுக்கே உறுத்திற்று என்று காட்டிச் சைவத்தை நிலைநாட்டி, கோயில் கடவுளுக்காக அல்ல - மனிதன் கூடி வாழ்வதற்காக என்று அறிவித்த சேக்கிழாரின் திருத்தொண்டுக்கு எல்லையில்லை. சேக்கிழாரின் பெரிய புராணம் தமிழுக்கும் சைவத்துக்கும் புகழ்பேசும் பேரிலக்கியமாகத் திகழ்கிறது.

**தொண்டர் சீர் பரவிநின்ற தொண்டரைப் பெற்றதாலே**
**தொண்டைநாடு அன்றுதொட்டுத் தொண்டர் நாடான தம்மா**

என்று புலவர் பாடும் புகழ்பெற்றவர் சேக்கிழார். அவருக்குக் குருபூசை நடத்துவது அறுபத்து மூவருக்கும் குருபூசை நடத்துவதாகும்.

## கோவிலூர் ஆண்டவர்

மன்னர் பின்னோராகிய நாட்டுக் கோட்டை நகரத்தார் பெருமக்கள், செய்த திருப்பணிகளால் சரித்திரத்தில் இடம்பெற்றவர்கள். "கோயிலைப் பழுது பார்க்க வேண்டுமா? கூப்பிடு செட்டியாரை'' என்பது தமிழகத்தில் வழங்கிவரும் வழக்குச் சொல் ஆகும். இந்தியா, பர்மா, இலங்கை, சிங்கப்பூர், மலேயா முதலிய நாடுகளில் பெரிய அளவில் திருப்பணி செய்தவர்கள் நகரத்தார்கள். சிக்கனமாய்ச் சேர்த்த பணத்தைத் திருப்பணிக்குக் கொடுத்த நகரத்தார்கள் பெருமையைப் பாராட்டிக் கொத்தமங்கலம் சுப்பு அவர்கள்

**சிக்கனமாய்த் தன்பொருளைச் சேர்த்துவைப்பாள் ஆச்சி**
**சிவன்கோயில் சந்நிதியில் வளரும் திருவாச்சி**

என்று பாடினார்கள். இந்தத் திருப்பணியில் நகரத்தார்களை ஈடுபடுத்திய பெருமை கோவிலூர் ஆண்டவருக்கே உரியது.

காரைக்குடியில் மெய்யப்ப செட்டியாரும் வள்ளியம்மை ஆச்சியும் செய்த தவத்தினால், கற்பகப் பிள்ளையாரைக் கைதொழும் பிள்ளையார்பட்டிக் கோயில் பிரிவில், 1791ல் கோவிலூர் ஆண்டவர், முத்துராமலிங்கம் என்ற பெயர் பூண்டு,

**கட்டறுத்த சான்றோர்கள் கண்ணுதலின் காட்சிபெற**
**விட்டுவிட்ட பாசத்தால் மேலோர்கள் வெற்றிபெறத்**
**தொட்டதிரு நெல்லைக்குச் சோதிமணி மாடம் எழச்**
**செட்டிமக்கள் குலம்விளங்கத் திருஅவதாரம் செய்தார்.**

சிறுவயதிலேயே சிவபக்தியுடைய முத்து ராமலிங்கம், நாகைப்பட்டினத்துக்கு அருகில் உள்ள சிக்கல் என்ற திருத்தலத்தில் தன்

With
Best Compliments
from

We prefer that you are covered by us

**B P Philomo Pte Ltd**

71 Robinson Road #02-2A Crosby House Singapore 068895
Robinson Road P.O.Box 277 Singapore 900527
Tel : 2237228/9 & 2234570 Fax : 2247401



With
Best Compliments
from

A
WELL WISHER

தந்தையார் வணிகத்தை மேற்பார்வை இடச் சென்றார். அந்த ஊருக்கு அருகில் உள்ள பொருள்வைத்த சேரியில் நெசவுத் தொழில் செய்து நினைவில் சிவனை வைத்த உகந்தலிங்க தேசிகர் என்ற ஞானியைச் சந்தித்து, தன்னுடைய பதின்மூன்றாவது வயதில் அவரைச் சரணடைந்தார். பிறகு காரைக்குடிக்கு வந்தார். அப்பொழுது அங்கே வந்த வடநாட்டுத் துறவி ஒருவர், அவரைப் பார்த்துப் பரவசமுற்று "இவர் தட்சிணாமூர்த்தியின் கலையென்று அறியுங்கள். உங்களை ஆட்கொள்ள ஆண்டவன் எழுந்தருளியிருக்கிறான்." என்றார். அதுமுதல் தனவணிகர்கள் அவரை ஆண்டவர் என்றே அழைக்கத் தொடங்கினர். மீண்டும் பொருள்வைத்த சேரிக்குச் சென்ற ஆண்டவர், தம் ஆசிரியரிடம் ஞான வாசிட்டம் பாடம் கேட்டார். தன்னுடைய பதினாறாம் ஆண்டில் ஞான வாசிட்டப் பாடத்தை நிறைவுசெய்த ஆண்டவர், தம் குருநாதருக்குக் காணிக்கை அளிக்கத் தம் தந்தையாரிடம் பொருள் கேட்டார். தந்தையார் பேசாதிருக்கவே "காது செவிடாய் விட்டதோ" என்று ஆண்டவர் கேட்டுவிட்டுப் போய் விட்டார். உடனே தந்தையாருக்குக் காது கேட்காமல் போக, அவர் உகந்தலிங்க சுவாமிகளைப் பணிந்து வேண்ட, அவர் ஆண்டவரை அழைத்து "உன் தந்தையின் வருத்தம் தீரத் திருநீறு கொடு" என்று கட்டளையிட, அதன்படி திருநீறளித்துக் காது கேட்க வைத்தார். அதன்பிறகு தந்தை பொருள்தர ஞானவாசிட்ட நிறைவு சிறப்பாக நடந்தது.

காரைக்குடிக்கு அருகில் உள்ள கோவிலூரில் வழிபாடு செய்ய ஆண்டவர் சென்றபொழுது, மழை அதிகம் பெய்து கூரைக் கொட்டகை ஒழுகியது. மறுநாள் கூரையை மாற்றிப் பனையோலை போட எண்ணி, ஆட்களை வரவழைத்தார் ஆண்டவர். அவர்கள் கொட்டகையின் மேல் ஏறியதும் கொட்டகை முழுவதும் அடியோடு சாய்ந்தது. அன்றிரவு திருநெல்லை அம்மை (கோவிலூர் அம்மன்) ஆண்டவரின் தாயிடம் சென்று "உன் மகன் நான் இருந்த வீட்டைப் பிரித்துப் போட்டுவிட்டானே, இது சரியா" என்று கேட்டாள். இதைக் கேட்ட ஆண்டவர் 1808ல் திருப்பணி தொடங்கிக் கோவிலூரில் சிறப்பான திருக்கோயில் கட்டி நகரத்தார் திருப்பணிக்கு வழிகாட்டினார். கோவிலூரில் ஒரு மடம் தொடங்கப்பெற்றது. தமிழில் அத்வைத நூற்களைப் போதிப்பதிலும் சாதுக்களை ஆதரிப்பதிலும் கோவிலூர் மடம் தலைமை மடமாகத் திகழ்கிறது. கோவிலூர் ஆண்டவர் பரம்பரையில் வந்த நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் இப்பொழுது பனிரண்டாவது மடாதிபதியாக வீற்றிருந்து, கோவிலூரை உலகப் புகழ்பெற்ற திருத்தலமாக்க உயர்ந்த ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கோவிலூர் ஆண்டவர் தம் அருள்வாக்குகள் சுவானுபவத் திருவாக்கு என்னும் நூலாக வெளிவந்துள்ளன. அவருடைய சமநிலை மனம்

**சித்திரத்திலே வரைந்த தீபம் போல் நில்லாமல்**
**கத்தித் தலைவெடிக்கக் கற்றனையே நெஞ்சகமே**

என்ற வாக்கில் வெளிப்படுகிறது. 1847ல் ஆண்டவர் இறைவன் திருவடிப் பேறடைந்தார்.

## முடிவுரை

ஆண்டுதோறும் அறுவர் குருபூசை நடத்துவதன் மூலம் இப்பெருமக்கள் பெருமையை நினைக்கச் செய்கிறது தெண்டாயுதபாணி திருக்கோயில். பழைய சான்றோர்களைப் பாராட்டாத நாட்டில் புதிய சான்றோர்கள் தோன்ற முடியாது என்பதை மனத்தில் கொண்டு, வழிபாடு செய்வதன் மூலம் அவர்கள் வழியில் நடக்கச் செய்யும் திருக்கோயிலின் பணிகள் மேலும் சிறக்க மீனாட்சியம்மை திருவடிகளை வணங்கி வாழ்த்துவோம்.

---

மலாய் நாடுகளிலும், தமிழகத் தெய்வத்துக்கு கோயில் கண்டு, அதனை வழிபட்டு வரும் சிறப்பினைப் போற்றுகின்றேன். தமிழர் எதை மறந்தாலும், இறைவழிபாட்டினை மறப்பதில்லையென்பதற்கு, செட்டி நாட்டார் சிறந்த சான்றாவர். சிறக்க அவர்தம் தெய்வப்பற்று.

அன்புடன்
*ம. பொ. சிவஞானம்*
19. 1. 64

***With***
***Best Compliments***
***from***

becs

## BATAVIA EXIMP AND CONTRACTING (S) PTE. LTD.

#07-16, Afro-Asia Building, 63 Robinson Road,
Singapore 068894 Tel : 2255633/34
Tlx : RS 20403 BECS Cable : "BECSFIRST" Fax : (065) 2255733
Mailing Address : P.O. Box 3544, Robinson Road Singapore 905544

***With***
***Best Compliments***
***from***

# South Asian Exports Pte Ltd

# நகரக் கோயில்கள்

டாக்டர் வ. தேனப்பன்,
தமிழ் விரிவுரையாளர், ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி தேவகோட்டை

### முன்னுரை

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்!" என்பது பழமொழி. "குடியிருக்கும் ஊரிலெல்லாம் கோயில் கட்டு!" என்பது நகரத்தார் வகுத்த புதுமொழி.

'நகரம்' என்றால் கோயில் என்றும் ஒரு பொருள் உண்டு. கோயிலையே தங்கள் வாழ்வின் மையமாகக் கொண்டு, கோயில் வழி நாகரிகத்தில் தலைசிறந்து விளங்குவதாலேயே "நகரத்தார்" என்ற சிறப்புப் பெயரினை நாட்டுக்கோட்டை நகரத்தார் பெற்றனர்.

நகரத்தார்கள், சங்க காலத் தமிழர்களின் பண்பாடுமிக்க வாழ்க்கை நடைமுறையினை இன்றும் கைக்கொள்பவர்கள். இவர்கள், வாழ்க்கையில் பலவிதமான துன்பங்களில் உழன்று, வாழ்வின் மெய்ப் பொருளைக் கண்டவர்கள். வீடுபேறு அடையத்தக்க முழுமையான வாழ்க்கையினை மேற்கொள்ளச் சிலப்பதிகாரப் பரம்பரையான இவர்களது வாழ்க்கை நெறியும் வழிபாட்டு முறையும் பிறருக்கு வழிகாட்டுகின்றன.

அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு அடித்தளமாக அமைந்தவைதாம் ஒன்பது நகரக் கோயில்கள்.

கோயிலையே தங்களது ஆதிமுதலாகக் கொண்டு அவற்றின் அடிப்படையிலேயே 22 பிரிவுகளாக (கோத்திரங்களாக) வாழ்பவர்கள் நகரத்தார்கள். ஒன்பது நகரக் கோயில்களோடு தாங்கள் குடியேறிய 78 ஊர்களிலும் நகரச் சிவன் கோயில்களைக் கட்டியுள்ளனர்.

தெய்வ வழிபாட்டின் மிகப் புராதனமான மரவழிபாடு (தல விருட்ச வழிபாடு), மரகத விநாயகர் வழிபாடு, நாக வழிபாடு, சிவன் வழிபாடு, சக்தி வழிபாடு, முருகன் வழிபாடு, திருமால் வழிபாடு ஆகியவற்றை நகரத்தார் மேற்கொண்டிருந்தனர் என்ற பழைய காலச் செய்திகளையும் நகரச்சிவன் கோயில்கள் இன்றும் சொல்லுகின்றன.

### ஒன்பது நகரக் கோயில்கள்

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் அமைந்துள்ள ஒன்பது ஊர்களில் உள்ள திருக்கோயில்களே ஒன்பது நகரக் கோயில்கள் எனப்படும். அவையாவன,

1. இளையாத்தங்குடி, 2. மாற்றூர், 3. வயிரவன்பட்டி, 4. நேமம், 5. இலுப்பைக்குடி, 6. சூரைக்குடி, 7. வேலங்குடி, 8. இரணியூர், 9. பிள்ளையார்பட்டி

### முதலில் தோன்றிய ஏழு கோயில்கள்:

பூங்கொன்றை வேலங்குடிக் கல்வெட்டு, இளையாத்தங்குடிக் கோயிலிலிருந்து பிரிந்து சென்றவர்கள் கி.பி. 712 முதல் கி.பி. 718 வரையான ஏழு ஆண்டுகளுக்குள் பிற எட்டுக் கோயில்களையும் தனித்தனியாகப் பெற்றனர் எனத் தெரிவிக்கிறது. பூங்கொன்றை வேலங்குடிக் கல்வெட்டின்படி ஒன்பது நகரக் கோயில்களின் தோற்றம் கி. பி. 718 இல் நிறைவு பெற்றுள்ளது என்றாகிறது.

### நகரக் கோயில்களின் தோற்றம்

ஆதியில் ஏழு வழி இளையாத்தங்குடி நகரத்தார் என்னும் பெயருடன் நகரத்தார்கள் நெறி வழுவாமல் இளையாத்தங்குடியில் வாழ்ந்துவந்தார்கள். பின்பு தங்களுக்குள் ஒற்றுமைப் படாமல் சிலர் தவிர மற்றையோர் எல்லாம் எண் வகையான கூட்டத்தாராகித் தங்கள் தங்களுக்கு வெவ்வேறு கோயில்கள் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று பாண்டிய மன்னனைக் கேட்டுக் கொண்டனர்.

கி.பி. 712ஆம் ஆண்டில் நகரத்தார்களில் இரு வகையினருக்கு மாற்றூர்க் கோயிலையும் வயிரவன்பட்டிக் கோயிலையும் பாண்டிய மன்னன் அளித்துள்ளான்.

கி.பி. 714ஆம் ஆண்டில் பாண்டிய மன்னன் நகரத்தாரின் நான்கு வகையினருக்கு இரணியூர்க் கோயிலையும் நேமம் கோயிலையும் பிள்ளையார்பட்டிக் கோயிலையும் இலுப்பைக்குடிக் கோயிலையும் அளித்துள்ளான்.

கி.பி. 718 ஆம் ஆண்டில் நகரத்தாரின் இரு வகையினருக்குச் சூரைக்குடிக் கோயிலையும் வேலங்குடிக் கோயிலையும் பாண்டிய மன்னன் அளித்துள்ளான்.

நகரத்தார்களுக்குப் பாண்டிய மன்னன் எட்டுக் கோயில்களையும் அளித்தான் என்ற செய்தி மட்டுந்தான் தெரிகிறது. எந்தப் பாண்டிய மன்னன் என்ற முழுமையான செய்தி கிடைக்கப்பெறவில்லை.

### நகரக் கோயில்களின் வளர்ச்சி

நகரக் கோயில்களின் வளர்ச்சி நிலைமையினை ஒவ்வொரு கோயிலிலும் அமைந்துள்ள உட் பிரிவுகளே வெளிப்படுத்தும்.

ஒரு கோயிலைச் சார்ந்தவர்கள் வேறு ஒரு கோயிலைச் சார்ந்தவர்கள் வீட்டில்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற கோத்திரக் கட்டுப்பாடு இருக்கிறது.

***With***

***Best Compliments***

**WELL WISHER**

**FROM JURONG**

***With***

***Best Compliments***

***from***

# TRIBSONS JEWELLERS

402 Orchard Road #01-08 Delfi Orchard

Singapore 238876

Tel : 7325115, 7326135

Fax : (65) 2351010



நேமம் கோயில்



இலுப்பைக்குடிக் கோயில்



சூரைக்குடிக் கோயில்

*With*

*Best Compliments*

*from*

# *ANIRA GLOBAL TRADERS PTE LTD*

10, Anson Road #43-15 International Plaza
Singapore 079903 Tel : 3246607 Fax : 3246614

• Importers • Exporters of Computer Pheripherals •
• Metals & Metal Scraps • Chemicals • Commodities •

*With*

*Best Compliments*

*from* msc

**FULL CONTAINER SERVICE THROUGHOUT THE WORLD**

**MSC Agencies (S) Pte Ltd**

64 Cecil Street #06-01 IOB Building, Singapore 049711

Tel : (65) 3252650 Fax : (65) 3252667

ஒரே கோயிலைச் சார்ந்தவர்கள் 'பங்காளிகள்' என்று அழைக்கப்படுவர்கள். அவர்கள் அண்ணன், தம்பி போன்றவர்கள். எனவே ஆண் மகனைத் தத்தெடுத்துக் கொள்ளும் போது தன் கோயிலைச் சார்ந்த குடும்பத்தார் வீட்டிலிருந்தே 'பிள்ளை கூட்டிக் கொள்வது' வழக்கம்.

இளையாத்தங்குடி, மாற்றூர் ஆகிய இரு கோயிலைச் சார்ந்த நகரத்தார்களின் மக்கள் தொகைப் பெருக்கம் (புள்ளிகள்) அதிகம் என்பதால், ஒரே கோயிலுக்குள்ளேயே திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் வந்துள்ளது. இவ்விரு கோயில்கள் ஒவ்வொன்றிலும் ஏழு உட்பிரிவுகள் உள்ளன. எனவே, ஒரு பிரிவினர் மற்ற ஆறு பிரிவினருள் யாரேனும் ஒருவர் வீட்டிலிருந்து பெண் எடுத்துக்கொள்கின்றனர். ஆனால், பிள்ளை கூட்டிக் கொள்ளும் போது, தங்கள் பிரிவிலிருந்து மட்டுமே கூட்டிக்கொள்வர்.

ஒரு கோயில் சார்ந்த மக்களின் எண்ணிக்கை பெருகியதாலேயே இப்புதிய வழக்கம் தோன்றியுள்ளது.

அடுத்து, ஒன்பது நகரக் கோயில்களிலும் உள்ள இறைவன், இறைவி திருப்பெயர்களையும் திருமணங்களில் எழுதப்படும் இசைவுப் பிடிமானங்களில் வரும் தொடர் அமைப்பில் காணலாம். இப்பட்டியலும் நகரக் கோயில்களின் வளர்ச்சியைக் காட்டும்.

**1, இளையாத்தங்குடிக் கோயில்**

இறைவன் பெயர்: கைலாச நாதர்
இறைவி பெயர்: நித்திய கல்யாணி

கேரளசிங்க வளநாடாகிய கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகர புரத்தில்,

உட்பிரிவுகள்:
1. ஒக்கூருடையார்
2. அரும்பாற்கிளையாரான பட்டணசாமியார்
3. பெருமருதூருடையார்
4. கழனிவாசல்குடியார்
5. கிங்கிணிக்கூருடையார்
6. பேரசெந்தூருடையார்
7. சிறுசேத்தூருடையார்

**2. மாற்றூர்க் கோயில்**

இறைவன் பெயர்: ஐந்நூற்றீசர்
இறைவி பெயர்: பெரிய நாயகி

கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்

**உட்பிரிவுகள்:**

1. உறையூருடையார் 2. அரும்பாக்கூருடையார்
3. மணலூருடையார் 4. மண்ணூருடையார்
5. கண்ணூருடையார் 6. கருப்பூருடையார்
7. குளத்தூருடையார்

**3. வயிரவன்பட்டிக் கோயில்**

இறைவன் பெயர்: வளரொளிநாதர்
இறைவி பெயர்: வடிவுடையம்மை

கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந் தெருவான வீரபாண்டியபுரத்தில்

1. சிறுகுளத்தூருடையார்
இதன் உட்பிரிவுகள்:
1. பெரிய வகுப்பு
2. தெய்யனார் (தெய்வநாயகர்) வகுப்பு
3. பிள்ளையார் வகுப்பு

**4. நேமம் கோயில்**

இறைவன் பெயர்: செயங்கொண்ட சோழீசர்
இறைவி பெயர்: சவுந்தரநாயகி

கேரளசிங்க வளநாட்டில் நேமமாகிய குல சேகரபுரத்தில்

1. இளநலம் உடையார்

**5. இலுப்பைக்குடிக் கோயில்**

இறைவன் பெயர்: தான்தோன்றீசர்
இறைவி பெயர்: சவுந்தரநாயகி

கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் இலுப்பைக்குடியான புகழிடங்கொடுத்த பட்டணத்தில்

1. சூடாமணிபுரம் உடையார்

**6. சூரைக்குடிக் கோயில்**

இறைவன் பெயர்: தேசிகநாதர்
இறைவி பெயர்: ஆவுநைாயகி

கேரளசிங்க வளநாட்டில் சூரைக்குடியான தேசிக நாராயணபுரத்தில்

1. புகழ் வேண்டிய பாக்கம் உடையார்

**7. வேலங்குடிக் கோயில்**

இறைவன் பெயர்: கண்டீசுவரர்
இறைவி பெயர்: காமாட்சி அம்மை

கேரளசிங்க வளநாட்டில் வேலங்குடியான தேசிக நாராயணபுரத்தில்

1. கழனி நல்லூருடையார்

**8. இரணியூர்க் கோயில்**

இறைவன் பெயர்: ஆட்கொண்ட நாதர்
இறைவி பெயர்: சிவபுரந்தேவி

*With*
*Best Compliments*
*from*

**STEADFAST INTERNATIONAL PTE LTD**

101 CECIL STREET #20-05 TONG ENG BUILDING SINGAPORE 069533
TEL : 2200107, 2222275
FAX : 2222289
TELEX : RS 33379 SFAST

**Y. MUBEEN DIAMOND PTE LTD**

NO. 16, RAFFLES QUAY #B1-29
HONG LEONG BUILDING
SINGAPORE 048581
TEL : 2233033, 4447028
FAX : 4432880

**MUBEEN FAR EAST TRADING PTE LTD**

NO.16, RAFFLES QUAY #B1-29
HONG LEONG BUILDING
SINGAPORE 048581
TEL : 2233033, 4447028
FAX : 4432880

*Importers and Exporters :* Cotton Yarn, Garments, Toor Whole, Matpe, Palm Olien, Granite, Steel Products, Cement and Frozen Sea Food

*With*
*Best Compliments*
*from*

ரங்கோலி கோலம் மற்றும்
பட்டுச் சேலைகள் கணக்கற்ற
வகையில் குவிந்து கிடக்கும்
சேலைகளின் சோலை வனம்

உங்கள்

**ஹனீபா டெக்ஸ்டைல்ஸ்**

120, டன்லப் ஸ்திரீட் சிங்கப்பூர் 209439

Chettiars' Temple Society Singapore



வேலங்குடிக் கோயில்



இரணியூர்க் கோயில்



பிள்ளையார்பட்டிக் கோயில்

*With*
***Best Compliments***
*from*

# UNIBUKIT (PTE) LTD

**Tanglin P.O. Box 0425**
**Singapore 912415**
**Cable Address :**
**"GUIDANCE" Singapore**
**Tel : 738-4346**
**Fax : 738-4206**

*With*
***Best Compliments***
*from*

# Muthu's Curry Restaurant Pte Ltd

76/78 Race Course Road Singapore 218575
Tel : 2937029, 2932389 Fax : 2995330

*நாவின் ருசிக்கேற்ப நல்ல உணவு வேண்டுமா?*
*இன்றே வாருங்கள்!*
*உண்டு மகிழ சிறந்த இடம்!!*

Chettiars' Temple Society Singapore

கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராசநாராயணபுரத்தில்

1. இரணியூர்த் திருவேட்பூருடையார்

**9. பிள்ளையார்பட்டிக் கோயில்**

இறைவன் பெயர்கள்: தேசி விநாயகப் பிள்ளையார் என்ற கற்பக விநாயகர் திருவீசர்; மருதீசர்
இறைவி பெயர்கள்: சிவகாமவல்லி; வாடாமலர் மங்கை

கல்வாச நாட்டில் இளையாத்தங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராசநாராயணபுரத்தில்

1. பிள்ளையார்பட்டியான திருவேட்பூர் உடையார்

நகரத்தார்கள் முதலில் நாகநாட்டில் வாழ்ந்த போது கோபதீசுவர சுவாமியை வழிபட்டுள்ளனர். சந்திரகுல கோத்திரம் என்ற ஒரே கோத்திரத்துடன் வாழ்ந்துள்ளனர். அந்த ஒரு கோத்திரத்திற்குள் பல வகைகளைப் பிரித்து வைத்துக்கொண்டு கொள் வினை கொடுப்பினைகளை மேற்கொண்டிருக்கலாம். பின்னர் ஏழு கோயில்களாகப் பிரிந்தனர். அதன் பிறகு கி.பி. 13ஆம் நூற்றாண்டில் இளையாத் தங்குடியில் ஒரு பிரிவினராகிய திருவேட் பூருடையார் என்ற வகையினர் இளையாத் தங்குடியிலிருந்து பிரிந்து சென்று இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய இரு கோயில் பிரிவு களைப் புதிதாகத் தோற்றுவித்தனர் என்று டாக்டர் வ.தேனப்பன் அறுதியிட்டுக் கூறுகிறார்.

**கோயில் புள்ளி விவரம்**

நகரக் கோயில்களில் நகரத்தார் குடும்பங்கள் 'புள்ளி' என்னும் பெரால் கணக்கிடப்படும். இந்த அடிப்படையிலேயே கோயில் காணிக்கை வசூலிக்கபெறும். 1984–ஆம் ஆண்டில் சோம. லெ. வெளியிட்ட 'செட்டிநாடும் செந்தமிழும்' என்னும் நூலில் கொடுக்கப்பட்ட நகரத்தார் புள்ளி விவரம் வருமாறு:

| | |
|---|---|
| 1. இளையாத்தாங்குடி | 4,900 |
| 2. மாற்றூர் | 5,426 |
| 3. வயிரவன் கோயில் | 4,274 |
| 4. நேமம் | 1,661 |
| 5. இலுப்பைக்குடி | 1,503 |
| 6. சூரைக்குடி | 1,050 |
| 7. வேலங்குடி | 41 |
| 8. இரணியூர் | 2,016 |
| 9. பிள்ளையார்பட்டி | 2,673 |
| மொத்தப் புள்ளிகள் | 23,544 |

**வட்டகை**

செட்டிநாட்டில் அமைந்துள்ள எழுபத்தைந்து ஊர்களைத் தெற்கு வட்டகை, மேல் வட்டகை, கீழ்ப்புத்தூர் வட்டகை, மேலப்புத்தூர் வட்டகை, பதினாறு ஊர் வட்டகை, நீண்ட கரைப் பிரிவு என ஆறு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். கோவில் நிர்வாகக் குழுவில் ஒவ்வொரு வட்டகைக்கும் சார்பாளர் இருக்குமாறு உரிய இடம் கொடுத்துள்ளனர். இது நகரத்தாரின் பொதுநலப் போக்கு நிருவாகத்தை எடுத்துக்காட்டுகிறது.

(ஒவ்வொரு வட்டகையிலும் உள்ள ஊர்களின் பெயர்களைச் சோம. லெ. யின் 'செட்டிநாடும் செந்தமிழும்' என்ற நூலில் 685 ஆம் பக்கத்தில் காணலாம்.

செட்டிநாட்டின் நான்கு எல்லைகள்:

"(வங்காள குடாக்) கடலுக்கு மேற்கு, பிரான் மலைக்குக் கிழக்கு, வைகை ஆற்றுக்கு வடக்கு, (புதுக்கோட்டை) வெள்ளாற்றிற்குத் தெற்கு இந்த நான்கெல்லைக்கு உட்பட்ட வேளாளர் பூமியாகிய இந்நாட்டிலேயே குடியிருக்கிறது" என்று பூங்கொன்றை வேலங் குடியில் நகரத்தார்கள் செய்த தீர்மானங்களில் ஒன்று கூறுகிறது.

மேற்கண்ட நான்கு எல்லைப் பகுதிக்குள் சொந்த ஊர்களை அமைத்துக்கொண்டு ஒன்பது நகரக் கோயில்களையும் சார்ந்து நின்று வாழ்பவர்களே நகரத்தார்களாகக் கருதப்பட்டனர். இப்போது 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடுகின்ற நோக்கில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நகரத்தார்கள் வாழ்ந்து வருகின்றனர்.

டாக்டர் வ. தேனப்பன் அவர்களின் சிறப்புக் கட்டுரையிலிருந்தும், 'ஒன்பது நகரக் கோயில்கள்' என்ற நூலிலிருந்தும் இவற்றைத் தொகுத்தவர் மு. சங்கரலிங்கம்.

---

இன்று தண்டாயுதபாணியை இந்தக் கோயில் கண்டுவழிபடும் பேறு பெற்றேன். இவ்வளவு தொலைவில் இந்தக் காட்சி காண்பேன் என்று நினைக்கவில்லை. ஆதலால் எதிர்பாராத இன்பம். கோயில் மிகத் துப்புரவாக இருப்பது கண்டேன். இங்கே முருகன் எல்லோருக்கும் காட்சியளிக்கிறான். இதனைச் செம்மையாக நடத்தி வருவோர் பாராட்டிற்குரியவர். என் நன்றி.

*தெ. பொ. மீனாட்சிசுந்தரன்*
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
3.1.63

*With*
***Best Compliments***
***from***

# Whatman

*leaders*
*in*
***separations***
*technology*

*Nilgiri's*

*introduces the best experiences in*
***Supermarket Shopping***

• Rice & Lentils • Spices & Curry Powders • Edible Oils & Ghee
• Pickles • Instant Foods • Snack Foods • Beverages
• Confectionery • Fresh Vegetables • Dairy Products
• Toiletries • Perfumes • OTC Health Care • Baby Care
• Home Care • Party needs

Products to satisfy every member of the family!

**Nilgiri's Supermarket Pte Ltd**

**88 Serangoon Road Singapore 217993**
**Tel : 3923921, 3923926 Fax : 2963174**

***Your need is our Service!***



இளையாத்தங்குடிக் கோயில்



மாத்தூர்க் கோயில்



வயிரவன்பட்டிக் கோயில்

Chettiars' Temple Society Singapore

*With*
*Best Compliments*
*from*

## *Nomanbhoy & Sons Pte Ltd*

**101, Cecil Street**
**#24-01, Tong Eng Building,**
**Singapore 069533**

**Tel : 224-1313**
**Fax : 221-8385**
**Telex : RS 26091 A/B NOMAX**

*85 Years of Excellence in the Spice Trade*

**With Compliments of:-**

**Nomanbhoy & Sons • Nomanbhoy International • I & C International • Spiced Quay**

*With*
*Best Compliments*
*from*

SUNSEEKERS HOLIDAYS

IATA **ESTABLISHED 1975 NATAS**

*Established & reliable IATA agency representing all*
*the major airlines operating out of Singapore.*
*Incentive / Group Travel Package Specialist / Travel / Insurance / Hotel*
*Tour Bookings to any Destination around the Globe.*
*Call our experienced staff for all your enquiries.*

## SUNSEEKERS (88) PTE LTD

400 ORCHARD ROAD #04-23/24 ORCHARD TOWERS SINGAPORE 238875
FAX : 7375877 TELEX : RS 25283 JETSET
**TEL : 7378266 • 7348080**

Chettiars Temple Society Singapore

# நகரத்தார் தெய்வத் திருப்பணிகள்

*- எஸ்ஸாரெம், கோலாலம்பூர்*

**பொருள்ஈட்டி அறம்பேணிப், புகழ்வளர்த்து,**
**நெறிநின்று, பொருவில் ஈசன்**
**அருள்ஈட்டி வாழ்ந்துவரும் தனவணிகர்,**[1]

எஞ்ஞான்றும், எவ்விடத்தும் மறவாதிருந்தவை சைவ சமயமும், தமிழ் மொழியுமாகும் என்பர் தமிழறிஞர் சோமலெ.

மதுரை மீனாட்சி கோயில் உட்பட 14 பெரிய திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்தவர்களான வயிநாகரம் குடும்பத்தைச் சேர்ந்த வித்வான் அ. இராமநாதன் செட்டியாரவர்கள், முன்னொரு நாள் தருமையாதினத்துக்கு எழுதிய சீட்டுக்கவி[2] ஒன்றில்,

**துஞ்சாத புகழ்மதுரை மீனாட்சி**
**இறைசோம சுந்த ரேசர்க்(கு)**
**எஞ்சாத திருப்பணியைக் காற்கோடி**
**பொருட்செலவில் இயற்றி உள்ளோம்.....**

என்று, தம் குடும்பத்தாரின் (தெய்வத் திருப்பணிச்) சிறப்பினைச் சுட்டுகிறார்.

**காசி விசாலாட்சி, கவிமதுரை மீனாட்சி**
**கட்டியுள்ள ஆடைகளும், கழுத்தில் உள்ள**
**பொன்னகையும்....................**
**ஆக்கிக் கொடுத்தவர்கள், அமர்ந்திருந்து**
**காத்தவர்கள்,**
**நாட்டுக்கோட் டைவளர்த்த நகரத்தார்**
**அல்லாமோ?**

என்பார் கவியரசு கண்ணதாசன். இவையெல்லாம் வெறும் தற்புகழ்ச்சி அல்ல; தம்பட்டமும் அல்ல; வரலாற்று உண்மைகள்!

'பொதுவாகத் தென்னிந்தியாவிலும், சிறப்பாகச் சோழ நாட்டிலும் இன்று நாம் காணும் சிறந்த கோயில்களை வாழ வைப்பவர்கள் நகரத்தார்களே;............ ஊதுவத்தியானது தன்னைப் பொசுக்கிக் கொண்டு பிறருக்கு மணம் கொடுப்பது போல, நகரத்தார்கள் எத்துணையோ இடையூறுகளைத் தாங்கியும், தாக்குதல்களுக்கு ஈடு கொடுத்தும் கோயில் திருப்பணிகளை முடித்திருக்கிறார்கள்' என்கிறார், அமெரிக்கப் பேரறிஞர் டாக்டர் பிலிப் சீகெல்மென்.

அவ்வாறு அவர்கள் செய்த தெய்வத் திருப்பணிகள் எண்ணில் அடங்காதவை; எழுத்தில் வடிக்க முடியாதவை.

**கொள்வதிலும், கொடுப்பதிலும் கோணிடாத**
**மக்கள்,**
**கொண்டுவிக்கப் போனநாட்டில் கோயில்கட்டும்**
**மக்கள்........**

என்பார் கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு.

ஆம், 'கொண்டு விற்கச்' சென்ற இடத்தில், ஈழத்தில் இவர்கள் கட்டிய கோயில்கள் பதினைந்துக்குக் குறையாதவை; பாடுபட்டுப் பணம் சேர்த்த பர்மாவில் சுமார் 60 திருக்கோயில்களும், மடங்களும்; மற்றும், இந்தோனீசியா, தாய்லாந்து, வியட்நாம், மொரீஷியஸ்.....இந்நாடுகளை விட்டு, இச்சமுகத்தினர் வெளியேற வேண்டிய இக்கட்டு ஏற்பட்டபோது, இவர்கள் விட்டுச்சென்ற கோயில் நகைகள்....... சொத்துகள்.....?

ஒரு சிறு உதாரணம்..........
ஈழத்தின் திருவண்ணை நகரில், 1879ஆம் ஆண்டு 'செட்டிமாரால்' கட்டப்பெற்ற கதிர்வேலாயுத சுவாமி (கதிரேசன்) கோயில், பல ஆண்டுகள் கழித்து, நிர்வாகத்தை யாரிடமும் ஒப்படைக்காமல், அவர்கள் (நகரத்தார்கள்) தாயகம் திரும்பியதிலிருந்து பல்லாண்டுகள் திருக்காப்பிடப்பட்டே இருந்தது. 1979 ஆண்டுவாக்கில் கோயில் நிர்வாகத்தை ஏற்ற உள்ளூர் மக்கள் அங்கிருந்த பெட்டகத்தைத் திறந்தபோது, அதில் 300 பவுன் தங்க நகைகளும், 200 தோலா[3] வெள்ளியும் (வெள்ளி அங்கிகளாக இருந்திருக்கலாம்.) இருந்தனவாம்! அதனால்தான்

**மாசற்ற பொன்னும், மணிவயிரம், இரத்தினமும்**
**தூசென்(று) எண்ணித் தூக்கிக்கொடுத்து**
**வந்தோம்.....**

என்று, கவியரசு கண்ணீர் சிந்திக் கவிதை வடிக்கிறார்.

ஆனால், இன்றைய நிலையிலும் செழிப்போடு திகழ்கின்ற - முறையோடு பேணிப் பாதுகாக்கப் பெறுகின்ற - இன்னமும் நகரத்தார்களின் நிர்வாகத்திலேயே இருக்கின்ற திருக்கோயில்கள் மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் மட்டுமே உள்ளன. இவையாவது எதிர்காலத்தில் நகரத்தார்களின் வமிசாவளியினர் கரங்களில் இருக்கவேண்டாமா என்பதை, இப்போதைய **விடாக்கண்டர்**களான பெரியவர்கள்தாம் தீர்மானிக்க வேண்டும். இறைபணியில் தனிப்பட்ட விருப்பு–வெறுப்புகளும், காழ்ப்பு உணர்வுகளும் குறுக்கிடலாமா என்பதை.

1. நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு – வித்வான் அ. இராமநாதன் செட்டியார்.
2. பிற்காலத்தில் பலவாக வளர்ந்த இலக்கிய வகைகளுள் ஒன்று. கடிதங்கள் போலப் பிறர்க்கு எழுதியனுப்பும் கவிதைகள் சீட்டுக்கவிகள் எனப்பெறுகின்றன. அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்னும் கவிஞரின் இத்தகைய கவிதைகள் சுவை மிகுந்தவை; கற்பனை மெருகு அமைந்தவை என்கிறார் டாக்டர் மு.வ – தமிழ் இலக்கிய வரலாறு.
பதினொராந் திருமுறையில் முதலாவதாக அமைந்துள்ள திருவாலவாயுடையாரின் திருமுகப் பாசுரமும் இத்தகையதே. பாண பத்திரன் பொருட்டுச் சேரமான் பெருமாளுக்குச் சிவபெருமான் அனுப்பிய திருமுகம்.
3. ஒரு தோலா என்பது, (அக்காலத்தில்) ஒரு ரூபா எடை.

*With*
*Best Compliments*
*from*

**SEATAR LINES PTE LTD**

**45, Upper Weld Road, Singapore 207402**
**Tel : 296 4836, 296 9804 Fax : 296 7927**

Service that is dependable in
Every way and
Aimed at providing
Total satisfaction
At every stage of your
Requirement.

**We offer regular container service between Singapore and Indian ports.**
**Best freight rates and excellent service.**

**Please contact us for your export shipments**
**Tel : 296 4836, 296 9804 Fax : 296 7927**

**SEATAR LINES : Perfection in Every Performance**

WISHING THE
CHETTIARS' TEMPLE
CONSECRATION CEREMONY
A COMPLETE SUCCESS

***TRANSWORLD*** RESOURCES PTE LTD

**149 Silat Avenue #09-48**
**Singapore 160149**
**Tel 2755188 Fax 2755288**

இவர்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.[4]

பரந்த பாரதத்துக்குள்ளே பரவிக் கிடக்கும் பாடல் பெற்ற தலங்கள் 276.[5] இவற்றில் பல திருக்கோயில்களோடு, வேறு சில சிவாலயங்களு மாகத் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 160 திருக்கோயில்கள் நகரத்தார் திருப்பணி பெற்றுள்ளன.[6] 1953ஆம் ஆண்டுப் புள்ளிவிவரப்படி, இத்திருப்பணிகளின் அப்போதைய மதிப்பு, சுமார் 6 கோடி ரூபாய்.

இவற்றில், ஒரு சில பாடல்பெற்ற தலங்களைத் தவிர ஏனைய எல்லாத் தலங்களுக்கும் நேரில் சென்று விவரங்களைச் சேகரித்துத் **திருமுறைத் தலங்கள்** என்னும் நூலினைத் தொகுத்தவர் புலவர் பு.மா.ஜயசெந்தில்நாதன், திருக்காளத்தியைப் பற்றி எழுதும் புலவர், 'பொன்முகலி ஆற்றின் படிக்கட்டில் இறங்கும்போதே, முதற்படியில் இடப்பால் தேவகோட்டை மெ.அரு.நா.இராமநாதன் செட்டியாரின் உருவச்சிலை உள்ளது. கி.பி.1912ஆம் ஆண்டிலேயே ஒன்பது இலட்ச ரூபாய் செலவு செய்து இத்திருக்கோயிலில் திருப்பணிகள் செய்து, மகா கும்பாபிஷேகத்தைச் செய்த பெரும் புண்ணியசாலியான - கைகூப்பி வணங்கத் தக்க அவர், கைகூப்பி வணக்கம் சொல்லும் அமைப்பிலேயே காட்சி தருகின்றார். **சிவாலயத் திருப்பணிகளில் நகரத்தார் பங்கு எஞ்ஞான்றும் நன்றிப் பெருக்கோடு நினைந்து போற்றப்பட வேண்டியதாயிற்றே!'** என்று மனம் நெகிழ்ந்து குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் அவரே தம் நூலில், நகரத்தார் 150க்கும் குறையாத பாடல்பெற்ற தலங்களில் திருப்பணி செய்திருந்தும், மிகச் சில கோயில் திருப்பணிகளையே குறிப்பிட்டுள்ளார். தவறு அவருடையதன்று; அவருக்குக் கிடைத்த தகவல்கள் அம்மட்டே!

நகரத்தார்கள் செய்த - செய்கின்ற மாபெரும் திருப்பணிகளை, மற்றவர்கள், **தூசென்று** தூக்கி எறிந்து விடாதிருக்க - மறந்து விடாதிருக்க - மறைத்து விடாதிருக்க, அவை அனைத்தும் அந்தந்தக் கோயில்களில் கற்களில் பொறிக்கப்பெற வேண்டும்.[7]

செட்டிநாட்டின் எல்லைக்குள்ளும், அதனை ஒட்டியும் உள்ள ஊர்களில், நகரத்தார் திருப்பணி பெற்ற, மற்ற மூன்று வகைக் கோயில்கள் அமைந்துள்ள முறையை உற்று நோக்கினால், பரந்து கிடக்கும் சமூகம், ஆலயங்களின்வழி, எப்படி ஓர் ஒற்றுமை உணர்வைத் தோற்றவித்துள்ளது என்பது புலப்படும்.

குன்றக்குடியை மையமாக வைத்தே[8] நகரத்தார்களின் ஒன்பது நகரக் கோயில்களும்[9] அமைந்துள்ளன. சற்றேறக்குறைய ஓர் இலட்சம் மக்கள் தொகை[10]யைக் கொண்ட நகரத்தார் சமூகத்தினர், இந்த ஒன்பது கோயில்களுக்குள் அடங்கி விடுகின்றனர். சுமார் 1700 சதுர கிலோமீட்டர் பரப்பளவு[10] உள்ள செட்டிநாட்டின் எந்த மூலைமுடுக்கில் வாழ்ந்தாலும், ஒரு கோயிலின் உட்பிரிவைச் சேர்ந்தோர் அனைவரும் பங்காளி (உடன்பிறவாச் சகோதரர்கள்) ஆகிவிடுகின்றனர். இவ்வாறு பரந்துபெற்ற நகரத்தார் சமூகத்தினரிடையே, தந்தைவழி இரத்தப் பிணைப்பை ஏற்படுத்துகின்றன இக்கோயில்கள். (இருப்பினும், பங்காளிகள் என்ற முறையில் ஒரு கோயில் (உட்பிரிவுக்)காரர்கள் **அனைவரும்** ஒன்றுகூடுவது என்பது மிக அரிதாகவே நிகழ்கிறது.) நகரத்தார் சமூகம் இக்கோயில்களின் திருப்பணிக்குச் சுமார் 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவிட்டுள்ளது.[11]

அடுத்து, அவரவரும் குடியேறிய ஊர்களில் (தற்போது, செட்டிநாட்டு எல்லைக்குட்பட்ட 76 ஊர்களில் மட்டுமே) வாழ்ந்து வருகின்றனர். நகரத்தார் சமூகத்தினர், "சிவாகமத்தைத் தவிர்த்து அந்நிய மதங்களில் சேர்வதில்லை" என உறுதி பூண்ட தங்கள் சாதிமுறை நியாயங்களுக்கேற்பச் சிவாலயங்களை அமைத்துக் கொண்டனர். (பூங்கொன்றை வேலங்குடிக் கல்வெட்டு) அந்தந்தக் கிராமத்திலும், நாட்டார் ஊரார்களின் கோயில்களும் இருப்பதால், நகரத்தார்களின் இந்தக் கோயில்களும் **நகரச் சிவன் கோயில்கள்** என்றே வழங்குகின்றன.) இவற்றில் சுமார் 12 ஊர்கள் தவிர்த்த ஏனைய எல்லா ஊர்களிலும் நகரச் சிவன்கோயில்கள் உள்ளன. அந்தந்த ஊரிலும் உள்ள எல்லா ஒன்பது நகரக்கோயில் நகரத்தார்களுக்கும் பொதுவானவை இக்கோயில்கள். (தேவகோட்டையிலேயே அதிகமான நகரத்தார்கள் வாழ்வதாகக் கூறப்பெற்றபோதிலும்[12], காரைக்குடியில்தான் எல்லா ஒன்பது நகரக் கோயில் நகரத்தார்களும் வாழ்கிறார்கள்.) ஒன்பது நகரக் கோயில்களின் எந்த உட்பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், உள்ளூர் நகரத்தார் அனைவரும் அந்த ஊர் நகரச் சிவன்கோயிலுக்கு அடிமைப்பட்டவர்களே. (எந்த ஊராக இருந்தாலும், **இளையாற்றங்குடியின் ஒக்கூர் நகரத்தாருக்கே** முதல் மரியாதைவழங்கப்பெறுகிறது.) இந்தக் கோயில்களின் திருப்பணிகளுக்கு 1953ஆம் ஆண்டுக் கணக்குப்படி சுமார் 4 கோடி ரூபாய் செலவிடப்பெற்றிருக்கிறது.

அடுத்து, நகரத்தார் வழிபடும் குலதெய்வக் கோயில்கள், செட்டிநாட்டு எல்லைக்குள்ளும், அதை ஒட்டியுள்ள பகுதிகளிலும் நூற்றுக்கு மேற்பட்டு

---

4. இங்கு கூறப்பெறுபவை, கட்டுரையாளனுடைய சொந்தக் கருத்துகள்; எவ்வகையிலும் மலர்க் குழுவினர் இக்கருத்துகளுக்குப் பொறுப்பாக மாட்டார்கள்.
5. திபேத் (இமயத்)தில் உள்ள திருக்கயிலாயமும், ஈழ நாட்டில் உள்ள இரு தலங்களுமாக 274 தலங்கள் என்று முதலில் கருதப்பெற்று வந்தன. ஆனால், பின்னர் கல்வெட்டுகளின்வழி தெரியவந்த திருவிடைவாய், திருக்கிளியன்னவூர் ஆகியவற்றையும் சேர்த்து இப்போது 276 தலங்கள் ஆகியுள்ளன. – திருமுறைத் தலங்கள், புலவர் பு.மா.ஜயசெந்தில்நாதன்.
6. இத்தலங்களின் விவரங்களையும் திருப்பணி செய்த நகரத்தார், செய்யப்பெற்ற திருப்பணிகள் போன்ற தகவல்களையும், வித்வான் அ.இராமநாதன் செட்டியாரவர்கள் தொகுத்த நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு என்னும் நூலில் (பக்.189–273) விரிவாகக் காணலாம்.
7. கொப்பனாபட்டி–குழிபிறை வழியில் உள்ள சுந்தரம் என்னும் ஊரின் தான்தோன்றி ஈசுவரர் கோயிலில் காணப்பெறும் இராஜராஜ சோழன் காலத்துக் (இதுபோல மற்ற பெரிய திருப்பணிகளும் காலங்காலமாக நினைவு கூரப் பெற வேண்டுமானால் கற்களில் பொறித்து வைக்கப்பெற வேண்டுவது இன்றியமையாததாகும்.) கல்வெட்டு ஒன்றில், அக்கோயிலுக்கு நகரத்தார் பொன் வழங்கியது குறிப்பிடப் பெற்றுள்ளது –செட்டிநாடும் செந்தமிழும், சோமலெ.
8. செட்டிநாட்டின் நடுவில் அமைந்துள்ள குன்றக்குடியை வைத்தே கிழக்கு, மேற்கு, தெற்கு வட்டகைகள் எனச் செட்டிநாட்டுப் பகுதிகள் வழங்கிவருவதாகச் சொல்லப்பெறுகிறது. – செட்டிநாடும் தமிழ்நாடும்.
9. இளையாற்றங்குடி, இரணியூர், இலுப்பைக்ககுடி, சூரைக்குடி, நேமம், பிள்ளையார்பட்டி, மாத்தூர், வயிரவன்பட்டி, வேலங்குடி.
10. ஒன்பது நகரக் கோயில்கள் – டாக்டர் வ.தேனப்பன்.
11. 1953–ஆம் ஆண்டின் மதிப்பீடு
12. 1988ஆம் ஆண்டுப் புள்ளிவிவரப்படி, தேவகோட்டையில் 3127 புள்ளிகளும், கரைக்குடியில் 2309 புள்ளிகளும் உள்ளன. – மதுக்கார நாச்சியம்மன்

*With*
**Best Compliments**
*from*

B.H. MELWANI
MOTI C. MELWANI
ASHOK B. MELWANI

*With*
**Best Compliments**
*from*

தண்டபாணி கம்பெனி
**THANDAPANI CO.**
GENERAL & PROVISION MERCHANTS

சுத்தமான மளிகை பொருட்கள் மலிவான விலையில் கிடைக்குமிடம்

124, Dunlop Street, Singapore 209443
Tel : 2923163

இருக்கின்றன.[13] இவற்றில் பெரும்பாலான கோயில்களில், வெவ்வேறு ஊர்களில் வாழும் வெவ்வேறு நகரக்கோயில்களைச் சேர்ந்தவர்களான நகரத்தார், நாட்டார்-ஊராருடன் சேர்ந்து வழிபடுகின்றனர். இக்கோயில்களில் பெரும்பாலன வற்றை நகரத்தார்களே திருப்பணி செய்துள்ளதோடு, தொடர்ந்து பராமரித்தும் வருகின்றனர். இக்கோயில்களைப் பற்றிய முழுமையான தகவல்களே இதுவரை யாருக்கும் தெரியாமல் இருந்ததால், (யாரும் அதில் அதிக அக்கறை செலுத்தாது இருந்ததால்), அவற்றின் திருப்பணிக்கு நகரத்தார் எவ்வளவு செலவிட்டிருப்பார்கள் என்று அறிந்து கொள்ள முடியவில்லை.

இவற்றின்வழி, செட்டிநாட்டின் வெவ்வேறு ஊர்களைச்சேர்ந்த ஒரு (நகரக்) கோயில் பங்காளிகள், ஒன்பது நகரக் கோயில்களில் ஒன்றை வழிபடுகின்றனர் என்பதும், ஒவ்வோர் ஊரிலும் உள்ள நகரச் சிவன் கோயில்களை, அந்தந்த ஊரிலுள்ள எல்லா (நகர)க் கோயில் பங்காளிகளும் வழிபடுகின்றனர் என்பதும், வெவ்வேறு ஊர்களில் உள்ள வெவ்வேறு (நகரக்) கோயில் பங்காளிகள் சேர்ந்து ஒரு குலதெய்வக் கோயிலை வழிபடுகின்றனர் என்பதும் புலனாகிறது. இந்தக் கோயில்கள், இவற்றை ஒட்டிய மடங்கள், நகர விடுதிகள், நந்தவனங்கள் ஆகியவற்றுக்கும், பாடல் பெற்ற தலங்கள், வேறு பெரிய திருக்கோயில்கள், வேத - ஆகம - திருமுறைப் பாடசாலைகள் ஆகியவற்றுக்கும், **சிறியதொரு சமுகம்** எவ்வளவு **பெரிய தொகையைச்** செலவிட்டிருக்கிறது-செலவிட்டுவருகிறது என்பதை எண்ணிப் பார்த்தால், யாரும் மலைக்கவே செய்வார்கள்.

சைவமும், தமிழும் தழைத்தினிதோங்கப் பாடுபட்டுவரும் நகரத்தார் சமுகம், வேதாந் தத்தையும், வைணவத்தையும் மறந்துவிடவில்லை.

வேதாந்தக் கொள்கைக்கு விளைநிலமாக அமைந்த இடமே, கோவிலூர் மடந்தான்[14] என்றும், தமிழில் வேதாந்தத்தை அறிய வேண்டுமானால் கோவிலூர் மடமே சரண் என்றும் கூறுவர்.[15]

'தென் திருப்பதித் திருவேங்கடமுடையான் திருக்கோயில்'' என்று சிறப்பித்துக் கூறப்பெறும் அரியக்குடி ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கோயில் உருவாவதற்குக் காரணமாக இருந்தவர்களே நகரத்தார்கள்தாம்.[16] இராமாயணம் (பட்டாபிஷேகம்) படிக்காத நகரத்தார் குடும்பங்களா செட்டிநாட்டில்? கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்க்க, இன்னொரு சா.கணேசன் அன்றோ பிறந்து வர வேண்டும்?

தமிழையும், சமயத்தையும் இணைத்து இறைவனுக்குத் தமிழ்ப் பாமாலைகளைச் சூட்டி மகிழ்ந்த தேவகோட்டை வீ.ர.லெ.சிந்நயச் செட்டியார் (1855-1900), பாடுவார் முத்தப்பர் (19ஆம் நூற்றாண்டு) வயிநாகரம் வித்வான் அ. இராமநாதன் செட்டியார் (1885-1944) போன்ற நகரத்தார் கவிஞர்கள் பலர் செய்த தெய்வத் **தமிழ்த்** திருப்பணிகளை மறந்துவிட முடியுமா? அண்மையக் காலத்தில் கவியரசர் கண்ணதாசன், இளையோரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் இந்து மதச் சிறப்பினை ஏட்டில் வடித்துக் கொடுத்ததை எவரேனும் மறுப்பரோ?

சைவ-வைணவத் திருத்தலங்களைத் தொகுத்து அறிமுகப்படுத்தும் வகையில், ராய.சொ எழுதிய **திருத்தலப் பயணம்,** நெற்குப்பை பழ.பெரி. பெரியகறுப்பன் செட்டியார் என்பவர் எழுதிய **சிவக்ஷேத்திர விளக்கம்** என்னும் நூல்கள், அக்காலத்திலேயே சிறந்த தல வழிகாட்டி நூல்களாகத் திகழ்ந்து, நகரத்தார் பெருமக்கள் செய்த தெய்வத் தமிழ்த் திருப்பணிகளைத் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

கல்கத்தா நகரத்தார்களின் மகமைப் பணத்தைக் கொண்டு மிக நீண்ட காலத்திற்கு முன்னர் தொடங்கப் பெற்ற **காசி நகரச் சத்திரம்**, இன்று ஆல் போல் தழைத்து, வடநாட்டின் தலையாய தலங்கள்[17] அனைத்திலும் கிளைச் சத்திரங்களை அமைத்துக், குறிப்பாக யாத்திகர்களான நகரத்தார் தங்குவதற்குப் பேருதவி புரிந்து வருகிறது. சிவராஜதானியான காசியில் ஸ்ரீவிசுவநாதருக்குச் செய்யப் பெற்றுவரும் வழிபாடுகளும்[18], அன்னபூரணிக்குச் செய்யப்பெறும் மூன்றுகால வழிபாடுகளும், விசாலாட்சி - நகரேஸ்வரர் கோயில்களின் நிர்வாகமும், நகரத்தார்களின் தெய்வத் திருப்பணிகளுக்கு **மகுடம் வைத்தது** போல் திகழ்கின்றன.

●

**நகரத்தார் செய்த நற்றிருப்பணிகளைத் தொகுக்க நற்றுணை புரிந்த நல்ல பல நூல்கள்:**

அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள் – சோமலெ, 1979
இராங்கியம் பெரியகறுப்பண்ண சுவாமி கோயில் குடமுழுக்கு விழா மலர், 1987
ஒன்பது நகரக் கோயில்கள் – டாக்டர் வ.தேனப்பன், 1990
கோட்டையூர் சிவாலயத் திருக்குட நீராட்டு மலர் – பதிப்பாசிரியர்: சோமலெ, 1980
கோவிலூர் சிவாலயத் திருக்குட நீராட்டு மலர் – பதிப்பாசிரியர்: சோமலெ, 1978
செட்டிநாடும் செந்தமிழும் – சோமலெ, 1984
திருமுறைத் தலங்கள் – புலவர் பு.மா.ஜயசெந்தில்நாதன், 1988
நாட்டரசன்கோட்டை கண்ணுடையநாயகியம்மன் கும்பாபிஷேக நகரத்தார் திருப்பணி மலர் – பதிப்பாசிரியர்: பேராசிரியர் சுப.இராமநாதன், 1989
நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு–தொகுத்தவர்: வித்துவான் வயிநாகரம் அ.இராமநாதன் செட்டியார், 1953
மதுக்கார நாச்சியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக மலர், 1990
மலாயாவின் தோற்றம் – பெ.நா.மு.முத்துப்பழனியப்ப செட்டியார், 1938

13. நகரத்தார் வழிபடும் 108 குலதெய்வக் கோயில்களைப் பற்றிய தகவல்களைக் கூறுகிறது, இக்கட்டுரையாளன் தொகுத்து வெளியிட்டுள்ள நகரத்தார்களின் குலதெய்வங்கள் என்னும் நூல்.
14. காரைக்கடிக்கு அருகில் உள்ள இது, நகரத்தார்களின் ஒரே ஆதினமாகத் திகழ்கிறது.
இம்மடத்திற்கும், இங்குள்ள கோயிலுக்கும், நகரத்தார்கள் சுமார் 20 இலட்சம் ரூபாய் செலவிட்டுள்ளனர். – கோவிலூர் மலர், 1978
15. செட்டிநாடும் செந்தமிழும்
16. இக்கோயில் பற்றிய விரிவான தகவல்களை 'நகரத்தார்களின் குலதெய்வங்கள்' நூலில் (பக். 540-545) காணலாம்.
17. அயோத்தி, அலஹபாத், காசி, கயா, நாசிக் பஞ்சவடி போன்றவை அவற்றில் சில.
18. 1863ஆம் ஆண்டு முதல் ஸ்ரீவிசுவநாதருக்குத் திருவனந்தல், உச்சிக்காலம், அர்த்தயாமம் ஆகிய வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

# THE WORLD TRADERS



***AGENTS FOR WORLD FAMOUS GERMAN PIANOS :-***

**BRANDS ZIMMERMANN, C. BECHSTEIN, FEURICH, W. HOFFMANN**

FEURICH

**IMPORTERS / EXPORTERS, MANUFACTURERS' REPRESENTATIVES ALL KINDS OF TEXTILES, FURNISHING, UPHOLSTERY, CURTAIN FABRICS, CARPETS, WALLPAPERS, MEN'S SHIRTINGS AND SUITINGS, BRIDAL WEAR, LACES, DENIMS, LADIES DRESS FABRICS, EDGINGS. TRIMMINGS, YARNS, HAIR INTERLINING, RAYON LINING, YARN, HANDLOOMS & FERTILIZERS.**

**Also Suppliers Of:**
**• CEMENT • BITUMEN/ASPHALT • UREA •**
**35, Selegie Road #03-13/14/15,**
**Parklane Singapore 188307**

**Tel : 337 8320, 338 8230 Fax : 338 4369, 334 4625**
**Cable : "TRADERS" Singapore Res.: 299 2010**
**Mailing Address :ROBINSON POB 1526**
**SINGAPORE 903026**

Room 202, 2nd Floor
86 Jalan Masjid India
50100 Kuala Lumpur
Malaysia
Tel : 02-03-2988320



பண்டிட் சின்னக்காளை சொக்கலிங்கம்.
28.1.96 மாண்புமிகு தமிழக ஆளுநர் டாக்டர் M. சென்னா ரெட்டி யிடமிருந்து அகஸ்தியர் விருது பெற்றார். (மூலிகை மருந்துகள் வர்த்தக, வளர்ச்சிக்காக)

***With Best Compliments from***



சித்த மருத்துவ குருகுலம் (பி) லிமிடெட்

(30.3.1996 முதல் தென் கிழக்கு ஆசியாவுக்கான IMPCOPS (இந்தியா) தயாரிப்பு மருந்துகளுக்கான ஸ்டாக்கிஸ்ட் & விநியோகஸ்தர்கள்)

# SIDDHA MARUTHUVA GURUGULAM PTE LTD

இரண்டாயிரம் (2000) ஆண்டுகளுக்கு முன் உள்ள ஓலைச்சுவடிகளைக் கொண்டு பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து, நாள்பட்ட நோய், அதற்கான இயற்கை மருந்துகள் வழி பூரண குணம் பெற, இலவச நல்ஆலோசனைகளுக்கு நேரில் அல்லது கடிதம் மூலம் கிழ்க்காணும் முகவரிகளுடன் தொடர்புகொள்ளலாம்.

**Singapore: Head Office:**
Siddha Maruthuva Gurugulam Pte Ltd
48, Campbell Lane,
Singapore 209920
Tel : 2975730, 2978569
Fax: 2975730

**Madras:**
Tamil Maruthuva Gurugulam
(Herbal Farm) R.M. Pillai Pannai
(20 acres)
Avadappoiggai-623208
O. Siruvayal (PO)
Karaikudi-Tk PM District
Tamil Nadu, India
Tel : 001-91-4565-33394
001-91-4565-33396
001-91-4577-64283

Siva ENT Hospital
94, Lloyds Road
Madras 600 014
Tamil Nadu, India
Tel : 001-9144-8260451
001-9144-8281363
001-9144-8255470

i) Singapore - Sri Sivan Temple since 6th April 1996 On the first Sunday of every month
ii) India - Since 8th January 1992

# சைவ இலக்கியம்

*டாக்டர் சபா. அருணாசலம்*
தேவகோட்டை

உலகின் மிகத் தொன்மையான சமயங்களுள் சிந்தனை நுண்மையால் செழிப்புற்றுத் தத்துவ உள்ளடக்கத்தால் இன்றும் தலைசிறந்து நிற்பது சைவசமயமாகும். சிவனை வழிபடுவோர் சைவர்; அவர்கள் வகுத்த சமயமே சைவசமயம்; அவர்கள் ஆராய்ந்தறிந்து தேர்ந்து தெளிந்த சமய உண்மையே பதிபசுபாசக் கொள்கையாம். சிவ வழிபாடு என்று தோன்றியது என்று ஆய்ந்தறிவது கடினம். வேதகாலத்திற்கு மிகவும் முற்பட்டதாகக் கருதப்படும் சிந்துவெளி நாகரிகத்தில் சிவவழிபாட்டுத் தடயங்களைக் காணுகிறோம்.

வேதகாலத்திலும் சிவ வழிபாடு பெருவழக்காக இருந்தமைக்குச் சான்றுகள் உள. தமிழ் இலக்கியங்களில் மிகத் தொன்மையான சங்க இலக்கியங்களிலேயே சிவபெருமானைப் பற்றிய குறிப்புக்கள் விரவியிருக்கக் காணுகிறோம்.

**"நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும் நீயே'**

என ஔவையார் அதிகமானைச் சிவன் போல வாழ்க என வாழ்த்துகிறார். சிலப்பதிகாரத்தில் "பிறவாயாக்கைப் பெரியோன் கோவிலும்" "நுதல் விழி நாட்டத்து இறையோன் கோவிலும்" காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தமையை இளங் கோவடிகள் காட்டுகிறார். சிலப்பதிகாரத்தோடு ஒட்டிப் பிறந்த இரட்டைக் காப்பியம் எனக் கருதப்படும் 'மணிமேகலை' யில்தான் முதன்முதலாகச் சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கை செறிவாக இலக்கணமாகக் கூறப்பட்டுள்ளமையைக் காணு கின்றோம். முதன்முதல் சைவம் என்ற சொல் மணிமேகலைக் காப்பியத்தில்தான் இடம் பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

சங்கம் மருவிய காலத்திற்குப்பின் பக்தி இலக்கியங்களின் தோற்றம் நிகழ்ந்தது. சங்ககாலம் போலக் காப்பிய காலம் போலப் பிற செய்திகளின் ஊடே, கதைகளின் இடையே சமயக் குறிப்புக்களை உணர்த்துவதை விடுத்து சமயத்தையும் கடவுளரையும் பாடுபொருளாக வைத்துப் பாடும் பக்தி இலக்கியங்கள் தோன்றின. அவ்வாறு தோன்றியவற்றுள் தமிழில் சைவ சமய இலக்கியங்களே பிற சமய இலக்கியங்களுக்கு வழிகாட்டியாகத் தோன்றின. காரைக் காலம்மையாரின் மூத்த திருப்பதிகம், அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை போன்ற நூல்களே சைவசமயத் தோத்திர நூல்களின் தோற்றுவாயாகும். சைவசமயத்தில் வழிபாட்டு நூல்களாம் தோத்திரங்களும், தத்துவ விளக்கங் களாம் சாத்திர நூல்களும் இன்றும் சைவ சமயத்தை நாம் உணர்ந்து இறைவனை வழிபடுவதற்கு வழிகாட்டிகளாக - உலகிற் பிறந்த உண்மையறிந்து உய்தி பெறுவதற்கு வழிகாட்டும் ஒளிவிளக்குகளாக நிறைந்து காணப்படுகின்றன. இவற்றுள் வழிபாட்டு நூல்களைச் சைவ இலக்கியங்கள் என்றும் தத்துவ சாத்திர நூல்களைச் சைவ சித்தாந்த இலக்கண நூல்கள் என்றும் கூறலாம். இக்கட்டுரையில் நாம் சைவ இலக்கிய நூல்களை மட்டும் தொகுத்துக் காண்போம்.

சைவ இலக்கியங்களின் தொகுப்பு பன்னிரு திருமுறையாகும். தனித்தனி நூல்களை, பாடல்களை இவ்வாறு தொகுப்பாக்கிய தொண்டு வழிபடற் குரியது. இல்லையேல் சில சைவசமய இலக்கியங்கள் நமக்குக் கிடைக்காமலே போயிருக்கலாம். சில சைவ சமய அருட் புலவர்களை நாம் அறியாமலே இருந்திருப்போம். தேவாரப் பாடல்கள் பல்லாயிரக்கணக்கானவை எனினும் சில ஆயிரம் பாடல்களே கிடைத்துள்ளன; அவை முதல் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன என்றும் கூறுகின்றனர். தேவாரப் பதிகங்களைப் பாடிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரர் ஆகியோர் மூவர் முதலிகள் என்றழைக்கப் படுகின்றனர். ஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பாடல்கள் முதல் மூன்று திருமுறையாகவும், திருநாவுக்கரசர் தேவாரம் 4, 5, 6 ஆகிய திருமுறைகளாகவும், சுந்தரர் தேவாரப் பாடல்கள் ஏழாம் திருமுறையாகவும் தொகுக்கப் பெற்றுள்ளன.

**திருஞான சம்பந்தர் தேவாரம் -
முதல் மூன்று திருமுறைகள்**

திருஞானசம்பந்தரைக் குளக்கரையில் தனியே விட்டுத் தந்தை குளிக்கப் போனார். நீரில் மூழ்கிக் குளித்த தந்தையைக் காணாது பிள்ளை அழுதது. அம்மா, அப்பா என்று அழைத்து அழுத குழந்தையின் குரல் கேட்டு அம்மையப்பராகத் திருத்தோணி புரத்தீசரும் உமையம்மையும் உடன்தோன்றினர். சிவபிரான் அருளாணையால் அம்மை ஞானப்பாலைப் பொன்கிண்ணத்தில் ஊட்டினாள். தந்தை குளித்து மேலேறி வந்ததும் யார் கொடுத்த பாலை உண்டாய் என்று கடிதோச்சி மெல்ல எறிந்து கேட்க ஞானக் குழந்தை அம்மையப்பன் திருத்தோற்றத்தைக் கைகாட்டி

**தோடுடைய செவியன் விடையேறி ஓர்தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே**

என்று பாடியது.

*With*

***Best Compliments***

***from***

# WENDER CONTAINER LINE

**WENDER SHIPPING AGENCIES PTE LTD**

41-A Amoy Street, Singapore 069867

Tel : 2246744 (5 Lines) Fax : 2230972

ராயல் சாரி பேலஸ்

# ROYAL SAREE PALACE



திருமண பட்டுச் சேலைகளுக்கு

உங்கள் அபிமான ராசியான

ஜவுளி நிறுவனம்

**WEDDING SAREES SPECIALIST**

**132 DUNLOP STREET,**

**SINGAPORE 209450**

**TEL : 3367885**

**FAX : 3369495**



திருஞானசம்பந்தருடைய தேவாரப் பதிகங்கள் அனுபவப் பாடல்கள்; மந்திர ஆற்றல் நிறைந்த பாடல்கள்; அவருடைய பாடல்களை இன்று நாம் உள்ள முருகி ஓதினால் அவர்பெற்ற அதே பயனை நாமும் பெறலாம் என வாழ்க்கையில் அனுபவித்தறிந்த பெரியோர்கள் கூறுகின்றனர். பாண்டியனின் வெப்புநோய் தவிர்த்துக் கூன்பாண்டியனை நின்றசீர் நெடுமாறன் ஆக்கிடத் திருநீறு பூசித் திருஞானசம்பந்தர் பாடிய திருநீற்றுப் பதிகம் இன்றும் நோய்தீர்க்கும் தமிழ் மந்திரமாகும்.

திருஞானசம்பந்தர் யமகம், சித்திரக்கவி, நாகபந்தம், ரதபந்தம், எழுகூற்றிருக்கை எனப்பல புதுமையான பாவகைகளையும் படைத்துச் சைவ இலக்கியத்துக்குச் சிறப்புச் சேர்த்துள்ளார். இவற்றைச் சேக்கிழார் ஞானசம்பந்தர் படைத்த மூல இலக்கியங்கள் என்று குறிப்பிடுவார். திருஞான சம்பந்தருடைய பதிகங்கள் அனைத்திற்கும் பொதுவான ஓர் அமைப்பு உண்டு. ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாம் திருப்பாடலில் இராவணனைப் பற்றிய குறிப்பும் ஒன்பதாம் திருப்பாடலில் திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய வரலாறு பற்றிய குறிப்பும் பத்தாம் திருப்பாட்டில் புத்தர் சமணர் பற்றிய குறிப்பும் இடம்பெறக் காணலாம்.

### திருநாவுக்கரசர் தேவாரம் - 5, 6, 7 திருமுறைகள்

திருநாவுக்கரசர் பாடிய தேவாரப்பாடல்களில் இன்று கிடைத்திருப்பன பதிகங்கள் 312க்குத் திருப்பாடல்கள் 3066 ஆகும். பரசமயக் குழிநின்றும் தம்பி மீள, தம்பியார் உஎராக வேண்டும் என வைத்த தயாவினால் நாளும் திலகவதியார் திருவதிகை வீரட்டானத்து இறைவனை வேண்டச் சிவபெருமான் தருமசேனர்க்கு (திருநாவுக்கரசரின் அப்போதைய பெயர்) சூலைநோய் தந்தருளினன். பல்வித முயற்சியும் பலிக்காமல் போகவே திலகவதியாரின் திருவடிகளில் வந்து தம்பி வீழ்ந்தார். திருவாளன் திருநீறு தாமளித்துத் திலகவதி தம்பியாரைத் திருவதிகை வீரட்டானம் ஈசர்முன் அழைத்துச் சென்றார். முன்னை நல்வினை மூண்டுவந்த காரணத்தால் தன்னை உணர்ந்து அவர் 'கூற்றாயினவாறு' எனப்பாடத் தொடங்கினார்.

இறைவன் முன்னே மனமுருகித் தம் முதற் பதிகத்தை இவர்பாட ஈசன் நாவுக்கரசர் என இவருக்குப் பேரிட்டு மகிழ்ந்தான். திருநாவுக்கரசர் சைவசமயக் குரவர் நால்வரில் மூத்தவர் ஆகையால் அப்பர் என அழைக்கப்படுவார். வாழ்க்கையில் வருந்தி வருந்தி அனுபவித்து உழன்ற காரணத்தால் இப்பாடல்களில் ஞான அனுபவம் மேலோங்கி நிற்கும்.

தில்லையில் இறைவன் நடமிடும் எல்லையில் ஆனந்தக் கோலத்தினைக் காண மனிதப் பிறவியே வேண்டும் என அழுத்தமாகப் பாடும் திருநாவுக்கரசர் தம்மை நோக்கி "வாய்த்தது நம்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்று கிடைத்தற்கரிய மனிதப் பிறவி கிடைத்த போதே இறைவனை அடைய இவ்வுயிர் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

இறைவனை அடைய உயிர் என்ன முயற்சி செய்ய வேண்டும்? இறைவன் எப்படி எங்கே உள்ளான்? என எழும் வினாக்கட்கெல்லாம் ஞானாசிரியராகி நல்விடை பகருகின்றார் நாவுக்கரசர். இறைவன் விறகில் முன்தோன்றாத் தீ போலவும், பாலில் ஓரளவு தோன்றும் நெய்போலவும் உலகப் பொருள்களிலும் நமக்குள்ளும் உறைந்துள்ளானாம். நம்பிக்கை, பக்தி உணர்ச்சி, விடாமுயற்சி இவற்றால் இறைவனை நாம் காண இயலும் எனப்பாடுவார். உள்ளத்துள்ளே இறைவனைக் காணாதவர் அவனை எங்கு தேடியும் பயனில்லை என்றும் திருநாவுக்கரசர் பாடுகிறார்.

இறையனுபவத்தை ஐம்புல நுகர்ச்சியில் இனிமையான அனுபவமாகக் கண்டு அவர் பாடுகின்றார்.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே**

என நீற்றறையில் தன்னைச் சமணர் இட்டபோதும் இறைவனோடு ஒன்றிய ஒருமை மன இறைவனுபவத்தால் அச்சூழல் இறைவன் திருவடி நிழலாகி இன்பம் தந்த காட்சியை அவர் அனுபவித்துப் பாடுகின்றார்.

இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் கொண்டு நாயக நாயகி பாவத்தில் பாடும் பாங்கு திருநாவுக்கரசரிடமும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. சைவ இலக்கியத்தில் மிகுந்த ஆன்மவீரத்தோடு சமூகச் சீர்திருத்தத்தையும் பாடியவர் அப்பர்பிரான். "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம், ஏமாப்போம், பிணியறியோம், இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்று அரசனையே எதிர்த்து முழங்கியவர் அப்பர் பெருமான்.

### சுந்தரர் தேவாரம் - ஏழாம் திருமுறை

சுந்தரர் பாடியனவாக இன்று நமக்குக் கிடைத்துள்ள பதிகங்கள் 100, திருப்பாடல்கள் 1026 ஆகும். நம்பியாரூரர் இறைவனால் ஓலை காட்டித் தடுத்தாட் கொள்ளப்பட்டபோது இறைவனை இன்னாரென அறியாத சுந்தரர் "பித்தா" என்றார். இறைவனோ இவருடைய தோழமையை உகந்து திருவெண்ணெய் நல்லூர் அருட்டுறைத் திருக்கோவிலுக்கு அழைத்துச் சென்று அங்கே தம்மை உணர்த்திச் சுந்தரரைப் 'பித்தா' என்றே தொடங்கிப் பாடுமாறு அருளாணை வழங்கினார்.

**பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா**
**எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர் அருட்துறையுள்**
**அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே**

என 'மீளா அடிமை உமக்கே ஆட்பட்டேன்' எனச் சுந்தரர் இறைவனை நோக்கிப்பாடுகின்றார். ஆருருக்கு வருக என்று சிவபெருமான் அழைத்து அங்கே பரவையை மணமுடித்துத் தந்து தான் சுந்தரரை மண்ணில் பிறக்கவைத்த நோக்கம்



**Radhe Krishna**

பூவையர் மேனிக்கு பொன்னெழில் தூவும்

# டிக்சன் கோல்டுஸ்மித் ஜுவல்ஸ்

# DICKSON GOLDSMITH JEWELS

**No: 162, Serangoon Road, Singapore 218048**
**Tel/Fax : 2950283**
**Tel : 2955130, 2926004**

கைதேர்ந்த
பொற்கொல்லர்களால்
நேர்த்தியாக
உருவாக்கப்பட்ட
பொன் ஆபரணங்களின்
எழில் மாளிகை

உங்களுடைய வாழ்க்கையில் வெற்றியடைய
பிறந்த தேதிப்படி ராசிக் கற்களை
வாங்குவதற்கு சிறந்த -
நம்பிக்கையான ஸ்தாபனம்
தங்கம், வெள்ளி, நவரத்தினம்,
வைர வியாபாரத்தில்
புகழ் பெற்ற நிறுவனம்

வேண்டுதலுக்கும், பூஜைக்கும் ஏற்ற வெள்ளி பொருட்கள்
கிடைக்கும் ஒரே ஸ்தாபனம்

**DICKSON GOLDSMITH JEWELS**
Dealers in Gold & Silver Jewelleries, Diamonds, Gems,
Pearls and Precious Stones

***SPECIALIST IN BIRTH STONES***



***(QUALITY IS OUR BUSINESS)***

***With***
***Best Compliments***
***from***

Sakthi Sangeetha

# SAKTHI SANGEETHA

அனைத்து வெங்கள குத்து விளக்கு தாம்பூலம், சாமிசிலைகள், மேலும் பூஜைக்குரிய அனைத்து பொருட்களும் மிக நவீன எவர்சில்வர் அனைத்து சாமான்களும், பெண்கள் அலங்கார பொருட்களும், வீட்டு அலங்கார பொருட்கள் அனைத்தும், மேலும் பஞ்சாபி ஆடைகளும் பக்தி பாடல்கள் அனைத்தும் தரம்மிக்கவை, விலை மலிவாக எங்களிடம் கிடைக்கும். அன்பு கூர்ந்து அனைவரும் வரவேண்டும் என்று தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

**எண் 66, சிராங்கூன் ரோடு, சிங்கப்பூர் 217971**

நிறைவேறத் 'தில்லை வாழ் அந்தணர்' எனத்தாமே அடியெடுத்துக் கொடுத்து திருத்தொண்டத் தொகையைப் பாடுமாறு செய்கின்றார். அடியார் அறுபத்துமூவர் வரலாற்றைக் கூறும் இப்பதிகமே பெரிய புராணம் என்னும் சைவப் பேரிலக்கியத்திற்கு மூலவித்தாகும்.

இறைவன் தன்னோடு தோழமை பூண்டிருந்த பேரன்புத் திறத்தினைச் சுந்தரர் பலபாடல்களில் பாடுகின்றார். இறைவன் இவரோடு விளையாட்டில் ஈடுபட்டுச் சத்தியம் வாங்கிச் சங்கிலியை மணமுடித்துத் தந்து சுந்தரர் சத்தியத்தை மீறித் திருவொற்றியூர் எல்லை கடந்தபோது இறைவன் அவர் கண்களைப் பறித்துக் கொண்டான். காஞ்சிபுரத்தில் ஒற்றைக்கண் பெற்ற சுந்தரர்

**"மற்றைக் கண்தான் தாராதொழிந்தால்**
**வாழ்ந்து போதீரே!"**

என்று இறைவனைப் பார்த்து 'நீரே பழிபட்டீர்' என எள்ளலுடன் பாடும் அளவு இருவர் உறவும் அமைந்திருந்தது.

### மாணிக்கவாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் - எட்டாம் திருமுறை

மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகம் சிவபுராணம் முதலிய 51 பகுதிகளையும் அவற்றுள் 656 பாடல்களையும் கொண்டமைந்தது. 'அவனருளாலே அவன்தாள் வணங்கல்', 'அழுதால் இறைவனைப் பெறலாம்'' என்பதே மணிவாசகர் நமக்கு உணர்த்தும் செய்தியாகும்.

சைவர்களால் நாள்தோறும் ஓதப்பெறும் சிவபுராணம் உயிர் எல்லாப் பிறவியும் பிறந்திளைத்து மானுடனாகி சிவபரம் பொருளை உணர்ந்து அவர் புகழைப் பாடி இனிப்பிறவி வேண்டாம் என அவன் அருளை உணர்ந்து ஓதுவதாக அமைந்த பாடலாகும். மக்கள் வழக்கிலிருந்த நாட்டுப்புற இலக்கிய வடிவங்களாகிய அம்மானை, ஊசல், சாழல் ஆகியவற்றிலும் திருப்பொன்னூசல், திருச்சாழல், திருவம்மானை, திருப்பொற்சுண்ணம் ஆகிய பாடல்களை மணிவாசகர் பாடிச் சைவ இலக்கியத்திற்குப் புதிய வடிவங்களைத் தந்து மக்களிடையே பரவச் செய்தார். திருப்பள்ளி எழுச்சியும், திருவெம்பாவையும் சைவ இலக்கியத்திற்கு மணிவாசகரின் சிறப்பான பங்களிப்புக்கள் ஆகும்.

திருச்சிற்றம்பலக் கோவை அகப் பொருட் துறைகளை 400 ஆக வகுத்துக்கொண்டு 400 பாடல்களால் மாணிக்கவாசகர் செய்தருளிய நூலாகும். தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு உரை வகுத்த பேராசிரியர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளமை இதன் தொன்மையையும் சிறப்பையும் காட்டும்.

### திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் (ஒன்பதாம் திருமுறை)

திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டிகள், திருவாலியமுதர், புருடோத்தமர், சேதிராயர் ஆகிய ஒன்பதின்மர் பாடிய இருபத்தெட்டுத் திருப்பதிகங்கள் திருவிசைப்பா என்றும் சேந்தனார் பாடிய பல்லாண்டிசை திருப்பல்லாண்டிசை எனவும் வழங்கப்படுகின்றன. இவ்விருபத்தொன்பது பதிகங்களையும் ஒன்றாகத் திருவிசைப்பா மாலை எனச் சுட்டுவதும் உண்டு. இப்பதிகங்களில் உள்ள பாடல்கள் 365 ஆகும்.

பட்டினத்தடிகளின் கணக்கராக இருந்து பின்னர் தில்லை சென்று விறகு விற்று அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு நாள்தோறும் ஒரு சிவனடியார்க்கு அமுதூட்டும் திருத்தொண்டினை இவர் மேற்கொண்டிருந்தார். மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் மழை பெய்தமையால் திருத்தேர் சேற்றில் அழுந்தி ஓடாது நின்ற பொழுது 'சேந்தா தேர் நடக்கப் பல்லாண்டு பாடுக' என்றதொரு வானொலி எல்லோருங் கேட்க எழுந்தது. தேரிழுக்கும் அடியார் குழுவில் நின்ற சேந்தனார் 'மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்' எனத் தொடங்கும் திருப்பல்லாண்டுத் திருப்பதிகத்தைப் பாடினார். வடம் பிடிக்காமலே தேர் நிலைக்கு வந்து சேர்ந்த அற்புதத்தை கண்ட அனைவரும் சேந்தனாரின் பக்தித் திறத்தை வியந்து போற்றினர்.

### திருமூலர் இயற்றிய திருமந்திரம் (பத்தாம் திருமுறை)

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"**

எனப்பாடும் சிவயோகிய திருமூலர் தமிழ் ஆகமமாக இந்நூலைத் தான் செய்தமையைப் புலப்படுத்துகிறார். திருமூலர் வடமொழி வேதத்தைப் பொது நூலாகவும் தமிழிலும் வடமொழியிலும் உள்ள சிவாகமங்களைச் சிறப்பு நூலாகவும் கொண்டு இவ்விரு திறப்பொருள்களும் ஒருங்கமையச் செந்தமிழ்ச் சிவாகமமாக இந்நூலைச் செய்தருளியுள்ளார்.

இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் திருமந்திர மாலை. திருமந்திரம் 3000 பாடல்களை உடையதெனப் பழைய நூல்கள் குறிப்பிடுகின்றன. இபபோது 3100 பாடல்கள் உள்ளன. இவற்றுள் சில இடைச்செருகல் எனச் சிலர் கருதுகின்றனர்.

ஒன்பது ஆகமங்களே ஒன்பது தந்திரங்களாக இந்நூலில் வகுப்பட்டுள்ளன எனலாம். உடலினை ஓம்பி உடலுக்குள்ளே உறுபொருளாகிய இறைவனை உள்முகமாகக் காணலாம் எனத் திருமூலர் கூறுகிறார். நாம் ஐம்பொறிகளைத் தக்க குருவின் துணை கொண்டு அடக்கினால் அவை ஐந்தும் உயிருக்குச் சிவஞானமாகிய பாலை நிரம்பத் தரும் என அழகான உவமையினால் திருமூலர் விளக்குகிறார். எளிமையாகச் சைவ சித்தாந்த முப்பொருள் - பதி, பசு, பாசம் - உண்மையை இவர் விளக்குகிறார்.

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தில் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தது பார் முதல் பூதம்**

என்னும் பாடலில் உலகப் பொருளில் மயங்கி இறைவனை மறவாமல் உலகில் பார்முதல் ஐம்பூதப்

ANARKALAI
PREMIUM QUALITY

# அனார்கலி மார்க்

**பஞ்சாப் பிரியாணி அரிசி.**

**மணம்! சுவை!**

பொன்னி புழுங்கல் அரிசி.

அனார்கலி பிராண்ட் அப்பளம்.

அனார்கலி பிராண்ட் ஊறுகாய். மாங்காய். எலுமிச்சை.

கதம்பம். கொத்தமல்லி. பொதினா. மிளகாய்....

திருமண விருந்து வீட்டுத் தேவைகளுக்கும் சிறந்தது

**லிட்டில் இந்தியா மற்றும் எல்லா மளிகை கடைகளிலும் கிடைக்கும்.**

இறக்குமதியாளர்கள்:

## சயீது முஹம்மது & சன்ஸ் டிரேடர்ஸ் பிரைவேட் லிட்.

## SAYEED MUHAMMED & SONS TRADERS PTE LTD

35, HONG KONG STREET, SINGAPORE 059674

TEL : 5325474 (5 LINES) FAX : 5325432



***With***
***Best Compliments***
***from***

# Jacky's Electronics (S) Pte Ltd

111, North Bridge Road

#04-20 Peninsula Plaza

Singapore 179098 Tel : 3371377/8

பொருட்களிலும் இறைவனைக் காணும் நிலை - வரவேண்டும் எனத் திருமூலர் பாடுகிறார்.

### திருவாலவாயுடை யார் முதலிய பன்னிருவர் பாடிய பதினோராம் திருமுறை

திருவாலவாயுடையார் அருளிய திருமுகப் பாசுரம் முதலாக நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருநாவுக்கரசு தேவர் திருலேகாதச மாலை யீறாக உள்ள நாற்பது பிரபந்தங்களின் தொகுதியே பதினோராம் திருமுறையாகும். திருவால வாயுடையார், காரைக் காலம்மையார், ஐயடிகள் நாடவர்கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீர தேவர், கல்லாட தேவர், கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி, எனப் பன்னிரு அருளாளர்கள் பாடிய பாடல்கள் இத்திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

இத்திருமுறையிலமைந்த நாற்பது பிர பந்தங்களில் சிவபெருமானைப் போற்றிப் பாடிய பிரபந்தங்கள் இருபத்தைந்தாகும். முருகப் பெருமானைப் போற்றுவது திருமுருகாற்றுப் படையாகும். விநாயகப் பெருமானைப் போற்றுவது மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, மூத்த பிள்ளையார் திரு மும்மணிக்கோவை, விநாயகர் திருவிரட்டை மணிமாலை என்ற மூன்று பிரபந்தங்களாகும். ஏனைய பதினோரு பிரபந்தங் களும் இறைவனது திருவருள் பெற்ற திருத்தொண்டர்களாகிய சிவனடியார்களின் சிறப்பினை விரித்துரைப்பனவாகும். இறைவனுக்கு ஆட்பட்டதன் பயன் அவன் அடியார்களுக்குத் தொண்டு செய்து உய்தலே என்பது நம்பியாரூரர் முதலியோரது துணிபாகும். இத்துணிபினை விளக்கும் பொருட்டே சிவனடியார்களைப் பற்றிய பதினொரு பிரபந்தங்களும் இத்திருமுறையில் சேர்க்கப் பெற்றுள்ளன. அடியார் பெருமையினை விளக்கும் இப்பிரபந்தங்களைப் பன்னிரண்டாம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்திற்குமுன் பதினோராம் திருமுறையில் தொகுத்தமைத்த சிறப்பு போற்றற்குரியது.

### சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் - பன்னிரண்டாம் திருமுறை

இக்காப்பியம் பெரியபுராணம் என்றும் வழங்கப் பெறும். நம்பியாரூராகிய சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகைப் பாடல்களின் முதற் குறிப்பை ஒட்டி இக்காப்பியம் 13 பெரும்பிரிவுகளைக் கொண்டு 4286 செய்யுட்களால் அடியார் அறுபத்து மூவரோடு தொகையடியார் ஒன்பதின்மர் வரலாற்றையும் உணர்த்துகின்றது.

இக்காப்பியப் பதிப்பிற்கு முன்னுரை எழுதிய திரு. வி. க. "திருஞானசம்பந்தர் முதல் திருமறையைத் 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கினார். சேக்கிழார் பன்னிரண்டாம் திருமுறையை 'நின்றதெங்கு நிலவி உலகெலாம்' என்று முடித்தார். தோ என்பது தகர வித்தையோடு கூடிய ஓங்காரம். தகர வித்தையுடன் 'ஓ' என்று திருஞான சம்பந்தர் தொடங்கியதைச் சேக்கிழார் 'ம்' என்று முடித்தது கருதற்பாலது. இந்நுட்பம் கண்ட ஆன்றோர் 'பன்னிரு திருமுறையும் ஓங்காரத்தின் பரிணாமம்' என்று உலகுக்கு உணர்த்தினர் போலும்'' எனக் கூறுவது நோக்கத் தக்கது.

தில்லைச் சிற்றம்பலத்தில் சிவனடியார் வரலாற்றைப் பாடத் தொடங்கிய சேக்கிழார் பெருமானுக்குச் சிவபெருமானே வானொலியாக அருள் வழங்கிய மொழி 'உலகெலாம்' என்பதாகும். இதுவே காப்பியத்தின் தொடக்கமாக அமைந்தது. இத்தொடர் இந்நூலின் நடுவிலும் இறுதியிலும் வரக் காணலாம்.

சைவப் பேரிலக்கியமாக விளங்கும் இத்திருமுறை தேவார, திருவாசகம், ஒன்பதாம் பத்தாம் பதினோராம் திருமுறை ஆகியவற்றுக்கும் உரைவிளக்கம் பொருள் விளக்கம் செய்யும் முறையில் அமைந்துள்ளது.

சைவத்தின் சாரமாம் இத்திருமுறையில் சேக்கிழார் பெருமான் திருவைந்தெழுத்தின் பெருமையினையும் திருநீற்றின் சிறப்பினையும் ஆங்காங்கே குறித்துள்ளார்.

---

நகரத்தார்களின் விருந்தோம்பும் பண்புக்குச் சிங்கப்பூர் ஓர் எடுத்துக்காட்டு. தமிழ் நாகரிகத்தையும் கோயில் தொண்டினையும் எங்குச் சென்றாலும் பரப்பும் தூதுவர்களாக நகரத்தார்கள் விளங்குகின்றார்கள். மூவேந்தர் ஆட்சிக்குப் பின் தமிழ்க் கலைகளைப் பெரும் பொருட் செலவில் காத்துத் திருப்பணிகள் செய்து வரும் வரலாற்றுப் பெருமை நகரத்தார்களுக்கு உண்டு. பிறநாடுகளிலும் பேணிப் போற்றிய தனித்திறமையும் ஒப்பற்ற புகழும் கொண்டவர்கள் நகரத்தார்கள். தெண்டாயுதபாணி திருக்கோயிலைக் கோபுரம் எடுத்து உயர்த்தும் புதுத் திருப்பணியைச் சிங்கப்பூர் நன்னகரத்தார் இப்போது மேற்கொண்டிருக்கின்றனர். தமிழ் முருகன் திருவருள் செய்வான். தெய்வ நம்பிக்கை உயர்ந்த நம்பிக்கையாகும்.

அன்புடன்
*டாக்டர் வ. சுப. மாணிக்கம்*
துணை வேந்தர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
8. 4. 81

*With*
***Best Compliments***
*from*

MEENA

# Meena Overseas Trading

• Importers • Exporters • Distributors •

• Provisions • Yoghurts • Greek Food Products •

116, Lavender Street #03-02, Pek Chuan Building, Singapore 338730
P.O. Box 2607 Robinson Road Singapore 904607
Tel : (65) 3920901 Fax : (65) 3920814 Telex : RS 34171

Registration No. : 52288300A

*With*
***Best Compliments***
*from*

# Indo Commercial Society Pte Ltd

344C, King George's Avenue, Singapore 208571
Tel : 2995711/2/4 & 2992421/2
Fax : 2970627
Cable : OBEDIENT
Telex : RS 23663 INDOTY

# சைவ நன்னெறி

**டாக்டர் பழ. முத்தப்பன்.** எம். ஏ., பிஎச். டி,
முதல்வர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி, தமிழ் நாடு.

இந்தியச் சமய வரலாற்றில் சைவசமயம் தனியொரு இடத்தைப் பெற்றதாகும். மேலும் உலகச் சமயங்களில் சைவசமயத் தோற்றம் கற்பனைக்கும் எட்டாத காலத்திற்கு முற்பட்டதாக அமைந்துள்ளது. இன்றுவரை பிற சமயங்களின் தோற்றத்திற்கு அவ்வச் சமயத்தைச் தோற்றுவித்த ஞானிகளின் காலத்தைக் கொண்டு, சமயத்தின் காலத்தை வரையறுப்பதுபோல - சைவசமயத் தோற்றத்தைக் காலத்தால் வரையறுக்க முடியாத பழமை வாய்ந்தது. தமிழ் இலக்கண நூல்களில் மிகப் பழமையானது தொல்காப்பியம். அந்நூலில் நிலம் பகுக்கப்பெற்று அவ்வவ் நிலத்திற்குரிய தெய்வங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. எனவே தொல்காப்பியத்திற்கும் முற்பட்ட பழமைக் காலத்தைக் கொண்டது சைவசமயம் என்ற அளவில்தான் சைவசமயத் தோற்றத்தைப் பற்றிக் கூறமுடிகிறது.

சைவசமயத்தைத் தோற்றுவித்த மானுடர் யார்? என்ற வினா எழுந்தால் விடை கிடைக்காது. கிறித்துவ சமயத்தைத் தோற்றுவித்தவர் இயேசுகிறிஸ்து என்றாற்போல, சைவசமயத்தைத் தோற்றுவித்தவர் இன்னார் என்று கூறமுடியாது. காரணம் சைவசமயத் தோற்றம் மானுடரால் அமையாது சிவபரம்பொருளால் அமைந்தது என்பதேயாகும்.

சிவபெருமானால் தோற்றம் கண்ட சைவசமயத்தின் கொள்கைகள் அதாவது நெறிகள் முதலில் குருவடிவமாக இருந்த சிவபெருமானால் நந்தி தேவருக்கு அருளப் பெற்றன. பின்னர் நந்தியம் பெருமானால் பிரமாவின் மானச புத்திரராகிய சனற்குமார முனிவருக்கு உபதேசிக்கப் பெற்றது. சனற்குமாரரால் பூவுலகில் பின்னர் சத்திய ஞான தரிசினிகளாகிய ஆசிரியர் பெருமானுக்கு அருளப் பெற்றன. பூவுலக ஆச்சாரியனாகிய சத்தியஞான தரிசினிகள் தன் திருவருள் பெற்ற பரஞ்சோதி மாமுனிவருக்குச் சைவசித்தாந்தமாம் உயர் கொள்கைகளை உபதேசித்தார். பின்னர் பரஞ்சோதி முனிவர் பெருமான் திருவெண்ணெய் நல்லூர் திருப்பதியில் அவதரித்த மெய்கண்ட தேவருக்கு உபதேசித்தார். மெய்கண்டதேவர் பெருமான் தன் தலைமாணாக்கராகிய அருணந்தி சிவாச்சாரியாருக்கு உபதேசித்தார். அருணந்தியார் ஞானவீரராகிய மறைஞான சம்பந்தருக்கு உபதேசம் செய்தார். இவ்வாறு சைவசமயக் கொள்கைகளாகிய சித்தாந்தநெறி நந்திதேவர் முதலாகிய குருபரம்பரை வழி சைவப் பெருமக்களுக்கு அருளப்பெற்றது. இத்தகைய எழுவர் அடங்கிய குரு பரம்பரையினரைச் சைவ உலகு சந்தான குருபரம்பரை எனப் போற்றி வணங்கும். (சிவப்பிரகாசம், பாடல்: 5)

முற்கூறிய சந்தான குருபரம்பரை எழுவரில் மெய்கண்டாருக்கு முற்பட்ட நால்வரை அகச்சந்தானப் பரம்பரை என்றும், மெய்கண்டாருக்குப் பின்னர் வந்த அருணந்தி, மறைஞானசம்பந்தர் என்ற இருவரோடு மறைஞானசம்பந்தரின் மாணவராகிய உமாபதி சிவத்தைச் சேர்த்து நால்வராகக் கொண்டு அந்நால்வரைப் புறச்சந்தான பரம்பரை என்றும் கொள்வது சைவஉலக மரபாகும். அகச்சந்தான பரம்பரையினர் வாய்மொழி அருளிய உபதேசங்களை இப்புறச் சந்தான பரம்பரையினர் நூல்வழி தந்தனர். அச்சிந்தாந்த நூல்கள் பதினான்காகும்.

"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தஅருட்
பண்புவினா போற்றி கொடி பாசமிலாநெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று"

என்ற பாடல் பதினான்கு சாத்திரங்களையும் வகைப்படுத்திக் கூறும் பழம் பாடலாகும்.

இக்குரு பரம்பரையினால் அருளப் பெற்ற சைவசித்தாந்தக் கொள்கைகள் முப்பொருளைப் பற்றி விவரித்தன. பதி, பசு, பாசம் என்ற அம்முப்பொருள்தான் சைவ சித்தாந்த உட்கிடக்கையாகும். 'சிந்தாந்தம்' என்ற சொல்லுக்குப் பொருள் 'முடிந்த முடிவு' என்பதாகும். எனவே முப்பொருள்களின் இயல்புகளை முடிந்தமுடிபாக வேறுபட்ட நிலையின்றி விளக்குவது சைவசித்தாந்தமாகும். மூன்று பொருள்களும் நிலையானவை, என்றும் அழிவில்லாதவை.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப்போல் பசுபாசம் அநாதி"

என்ற திருமந்திரம் (115) கூறுவதை இங்கு நினைவு கொள்ளலாம். பதி என்பது இறைவனையும், பசு என்பது உலக உயிர்களையும், பாசம் என்பது உயிர்களை ஆட்கொண்டிருக்கும் தளையாகிய வினைகளையும் குறிக்கும் தத்துவச் சொற்களாகும்.

முப்பொருள்களின் இலக்கணங்களைப் பொது இலக்கணங்கள், சிறப்பு இலக்கணங்கள் என்று இருவகையாகப் பிரித்துத் தெளிவாகச் சாத்திரங்கள் தந்துள்ளன. அத்துடன் முப்பொருள்களின் வடிவாக அமைந்துள்ள மானிட வாழ்வின் நன்னெறியாகச் சைவசித்தாந்த சாத்திரங்கள் நால்வகை நெறிகளைச் சுட்டிக் காட்டுகின்றன. அதாவது உலக உயிர்கள் தம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் பாசமாம் தளைகளை விட்டு நீங்கிப் பரம்பொருளாகிய சிவனைச் சென்றடைவதற்குரிய நெறி முறைகளை நால்வகை நெறிகளாகத் தந்துள்ளன.

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் பாசம் எனப்படும். இப்பாசங்களின் சார்பால் உயிர்கள் பலவகைப்பட்ட பிறப்புக்களில் பிறந்து உலக இன்ப துன்பங்களில் ஆட்பட்டு உழல்கின்றன. அவ்வாறு இன்பம் குறைவாகவும் இருத்தலை உயிர்கள் உணரும். உணரும்போது துன்பம் நீங்குவதற்குரிய வழி இல்லையோ என ஒரு கட்டத்தில் உயிர்கள் அவாவி நிற்றல் உண்டு. அங்ஙனம் அவாவி நிற்கும்போது உயிர்க்குள் உயிராய்க் கலந்துநிற்கும் இறைவன் ஆசாரியன் வடிவில் வந்து அவாவி நிற்கும் உயிர்க்கு இதுவே நன்னெறி என்று சில வழிமுறைகளை உணர்த்துவான். அவாவி நின்ற உயிர்கள்தான் மேற்கூறிய சந்தான பரம்பரையினர். அவாவி நின்ற அவ்உயிர்களாம் சந்தான பரம்பரையினர் தாம் அனுபவித்த நன்னெறியாம் நால்வகை நெறிகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனத் தந்தனர். அந்நால்வகை நெறிகளே சைவ நன்னெறியாகும்.

***With***
***Best Compliments***
***from***

RISHITEX ENTERPRISE
&
PRIMA JEWELLERS PTE LTD

71, Serangoon Road, Singapore 217976

***With***
***Best Compliments***
***from***

Emjay Enterprises Pte Ltd

*Importers, Exports, Wholesaler & Retailer*
*of Electronic & Electrical Products*

111, North Bridge Road #02-61/62
Peninsula Plaza, Singapore 179098
Tel : 3388948 Fax : (65) 3384709
E-mail : mj0261@singnet.com.sg

இதனை அருணந்தி சிவாசாரியார் அருளிய சிவஞான சித்தியார்,

"சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாதமார்க்கம் என்றும் சங்கரனை அடையும்
நன்மார்க்கம் நாலவைதான் ஞான யோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்"
(பாடல் : 270)

என்று குறிப்பிட்டுக் காட்டும். சைவசித்தாந்தம் இறைவனைப் பற்றிய இலக்கணங்களைக் கூறும்போது உருவமற்றவனாகிய இறைவன், உயிர்கள் தன்னை வழிபட்டு உய்வு பெறுவதற்காகத் திருமேனி உடையவனாகத் திகழ்கின்றான் எனக் கூறுகிறது. மேலும் உருவமற்றவனாகவும் மந்திர வழியில் நிற்கிறான் எனவும், திருக்கோயில் வழிபாட்டில் அருவுருவ நிலையிலும் திகழ்கிறான் என்றும் குறிப்பிடுகிறது. எனவே இறைவன் வடிவத்தை முகம், கை, கால், முதலிய உறுப்புக்கள் தோன்ற ஆடை, அணிகலன், படைக்கலம் ஆகியவற்றோடு சேர்த்து நடராசர், சோமஸ்கந்தர், சந்திரசேகரர், பிட்சாடனார் ஆகிய பெயர்களில் உருவநிலையால் வழிபடலாம். அருவுருவ நிலையில் லிங்கமாக வழிபடலாம். அருவ நிலையில் சிதம்பர ரகசியமாக வழிபடலாம் என்றும் கூறுகிறது. இந்த வழிபாட்டு நெறிகளைத்தான் மேற்குறித்த நால்வகை நெறிகள் உணர்த்துகின்றன.

முதல் வழிபாட்டு நெறியாகிய சரியை என்ற நெறி தொண்டுநெறி எனப்படும். தொண்டு நெறிதான் சைவ நன்னெறியில் தலைமை நெறியாகும் என்பதால் முதல் நெறியாகக் கூறப்பெற்றுள்ளது. திருக்கோயில்களில் சென்று திருஅலகிட்டு, திருமெழுக்குமிட்டு, பூக்கள் கொண்டு மாலை சமைத்துக்கொடுத்து இறைவனை வாயார வாழ்த்தி, திருவிளக்கு ஏற்றி, நந்தவனம் அமைத்து, சிவனடியார்களைக் காணுகின்ற பொழுது அடியேன் செய்யத்தக்க பணியாது? என்று வினவி, வணங்கி அவர்கள் அருளிச் செய்த பணிகளை ஏற்றுத் தொண்டாற்றுவதே இத்தொண்டு நெறியாகும், இத்தொண்டு நெறியைச் செய்தால் இறைவனின் உலகில் இருக்கும் பேறு கிட்டும். இதனைத் தத்துவச் சொல்லாகச் சொன்னால் சாலோகம் கிடைத்திடும். இந்த முதல் நெறியாம் சரியை பற்றிக் (தாசமார்க்கம்) கீழ்வரும் திருமுறைப்பாடல்கள் உணர்த்துகின்றன.

"நிலைபெறுமா றெண்ணுதியே நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதி யென்றும்
ஆரூரா வென்றென்றே யலறா நில்லே"

(அப்பர் தேவாரம், 6-31-3)

"ஆமாறுன்றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன்
புத்தேளிர்
கோமானின் திருக்கோயில் தூகேன் மெழுகேன்
கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வேனே"

(திருவாசகம் - திருச்சதகம் - 14)

அடுத்த நெறியாகிய கிரியை என்னும் மகன்மை நெறி இறைவனின் அருவுருவத் திருமேனியான லிங்க வழிபாடாகும். லிங்கத் திருமேனியைச் சிவபெருமானாகவே நினைந்து வழிபடுவது இந்நெறியாகும். வழிபாட்டிற்கு வேண்டிய திருமஞ்சனப் பொருள்கள், பூக்கள், பச்சிலைகள், நறும்புகைப் பொருள்கள், திருவிளக்கு, படையல்கள் முதலியவற்றைத் திரட்டிக் கொண்டு நாட்கடன் முடித்துத் தக்கதோர் இடத்தில் அமைதியாய் அமர்ந்து பூத சுத்தி, தானசுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, லிங்க சுத்தி என்ற ஐந்து சுத்திகளைச் செய்து சிவபெருமானை அருவுருவத் திருமேனியில் ஆவாகனம் (எழுந்தருளச்) செய்து அகத்தாலும் புறத்தாலும் வழிபடுதல் இந்நெறியாகும். இதுமட்டுமல்லாது வேள்விகளைச் செய்து அக்னியில் இறைவனை எழுந்தருளச் செய்வதும் இந்நெறியாகும். இந்நெறியை வாழ்நாளில் நாள்தோறும் கொண்டு வழிபட்டால் இறைவனின் உடனிருக்கின்ற சாமீபப் பயன் கிடைக்கும். அதாவது இறைவனை அணுகி வேண்டும் உயர்ந்த இன்பங்களைப் பெற்று வாழலாம். இந்நெறி பற்றிச் சிவஞான சித்தியார் 272ஆம் பாடல் குறிப்பிடுகிறது. மேலும் கீழ்வரும் திருமுறைப் பாடல்களும் வலியுறுத்திக் காட்டுகின்றன.

"நறைமலிதருமளடறொடுமுகைநகுமலர்
புகைமிகுவளரொளி
நிறைபுனல்கொடுதனை நினைவொடு நியதமும்
வழிபடுமடியவர்
குறையிலபதமனை தரவருள்குணமுடை
யிறையுறைவனபதி
சிறைபுனலமர்சிவ புரமதுநினைபவர்
செயமகடலைவரே"

(சம்பந்தர் - 1-21-4)

"நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறையுடையாய் மறைவலாய் நீதியானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்றோ லுடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளநற் கொன்றை மாலை
கொண்டடியே னானிட்டுக் கூறிநின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

(அப்பர் - 6-99-8)

மூன்றாவது நெறி யோகமார்க்கம் என்ற தோழமை நெறியாகும். அருவத் திருமேனியாக இருக்கும் இறைவனை வழிபடும் நெறி இந்நெறியாகும். அருவத் திருமேனியாம் ஒளிவடிவில் காணும் முறையில் கண்டு அதில் அழுந்தி ஒன்றுபடுவது இந்த யோக நெறியாகும். ஐம்பொறிகளையும் புலன்வழிச் செல்லாது தடுத்து, பாவம் செய்யாது துறவொழுக்கத்தில் செல்லுதலும் அறநெறியில தப்பாது நிற்றலும், பத்மாசனம் உள்ளிட்ட ஆசனங்களில் இருந்தும் மூச்சை உள்இழுத்தல், புறத்தில் விடுதல் ஆகிய மூச்சு பற்றிய முறைமையினை ஒழுங்கு படுத்திக் கொள்ளுதல், பிராணாயாமம் முறையில் மனத்தை அடக்குதல் ஆகிய நிலையில் தியானத்தில் ஆட்படுத்திக் கொண்டு வணங்குதல் ஆகியவை இம்முறையாகும். இந்தத் தியான முறையை எட்டுப் படிநிலைகளாகச் சைவ சித்தாந்திகள் காண்பர்.

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன அவை. இந்த எட்டு முறையில் அகவழிபாட்டு நெறியில் ஒன்றி இறைவனது அருவத் திருமேனியை வழிபடுதல் யோக நெறியாகும். இந்த வழிபாட்டின் பயன் சாரூபம் ஆகும். அதாவது இறைவனுக்குரிய வடிவம், ஆடை, அணிகலன்கள் முதலியன பெற்றுச் சிறந்த இன்பத்தை அடைகின்ற பயன் கிடைக்கும். இதனைச் சித்தியார் 273ஆம் பாடலில் குறிப்பிடும்.

***With Best Compliments from***

SINGAPORE BRANCH

# GURCHARAN SINGH & CO. (PTE) LTD

61 ARAB STREET
SINGAPORE 199758

TEL: : 2969522
FAX : 2955322

***With Best Compliments from***

# M/S INTEXCON PTE LTD

190 Middle Road #17-05 Fortune Centre
Singapore 188979
Tel : 3383705 Fax : 3399912
Tlx : RS 61125 INTXCN

Chettiars Temple Society Singapore

மேலும் கீழ்வரும் திருமுறைப் பாடலும் வலியுறுத்திக் காட்டும்.

"உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தா
லுணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
யமரர்நா டாளாதே யாரு ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
னருட்கண்ணா னோக்காதா ரல்லா தாரே"

(நாவுக்கரசர் - 6-25-1)

நான்காவது நெறி ஞானநெறி. சரியை, கிரியை, யோகங்களில் பழகப்பழக உலகப்பற்று நீங்கும். இறைவன் திருமேனி வழிபாட்டுப் பற்று வளரும். அது வளர வளர உடம்பையே பெரிதாக நினைத்திருந்த மயக்கநிலை நீங்கும். மயக்கநிலை நீங்க உயிர்க்குயிரான இறைவனது திருவருள் உணர்ச்சி வளரும். அது வளர்ந்து நிறையும்போது இறைவன் குருவாகத் தோன்றுவான். ஞானஉரை தருவான். இறைவனின் ஞான உபதேசத்தை உணருகின்ற நிலையே ஞானநிலை எனப்படும். இந்த ஞானநிலையைச் சித்தாந்த தத்துவ நூல்கள் கேள்விஞானம் என்றும், சிந்தனை ஞானம் என்றும், தெளிவு ஞானம் என்றும் நிட்டை ஞானம் என்றும் நான்கு வகையாகக் குறிப்பிடும். இறைவன் அருளிச் செய்ததைக் கேட்பது கேட்டல் ஞானம், நூலாலும் உணர்வாலும் ஆராய்தல் சிந்தனை ஞானம், ஆராய்ந்ததில் தெளிவு காணுதல் தெளிவு ஞானம், அத்தெளிவால் இறைவனிடத்தில் அழுந்தி நிற்றல் நிட்டை ஞானம் ஆகும். எனவே அறிவு வடிவாக நிற்கிற இறைவனை அறிந்து கொண்டு வழிபடுதல் இந்த ஞானமார்க்கமாகிய சன்மார்க்கம் ஆகும். இந்நெறியில் நின்றால் சாயுச்சியம் என்ற பலனை அடையலாம். அதாவது வீடுபேறு அடையலாம். வீடு பேறு என்பது இருந்ததை விடுதலும், கிடைக்காததை அடைவதும் ஆகும். விடுதலும் பெறுதலும் வீடுபேறாகும். பற்றியிருந்த பாசத்தை விடுதலும், கிடைத்தற்கரிய முத்தியைப் பெறுதலும் வீடுபேறாகும். இதனைச் சிவஞான சித்தியாரின் 274ஆம் பாடல் குறிப்பிடுகிறது. இந்நெறியைப் பற்றிச் சம்பந்தர் திருமுறையும் எடுத்துக்காட்டுகிறது.

"சுருதிகள்பலநல முதல்கலைதுகளறு
வகைபயில்வொடுமிகு
உருவியலு லகவை புகழ்தரவழியொழு
குமெயுறுபொறியொழி
அருதவமுயல்பவர் தனதடியடைவகை
நினையரனுறைபதி
திருவளர்சிவபுர நினைபவர்திகழ்குலன்
நிலனிடைநிகழுமே"

(சம்பந்தர் 1-21-6)

இத்தகைய நால்வகை நெறிகளைச் சைவ நன்னெறியாகக் கொள்ளலாம். நால்வகை நன்னெறிகளையும் பின்பற்றி இறையருளைப் பெற விழைதல் வேண்டும். இத்தகைய வாய்ப்பு உலகத்தோர் அனைவருக்கும் எளிதில் கிட்டும் என்று கூறிவிட இயலாது. இயலாதோருக்கும் சைவ சித்தாந்தம் எளிய நன்னெறியையும் காட்டத் தவறவில்லை. சிவஞான சித்தியார் கீழ்வரும் பாடல் மூலம் அவ் எளிய நெறியைக் காட்டுகிறது.

"மனமதுநினைய வாக்கு
வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையில் கொண்டு. அங்கு
இச்சித்த தெய்வம் போற்றி.
சினமுதல் அகற்றி வாழும்
செயல்அற மானால், யார்க்கும்
முனம்ஒரு தெய்வம் எங்கும்
செயற்குமுன் நிலையாம் அன்றே"

(சித்தியார் - பாடல்: 114)

மனத்தால் நினைத்து, மந்திரம் கூறி, மலர்கொண்டு போற்றி, சினமகற்றி வாழும் வாழ்வை மேற்கொண்டால் முன்உள்ள தெய்வமான சிவபெருமான் தோன்றி ஆட்கொள்வான் என்று காட்டும் சித்தாந்த நெறி யார்க்கும் எளிய நெறியாகும்.

எனவே நன்னெறியாம் நால்வகை நெறியையோ - எளிய நெறியாம் வழிபாட்டு நெறியையோ மேற்கொண்டு ஒழுகுவதையே சைவ நன்னெறியாகக் கொண்டு தென்னாடுடைய சிவனைப் போற்றி வாழ்தலே எந்நாட்டவர்க்கும் உரியதாகும்.

---

தென்பாண்டித் திருநாட்டில் வரலாற்றுப் புகழ்மிக்கது நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகம். காசி முதல் கன்யாகுமரி வரை கல்வி, அன்னதானம், சமூக சேவை, திருக்கோவில் திருப்பணிகள் முதலிய அனைத்தும் இன்றும் சிறப்புடன் நடைபெறுவது இந்து சமயத்திற்கு நகரத்தார்கள் செய்து வரும் திருத்தொண்டு.

நகரக்கோவில்கள் ஒன்பதும் வானளாவிய கோபுரங்களுடன் அவ்வப்போது திருப்பணிகள் செய்யப்பெற்று நிர்வகிக்கப்படுவது உலகறிந்த உண்மை. மேலும், கடல் கடந்து மலேஷியா, சிங்கப்பூர் போன்றவெளிநாடுகளிலும் திருக்கோவில்கள் கட்டி, அவ்வப்போது திருப்பணிகள் செய்வதுடன் நல்ல நிர்வாகத்தைத் தந்து வருவதை, பொது மக்களும் அரசாங்கமும் பாராட்டி மகிழ்வதை அனைவரும் அறிவோம். இதேபோல் பல நல்ல அறப்பணிகளைச் செய்து மஹா கும்பாபிஷேகம் நடத்தும் சிங்கப்பூர் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவிலைச் சார்ந்த நகரத்தார் பெருமக்களும் உலகம் முழுவதும் வாழும் மக்கள் அனைவரும் எல்லா நலனும் பெற்று மகிழ்வுடன் வாழப் பிரார்த்திக்கிறோம்.

**K. *பிச்சைக்குருக்கள்***

*With*
*Best Compliments*
*from*

SWIL
INTERNATIONAL PTE LTD

10 Shenton Way, #11-01 MAS Building
Singapore 079117
Tel : (65) 324 2900
Fax : (65) 324 7770
Tlx : RS 23987 SWIL

*With*
*Best Compliments*
*from*

KEWALRAM
SINGAPORE LTD

**Kewalram Singapore Limited**
8 Jalan Kilang Timor
#04-01 Kewalram House
Singapore 159305
Telephone : 2735881
Telex : 24101 GEEKAY
Facsimile : 2743525, 2749227

PLEASE
PATRONISE
OUR
SPONSORS

# அருட் சத்தி - வள்ளலார் விளக்கம்

டாக்டர் சுப. அண்ணாமலை

வள்ளலார் என இங்குக் குறிக்கப்படுபவர் இராமலிங்க அடிகளார். அவரது சிறப்புப் பெயரான 'திருவருட் பிரகாச வள்ளலார்' என்பது, சுருக்கமாக. வள்ளலார் என வழங்கும். திருவருளைப் பெற்றவர். திருவருளாம் ஒளியை உடையவர்; அதனை வழங்குகின்ற பெரியார் என்பன இச்சிறப்புப் பெயரின் பொருள்.

திருவருள் என்பது இறைவனைச் சார்ந்து வழங்கும் சொல். அதுவே அருட்சத்தி. அத் திருவருளை வள்ளலார் எவ்வாறு விளக்குகின்றார் எனச் சிந்திப்பது இக்கட்டுரையின் தலைநோக்கு.

வள்ளலார் பரப்பிய நெறி சுத்த சன்மார்க்கம். அதனை அவர் 'பொது நெறி' என்றும் வழங்குவார், அப்போது நெறியைப் பின்பற்றியே அவர் திருவருளைப் பெற்றார் என ஆய்வினால் அறியப்படுகின்றது. எனவே அருளும் அதை அடையும் நெறியாகிய பொதுமை நெறியும் என்பதே இக்கட்டுரையாக விரித்துரைக்கப் படுகிறது.

இப்பொருள் (1) அருளின் விளக்கம்
(2) பொது நெறியின் விளக்கம்

என இரண்டு பெரும் பிரிவுகளை உடையது.

இவை கீழ்க்காணும் ஆறு விரிபொருள்களை உடையவை ஆகும்:

(1) உயிர் அன்பு - சீவகாருணியப் பணி
(2) மாந்தர் வாழ்வில் சாதி, குலம், சமயம், சித்தாந்தம் முதலிய வேறுபாடுகளைப் பொருட்படுத்தாத பொது நெறி.
(3) அருளால் வள்ளலார் அறிந்த அறிவு
(4) வள்ளலார் அருளை உணர்ந்த அனுபவம்
(5) வள்ளலார் அடைந்த அருளாற்றல் (அருட்சத்தி)
(6) வள்ளலார் அடைந்த உயர்நிலை

வளர்ச்சி காலத்தின் இயல்பு, பழைய கருத்துக்கள் வலிமையிழந்து போதலும், அவற்றின் அடிப்படை மாறாமல், புதிய கருத்துக்கள் தோன்றுதலுமே வளர்ச்சி எனப்படும். இது எல்லாத்துறைகளுக்கும் பொது. சமயம், சமுதாயம், என்ற இரண்டு துறைகளிலும் 19ஆம் நூற்றாண்டில், வள்ளலாரின் வாழ்வை அடிப்படையாகக் கொண்ட அவரது சிந்தனையில் புதிய கருத்துக்கள் தோன்றின. வள்ளலாரின் சொந்த அனுபவங்கள் மனிதனிடம் புதிய ஆற்றல் உண்டாகிச் செயற்படுவதைக் காட்டின.

அவர் தம் புதிய கருத்துக்களைப் பொதுமை நெறி என்ற தலைப்பிலும் மனிதனிடம் உண்டாக்கக்கூடிய புதிய ஆற்றலையும் அவ்வாற்றல் வள்ளலாருக்கு வாய்த்ததையும் அருள் என்ற தலைப்பிலும் காண்போம்.

அருளை அடைவதற்கு உரிய வழியாகவே வள்ளலார் பொது நெறிச் சிந்தனைகளைத் தருகின்றார். ஆதலால், அருள் என்பதற்கு அவர் தரும் விளக்கத்தை 'அருள் விளக்க மாலை' என்ற அவரது நூலைக் கொண்டு காண்போம்.

கடவுள் என்ற சொல்லே இறைவன் மனிதரைப் போலக் கண்டும் கேட்டும் உணர முடியாதவன் என்பதை உணர்த்தும், ஆயினும் அவனை எவ்வகையிலோ உணர்ந்தோர், அவனைப் ''பேரின்பப் பொருள்'' என்பர். அவனது உணர முடியாத நிலையை வள்ளலார், பின்வருமாறு கூறுகிறார்.

''இறைவா, நீ எங்கும் உள்ளவன்; எவ்விடத்திலும் உள்ளவர்களுக்குப் பெருஞ்சுகம் அளிப்பவன். ஆனால் அச்சுகம் எப்படிப்பட்டது? அதை அடைவதற்குரிய அறிவு என்ன? அடைந்தவர் யார்? இச்செய்திகளை நீ வெளிப்படையாக உணர்த்துவ தில்லை. சுகமே நீ, நீயே சுகம் என்கின்றனர். அது விளங்கவில்லை. இப்படி நீ எமது அறிவைக் கடந்த பொருளாக உள்ளாய். ''

"எங்கணும் ஓர் நீக்கம் அற எழுந்த பெருஞ்சுகமே
அச்சுகமும் அடை அறிவும் அடைந்தவரும் காட்டாது,
அது தானாய், அது அதுவாய், அப்பாலாம் பொருளே''

இவ்வாறு அரிய நிலையில் உள்ள இறைவன், அன்பரின் அன்புக்கு இரங்கி,

(1) அவர்க்குத் தனது இருப்பை உணர்த்துகின்றான்;
(2) கருத்தில் விளங்கிக் கொள்ளும் வண்ணம் புலப்படுகிறான்:
(3) புலன் அனுபவம் பொருள் போல, அவரது அனுபவப் பொருளாக நிற்கிறான்:

இவற்றுள் இறைவனின் இருப்பை உண்மை என்றும், விளங்கும் தன்மையை அறிவு என்றும், அனுபவத்திற்கு வரும் தன்மையை ஆனந்தம் என்றும் கூறுவர். இவையே சத், சித், ஆனந்தம் என்பவை. இந்த நிலைகளுக்கு அவன் வருவது, அவனது கருணையால். இக்கருணையே அருள் என்கிறார் வள்ளலார். இறைவனது உண்மை, அறிவு, ஆனந்தத்தை மாந்தரின் செயல்களில் வைத்து,

''பார்த்தாலும் நினைத்தாலும், படித்தாலும் படிக்கப்
பக்கம் நின்று கேட்டாலும், பரிந்து உள் உணர்ந்தாலும்,
ஈத்தாலும், பிடித்தாலும் கட்டி அணைத்தாலும்
இத்தனைக்கும் தித்திக்கும் இனித்த சுவைக்கரும்பே
மெய்ம்மை அறியானந்தம் விளங்கும் அருள் அமுதே

என்று வள்ளலார் பாடுகின்றார்.

இப்பாடலில், 'பார்த்தல்' முதலிய செயல்கள் முறையே உண்மை, அறிவு, ஆனந்தத்தை விளைவிப்பன - என்பது, "இத்தனைக்கும் தித்திக்கும் இனித்த சுவைக் கரும்பே" என்பதால் அறியப்படும். இதனையே மற்றொரு பாடலில்,

"மெய் உணர்ந்தோர் கையகத்தே விளங்கிய தீங்கனியே" என்பார். கையகத்தே என்பதால்

*With*
*Best Compliments*
*from*

原順興機械工程私人有限公司

# GUAN SOON HENG BUILDERS PTE LTD

24, UPPER SERANGOON ROAD SINGAPORE 347633
TEL : 2857513 , 2857542, 2857572 FAX : 2857937



*With*
*Best Compliments*
*from*

# HIGH TREND INTERNATIONAL PTE LTD

1 North Bridge Road, #16-03
High Street Centre, Singapore 179094
Tel : (65) 3344144 Fax : (65) 3344280
A/H Fax : 65-7456208
URL: http://www/worldyellowpages.com/sharan
E-Mail : sharan@singnet.com.sg



*With*
*Best Compliments*
*from*

# KALWANI TRADING PTE LTD

#04-10, Satnam House
67, High Street
Singapore 179431
Tel : 3395561, 3385474
Fax : 3385926 KALIWANI


Chettiars Temple Society Singapore

மெய்ம்மையும், 'விளங்கிய' என்பதால் அறிவும், 'தீங்கனி' என்பதால் ஆனந்தமும் விளங்கும்.

வள்ளலார் "சீவகாருண்ய ஒழுக்கம்" என்ற கட்டுரையில், "அருள் என்பது கடவுள் தயவு; கடவுள் இயற்கை விளக்கம்" என்று, அருள் என்பதற்கு வரையறைப் பொருள் தருகின்றார். ஆகவே, இறைவனின் கருணை மட்டும் அருள் அன்று; அவனது உண்மை, அறிவு, ஆனந்தம் என்ற மூன்று தன்மைகளை நாம் உணரும் வண்ணம் அவன் செயற்படுதலும் அருள் ஆகும் என்று அறியலாம். கருணையாக உள்ள போது, அது குணம்; செயற்படும்போது, அது ஆற்றல் (சக்தி).

தன் நிலையில் நின்று இயல்பாக உள்ள கடவுள் (static), இயங்கும் நிலைக்கு வந்து செயலாற்றித் தன்னையும் உலகையும் உயிர்களுக்கு விளக்கும் நிலை (Dynamic) அருள் என்று நாம் உணரலாம்.

அடுத்து, கடவுளின் அருளைப் பெறுவதற்குரிய வழியாக வள்ளலார் கூறும் பொது நெறியை, முதற்கண் மேலோட்டமாக விளக்குவோம்.

மேலே குறிப்பிட்ட "சீவ காருண்ய ஒழுக்கக்" கட்டுரையில் வள்ளலார். 'சீவகாருண்யத்தைக் கொண்டு அருளைப் பெறுதல் கூடும். வேறு ஒன்றினாலும் பெற இயலாது" என்று கூறுகின்றார். இதுவரை தோன்றிய சமயங்களில் இது போன்ற அறிவிப்பு இல்லை. சைனம், பௌத்தம், என்ற சமயங்கள் சீவகாருண்யத்தைச் சிறந்த அறமாகக் கொள்கின்றன. உயிர்களுக்கு நன்மையே செய்ய வேண்டும். தன்னலத்திற்காக உயிர்களைக் கொல்லக்கூடாது என்று விதிகள் செய்தன. அச்சமயங்கள் அருள் என்பதை மனிதனின் குணமாகக் கொண்டன. திருவள்ளுவரும் அவ்வாறே கொண்டார்.

சைவமும் வைணவமும் அருளை இறைவனின் குணமாகக் கொண்டாலும் அதைப் பெறும் வழியாக, அன்புடன் ஆற்றும் வழிபாட்டைக் கூறின: வள்ளலார் இவ்வுண்மையை உடன்பட்டு, "அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" என்று கூறினாலும், இறைவனிடம் அன்பு தோன்ற வேண்டுமானால், அதற்கு இறையருள் வேண்டும் என்ற கருத்தில் "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி என மாணிக்கவாசகர் கூறியதை அடிப்படையாகக் கொண்டு, முதலில் அருளைப் பெற வேண்டும் என்று கூறுகின்றார். அதற்கு, மேலே குறிப்பிட்டது போல், சீவகாருண்யம் ஒன்றே வழி" என்று வலியுறுத்திக் கூறுகிறார்.

சீவகாருண்யம் என்பதற்கு வரையறைப் பொருளாக, 'சீவகாருண்யம் என்பது சீவர்கள் தயவு சீவர்களின் ஆன்ம இயற்கை விளக்கம் எனக் கூறியதிற் கடவுள் மட்டுமல்ல, ஆன்மா என்பதும் கண்ணுக்கும் கருத்திற்கும் எட்டாத ஒன்றாகவே உள்ளது. அதற்கும் கடவுளைப் போல், உண்மை அறிவு ஆனந்தம் என்ற குணங்கள் உண்டு. அவை எப்போது அறியப்படும் என்றால், உயிரின் குணம் ஆகிய கருணை என்ற பண்பு வெளிப்பட்டுத் தொண்டாக, பணியாகச் செயற்படும் போதுதான் அறியப்படும் என்பது இதன் கருத்து. இவை அறியப்படும்போது, மனத்தின் துணை இன்றி உயிர் தானே உணரும். இதனைப் புலன் கடந்த அறிவு என்பர்.

கருணை உயிர்க்குணம் ஆதலின் எல்லா உயிர்களிடத்திலும் கருணை காட்டுவது தான் இயற்கை. சிலரிடம் அன்பும், சிலரிடம் வெறுப்பும் காட்டுவது இயற்கை அல்ல. செயற்கை சாதி, குலம், இனம், சமயம், கொள்கை, நம்பும் தத்துவம், முதலியவற்றால் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளை ஒழித்து, உயிருணர்வாகிய கருணையை அனைவரிடமும் செலுத்த வேணடும். ஆருயிர்களுக் கெல்லாம் அன்பு காட்ட வேண்டும். அதை வழிபாடாகச் செய்து அதன் வழி இறைவனின் அருளையும் பெற வேண்டும். இதன் மூலம் ஆலய வழிபாட்டைக் கடந்து இறைவனை உணரும் நெறி - மதங்களில் நில்லாமல் இறைவனை உணரும் வழியைப் பரப்பினார். இக்கொள்கை பல நூற்றாண்டுகளாக மக்களிடையே நிலவிவரும் பகையை நீக்கும். கருத்துத் தேக்கத்தை அதே சமயம் இறைவனைப்பற்றிய அறியாமையை அகற்றும். உண்மை அறிவும் (உயிரால் உணர்ந்து அறியும் அறிவு) ஆனந்த அனுபவமும் கிடைக்க வழி செய்யும்.

வள்ளலார் மாந்தரிடம் உள்ள வேறுபாடுகள்- சமயம், வருணம், ஆசிரமம் முதலியவை - எல்லாம் 'பிள்ளை விளையாட்டு' எனக்கூறி, அந்த அறிவைத் தாம் பெற்ற நிலையைப் பின்வருமாறு கூறுகின்றார்.

"இறைவா, இவற்றைப் பிள்ளை விளையாட்டு என்று எனக்கு அறிவித்தாய். என்னைப் பிள்ளை எனக் கொண்டு, பிள்ளைப் பெயர் இட்டாய். "

'இந்த வேறுபாடுகளைக் கடந்து சிந்தித்த போதுதான் அவர் ஆன்ம உணர்வை - உயிர் உணர்வைப் பெற்றார். இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள உறவை உணர்ந்தார். அப்போது, தாம் மனிதர் உண்டாக்கிய குலம் அல்ல, இறைவனின் குலம். அதாவது உலகின் எந்தப் பிரிவையும் உடையவர் அல்ல, 'பொது' என்று உணர்ந்தார் என்று, பிள்ளை என்ற இவ்வுருவகத்தை விளக்கலாம்.

முன்பு வைணவத்தில், தொண்டரடிப் பொடி யாழ்வார் இறை வழிபாட்டினால், இறை அன்பினால், தம்மை உணர்ந்து கொண்டபோது, தம்மைத் தொண்டக்குலம் என்று அழைத்துக் கொண்டார். பண்டைக் குலம் ஒன்றைச் சேர்ந்தவர் என்பதை மறுத்தார்.

சைவ நெறியில், அடியார்கள் தம்மை ஒரு குலமாக - ஒத்த குலமாகக் கருதி வாழ்ந்தனர். ஆனால் வள்ளலார் உயிர்கள் எல்லாம் ஒரு குலம் என்று அறிவிப்புச் செய்கின்றார்.

இவ்வொருமை உணர்வே - பொதுவுணர்வே - உயிருணர்வு என்பது வள்ளலார் தரும் புதுக்கருத்து. புது அனுபவம். இந்த உணர்வு முழுமை அடைய வேண்டும் என்றால் அது செயலுக்கு வரவேண்டும். கருணைப் பண்பு, சீவகாருண்யம் என்ற தொண்டாகச் செயற்பட வேண்டும், உயிர்க் குலத்திற்கெல்லாம் செய்யும் சேவையாக மலர வேண்டும். அபபோதுதான் அருளைப் பெறலாம். இதனை வள்ளலார், ''எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே" என்று அருள் விளக்க மாலையில் பாடுகின்றார்.

எனவே வள்ளலார் கூறும் பொதுநெறி என்பது உயிருணர்வு நெறி, சாதி, சமயம், தத்துவம் கடந்த நெறி, மாந்தர் இனத்திற்கே பொதுவான நெறி.

இதுவரை, அருளையும் பொது நெறியையும் இன்னவை என விளக்கினோம். இனி, இவற்றின் விரிவினைக் காண்போம். முதலில், பொது நெறியினை விரிவாகக் காண்போம்.

சீவகாருண்யப் பணிகளை வள்ளலார் உடன்பாட்டு முகமாகவும், எதிர்மறை முகமாகவும்

*With*
*Best Compliments*
*from*

AMAH

# ABDULLAH SAHIB (1908) PTE LTD

458 Race Course Road Singapore 218699
Tel : 2995565 Fax : 2993358

*(Manufacturer, Exporter of HDPE/LDPE Carrier Bags, Plastic Resins and Importer of Polished Granites)*

*With*
*Best Compliments*
*from*

# S.V.J. Exports Pte Ltd

#04-12 High Street Plaza,
77 High Street Plaza,
Singapore 179433
Tel: (65) 3380890 Fax : (65) 3384623

Importer/Exporter of raw silk, agri commodity

*With*
*Best Compliments*
*from*

# BANK OF INDIA

Singapore Branch
4 Shenton Way, #01-01
Shing Kwan House
Singapore 068807
Tel : 2220011

*With*
*Best Compliments*
*from*

LATIMER

# LATIMER (S) PRIVATE LIMITED

80 Genting Lane, #05-09 Genting Blk Ruby
Industrial Complex Singapore 349565
Tel : 8413995, 8413024 Fax : 8413725
Mobile Phone : 98173775

கூறுகின்றார். அவர் கூறும் பணிகள் சமுதாயப் பணி மட்டும் அல்ல; உயிர்க் குலப்பணி மட்டும் அல்ல; உயிர்களையே இறைவன் வாழும் ஆலயமாக உணர்ந்து, உயிர்களுக்குச் செய்யும் பணியே வழிபாடாகச் செய்து, அந்த உயிர்களின் மலர்ச்சியில் தன் உயிரும் மலர்ச்சி பெற்றுக் கடவுள் தன்மையை அறிந்து அனுபவித்தல் ஆகும். ''அவிழும் எம் ஆவியும் எம் ஆதி அறிவும்'' என்பார் திருமூலர். இதனை வள்ளலார் சீவ காருண்ய ஒழுக்கக் கட்டுரையில், ''சீவர்களுக்கு, சீவர்கள் விஷயமாக உண்டாகும் காருண்யத்தை -ஆன்ம உருக்கத்தைக் கொண்டு கடவுள் வழிபாடு செய்வது எப்படி என்றால், ஆன்மவுருக்கம் உண்டாக, உண்டாக, ஆன்மாவின் உள் இருக்கும் கடவுள் விளக்கம் ஆகிய அருள் வெளிப்பட்டுப் பூரணமாக விளங்கும். அத்திருவருள் விளங்கவே, கடவுள் இன்பம் அனுபவமாகப் பூரணம் ஆகும். அவ்வனுபவம் பூரணமாதலே கடவுள் வழிபாடு'' என்று விளக்குகின்றார்.

ஆன்ம உருக்கம் என்பதும் ஆன்ம நேயம் என்பதும் கருணை என்பதும் ஒன்றே. ஆன்ம நேய ஒருமைப்பாடு என்பது கருணையால் உண்டாகும் மாந்தரின் ஒருமைப்பாடு, உயிர்க்குல ஒருமைப்பாடு மட்டும் அன்று, உயிருக்கு இறைவனிடம் ஏற்படும் இலயிப்பு-கலப்பு ஆகிய அனுபவமும் (யோகானுபவம்) ஆகும் என்று வள்ளலார் கூற்றால் புரிந்து கொள்கின்றோம். யோகம் என்ற சொல்லுக்கு ஒன்றுபடுதல் என்று பொருள். அந்த அனுபவத்தை வள்ளலார், அருள் விளக்க மாலையில், ''சாதி குலம் சமயம் எல்லாம் தவிர்த்து எனை மேல் ஏற்றித் தனித்த திருவமுதளித்த தனித்தலைமைப் பொருளே,'' என்பார்.

வள்ளலார் கூறும் சீவகாருண்யப் பணிகளில், உடன்பாட்டுப் பணி அனைவர்க்கும் பசி நீக்குதல். வன்முறையும் கொலைக்கு அஞ்சாத குணமும் புலால் உண்ணுதலும் உடையவர்கள் பொதுநெறிக்கு உரியவர் அல்லர். ஆனால், அவர்களும் பசியால் வருத்தம் பார்த்தலாகாது என்கிறார். எனவே, உலகில் ஓர் உயிர்கூட விலக்கு இல்லாமல், எல்லோருக்கும் பசி நேரத்தில் உணவு அளிக்க வேண்டியதை ஒவ்வொருவரின் கடமை ஆக்குகிறார். பசி தவிர்த்தல் என்பதில் வாழ்க்கையுதவிகள் எல்லாம் அடங்கும்.

இவ்வாறு கூறியதனால் கொலையும் வன்முறையும் புலால் உணவும் தவிர்த்து விடுக என்று சீவகாருண்யப் பணியை எதிர்மறைமுகமாக உணர்த்துகிறார். கொலை நீக்கி, உயிரன்புடையவராய் விளங்குவோர், இறையருளை அடைந்து அனுபவிப்பர் என்பதைக் ''கொலை அறியாக் குணத்தோர் தம் சுட்டுறவே'' என இறைவனை விளிப்பதன் மூலம் புலப்படுத்துகின்றார்.

''தயை உடையார் எல்லாரும் சமரச சன்மார்க்கம் சார்ந்தவரே'' எனக்கூறி, கருணை ஆகிய தயையினால் கடவுள் வழிபாடு செய்வோர், முன்பு வேதாந்தம், சித்தாந்தம் முதலிய தத்துவங்கள் தனித்தனி வழிகளில் விளக்கிய இறைநிலையை. அருளாகிய ஒளியைக் கொண்டு அறிவர்'' என்று, இச்சன்மார்க்க நெறி, பொது நெறி ஆதலைக் குறிப்பிடுகிறார். இப்போது நெறிக்கு வள்ளலார் இட்டபெயர் சடாந்த சமரச சுத்த சன்மார்க்கம்' என்பதாகும்.

இனி, வள்ளலார் இறை நிலையை அருளால் அறிந்தமையை - அவரது மெய்யுணர்வு மலர்ச்சியை - சிறிது காண்போம்.

இறை நிலையை நூல்களால் அறிவது அபர ஞானம் எனப்படும். அருளால் அறிவது பர ஞானம் ஆகும். அபரம் என்பது கீழ்; பரம் என்பது மேல். வள்ளலார் வேதம் முதலிய நூல்கள் வழங்கும் அறிவை, அருள் விளக்கமாலையில், 'சாலம்' எனக் கூறுவது இது பற்றியே.

பரஞானம் பெறுதலைச் ''செயல் அனைத்தும் அருள் ஒளியால் காண்க.'' என்பார் வள்ளலார். அருள் ஒளியால் காண்பது என்பதை அவர் வழியில் விளக்குவோம்.

அருள்ஒளி என்பது இறைவன் பேரறிவாய் விளங்கும் நிலை. அவன் உயிர் தோறும் உள்ளான்.

''எவ்வுயிர் அகத்தும் அகப் புறத்தும் புறத்தும்
இலங்கு நடத்தரசு''

அண்டத்தில் விளங்குதல் போல், உயிர்களின் உடம்புகளிலும் உறைகிறான். நம்மிடத்தில் உள்ளான். அவன் கருணை வடிவானவன் - அருள் வடிவானவன். ஆதலால், நாம் செய்யும் சீவகாருண்யப் பணியினால் அவனது கருணை -அருள் -நமது கருணையில் கலந்து, ஒருமைப்பட்டு நமது அறிவுக்கு விளங்கும். அப்போது நமது அறிவு அருளறிவாகும். இந்த அருளறிவால் நம்மைச் சுற்றி நிகழும் நிகழ்ச்சிகளை ஊன்றி நோக்கினால், அவையெல்லாம் ஒருவகையாக, இறைவனின் உண்மை, அறிவு -என்ற இரண்டு பண்பையும் தம்முள் அடக்கிக் கொண்டிருப்பது தெரியவரும். இதுதான் அருள் ஒளியால் காணுதல். அவ்வாறு காண்பது நம் உயிரே மகிழும் மகிழ்ச்சியைத் தரும். மகிழ்ச்சி என்பது உயிர் அனுபவிக்கும் அனுபவம் தான். எல்லா மகிழ்ச்சியும் அவ்வாறுதான். ஆனால் மகிழ்ச்சியைப் புலன்களால், மனத்தால் அனுபவியாமல், உயிர் தானே நேராக அனுபவிப்பது இங்கு குறிப்பிடும் மகிழ்ச்சி.

இதை வள்ளலார்,
''செயல் அனைத்தும் அருள் ஒளியால் காண்க''
என்றும்
உயிர் இடையறாது மகிழும் மகிழ்ச்சியை,
''கரைந்துவிடாது என்னுடைய நாவகத்தே இருந்து
கனத்த சுவை தருகின்ற கற்கண்டே''

என்றும் பாடுவார். எப்பொழுதாவது அருளனுபவம் தோன்றினால், சிறிது நேரம் இருந்து மறையும் கருணை முதிர்ந்து, சீவகாருணியச் செயல் பெருகி, நம் செயல்களையும் பிற நிகழ்ச்சிகளையும் அருள் ஒளியால் காண்கின்ற மனநிலை தோன்றினால், இந்த அருளனுபவத்தால் வரும் ஆனந்தம், கரையாத கற்கண்டைப் போல் நெடிது நிற்கும். புலன்களால் அறிவதல்ல இது. ஆதலின் வள்ளலார், இதனைப் ''பாராத பார்வையிலே பதியாத பதிப்பே நண்ணாத மனத்தகத்தே அண்ணாத நலமே''
என்று பாடுவார்.

வள்ளலார் கூறிய திருவருளையும்
அதை அடையும் பொது நெறியையும்
உலகம் அறிந்து பயன் பெறுமாக.

*With*

***Best Compliments***

*from*

# Sithi Vinayagar Co.,

72 Serangoon Road

Singapore 217977

Tel : 2933450

Fax : 3488650

*With*

***Best Compliments***

*from*

## மெட்ராஸ் காபி ஹவுஸ்

149 டன்லப் ஸ்திரீட் சிங்கப்பூர் 209465 தொலைபேசி : 2919976

(ராயல் சாரி பேலஸ்க்கு எதிர்புறம்)

கிளை 134 சிராங்கூன் சாலை சிங்கப்பூர் 218038 தொலைபேசி : 2978235

(ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோவில் எதிர்புறம்)

## கணேசன்

மெட்ராஸ், சைவ உணவு, வகைகளுக்கு சிறப்பு பெற்றவர்கள்

தோசை, இட்லி, வடை, காய்கறி பிரியாணி, சப்பாத்தி, பூரி

இனிப்பு வகை பதார்த்தங்கள் கிடைக்கும்.

தனிப்பட்ட பார்ட்டிகளுக்கும் ஆர்டர்கள்

மிக சிறப்பாக செய்கிறோம்.

கிளை வியாபார நேரம் : காலை 6.00 மணி முதல் இரவு 10.00மணி

வியாபார நேரம்: காலை 7.00 மணி முதல் இரவு 11.00 மணி

*With*

***Best Compliments***

*from*

# ASIA SILK STORES
# &
# SINGAPORE COMMERCIAL CO.

*With*

***Best Compliments***

*from*

## *Wah Heng Rattan Industries Pte Ltd*

2 Jurong East St 21, #02-188 IMM Building

Singapore 609601 Tel : 5682636

**Kindly present this page at our showroom for a 15% discount off all regular items.**

# தைப்பூசத் திருவிழா

*சிங்கை நேசன், 6. 2. 1888*

சிங்கப்பூரின் கண்ணே சிறப்புற்றோங்கும் எழுநகர வணிரென்றும் நகரத்தார்கனென்றும் வழங்கப்பட்டு வரும் செட்டிப்பிள்ளைகளின் சுப்பிரமணியப் பெருமானுடைய திருவாலயத்திலே நடத்திய தைப்பூசத் திருநாளைக் கண்டவர்கள் யார்தான் மதிக்கார். அவற்றின் சிறப்பை நம்மால் விரித்தெழுத இயலாதாயினும் சிலவற்றை மாத்திரம் இங்ஙனம் வெளிப்படுத்த வெழுதுகின்றோம்.

அகண்டபரிபூரண சச்சிதானந்த சின்மய அனாதிமுக்த நின்மலஸ்வருபியாகிய சண்முகப் பெருமான் தம்முடைய அடியார்கள் யாவரும் ஆனந்த அருவிபாயப் பக்கங்களிலிருந்து தோத்திரஞ் செய்யவும், வெண்டாமரை குடை கொடி விருதுகளைக் கரங்களிலே யேந்தவும், தூப தீபங்களைச் சந்நிதானத்திலே காட்டவும், தேவாலயத்தினின்றும், நாளது தை மாதம் யரு-ந் திகதி வெள்ளிக்கிழமை சாயரட்சை ரு-மணி யளவிலே, வெளியே யெழுந்தருளி வந்து இடபாரூடராகத் திவ்விய சந்நிதான ரதத்தின்மீது வந்தருளி, சிப்பாய் லயின் சென்று ஸ்ரீ கணேசப் பெருமானுடைய திவ்விய சந்நிதானம் வந்தருளி அங்ஙனம் மகாபிஷேக சோட சோபார மகர நைவேத்தியமாகிய பின்னர், பரிபூரண சத்தியாகிய வேலாயுத சமேதராய் அடியார் புடைசூழ, அலங்கார ஆபரணாதிகள் பூண்டு தீபங்கள், வர்ணங்கள், மத்தாபுகள் வீதியெங்கணும் பிரபை ஜொலிக்க, இந்துகள் வாயில்கடோறும் வாழை கமுகள் நாட்டித் தோரணங்கள் தூக்கி நிறைகுடங்கள் வைத்திருப் பதையெல்லாம் திருக்கண்சாத்தி, யவர் அவர்கட்குத் தகுந்த அனுக்கிரகஞ் செய்துகொண்டு, தம்மைத் தரிசிப்பிக்கும்பொருட்டுஅடியார்கள் செட்டிப் பிள்ளைகளிருக்கும் வீதிகளெல்லாம் கண்டு, அரவரவர்கள் செய்யும் உபசாரங்களையும், காணிக்கைகளையும் ஏற்றருளித் தமது திவ்விய ஆலயத்திற்கு அன்று யஉ மணியளவிற் சென்று விசித்திர விநோதமாக அலங்கரிக்கப்பட்ட சபாமண்டபத்திலே ஆரோகணிக்கப்பட்டிருந்த திரு ஊஞ்சலிலே வீற்றிருந்து க-மணியளவில் ஏகஸ்தானஞ் சேர்ந்தனர். மறுநாள் சனிக்கிழமை காலமே க. மணியளவிலே மகாபிஷேகம் ஆரம்பஞ் செய்து சாயங்காலம் ச மணி வரையில் இந்நகர வாசிகளாகிய இந்துக்களிற் பலவித சமயங்களில் அன்புடனே நேர்த்திக்கடன் பண்ணியபடி செடில் குத்தியும் பால் செம்புகளை அலக்குகளினாலே குத்தி தோலிலே தொங்கும்படி தூக்கியும் இன்னும் அனேக அன்பர்கள் பாற்காவடி - முதலியனவற்றைச் சுமந்து பாதத்திலே முள்மிதியடி போட்டு மிக அன்புடனே கடந்துவந்து அபிஷேகஞ் செய்வித்தார்கள். சிலர் சீக்காயிருந்த மாடு குதிரைகளுக்கு வேண்டுதல் செய்தபடி அவற்றின் முதுகுகளின் மீது செவ்விளநீர் முதிலிய அபிஷேக வஸ்துகளை யெடுப்பித்துவுந்து அபிஷேகம் செய்தார்கள். ரதக் காவடிகளை யன்புட னெடுத்து ஆனந்தக் கூத்தாடி வந்தார் சிலரும், பக்கங்களிலே சுப்பிரமணியப் பெருமான்மீது ஆசிரிய விருத்தங்களும், பதங்களும், கலித் துறைகளும், கண்ணிகளும் தோத்திர ரூபங்களாகக் கண்ணீர் தாரைதாரையாக வடியப் பாடிவந்தவர்கள் சிலரும், தங்கள் இடைஞ்சல்களை மனசிலே வைத்து மிகத் துயரத்துடனே யிவ்விடைஞ்சல்களை நிவிர்த்தி செய்யும்ப கேட்பார் சிலரும், ஆக அடியார் குழாங்கள் அன்பு மீதூர சாயங்காலம் ரு-மணியளவிலே, கோடி சூரியப் பிரகாசம் பொருந்திய திருமேனியில் நவரத்தினங்களிழைக்கப்பெற்ற ஆபரணாதிகளை யடியார் மகிழும்படி கிருபையுடன் அணிந்து, கொடி குடை மேளதாளம் தீப தூபம் முதலிய பரிசுத்த விருதுகளுடனே, சாயங்காலம், எ-மணியளவிலே, எழுந்தருளி வெளியேவந்து அடியார் கரகோஷ்டஞ்செய்து கைகூப்பி நிற்க, ரதத்தின்மீதேறி, முக்கோணஞ் சுற்றிவந்து இவ்வருஷம் கவமாகவும் விசித்திரவினோத அலங்காரமாகவும் இயற்றப்பட்ட திவ்விய மண்டப மத்தியில் உ-மணி பரியந்தம் எழுந்தருளியிருந்து சங்கீத வாத்தியங்களால் மனப்பூரணமடைந்து பின்னர் திருவூஞ்சலிலே வீற்றிருந்து அடியார்க்குப் பிரசாத முதலியன அளித்து ஏகஸ்தானம் சென்றருளினர்.

பின்னர் ஞாயிற்றுக்கிழமை காலமே சு-மணிதொடங்கி, சுயரட்சை சு-மணி வரைவிலும், சுப்பிரமணியப் பெருமான் மகா அபிஷேகசோட சோபசாரங்கள் செய்யப்பெற்று விசித்திர வினோத நீராழி மண்டபத்திலே அ-மணியளவில் எழுந்தருளி வீற்றிருக்கும்பொழுது, அடியார் புடைசூழ, அன்புடையார் நெஞ்சாரச் சகலவித கீதவாத்தி யங்களும் செய்யப்பட்டன.

இவற்றுள் இந்தியாவிலே ராஜாக்களால் மகிமைதங்கிய விருதுகள் பெற்றுப்புதுக்கோட்டை சமஸ்தானந்து ராஜாவாகிய ஹிஸ் ஹைநெஸ், மகராஜ பஹதூர் ஸ்ரீலஸ்ரீஇராமச்சந்திர தொண்டமானவர் களுடைய சந்நிதானத்தில் கொலுமண்டபத்திலே சங்கீத வித்வானாயிருந்த ம-ள-ள-ஸ்ரீ, சாஹேப் நன்னுமியா அவர்களால் அற்புத விசேஷ, உச்சித மகத்துவ சங்கீத சாஹித்திய வினோதங்களால் சபையாரனைவரையும் மனங்களிக்கச் செய்தனர்.

பின்னர் யஅ-ந் உ திங்கட்கிழமை காலமே அ-மணிதொடங்கிச் சுப்பிரமணியப் பெருமான் மீது வேண்டுதல் பண்ணியிருந்த அடியார்களாகிய செட்டிப்பிள்ளைகள் தங்கள் பிரார்த்தனைக் காவடிகளைத் தோள்மீது வைத்து, ஆனந்தக் கூத்தாடி

*With*
*Best Compliments*
*from*

威利金莊珠寶行私人有限公司

**Wee Lee Goldsmith**
**And Jewellery Pte Ltd**

Blk 663, #01-14, Zhujiao Centre, Buffalo Road,
(off Bukit Timah Road), Singapore 210663
Tel : 2931280, 2953206 Fax : 2939608



புன்னகையை மிஞ்சிடும்
பளிச்சிடும் பலவித தங்க நகைகள்
பார்த்து வாங்கலாம் -
அணிந்து ஆனந்திக்கலாம்!
மார்க்கோ போலோ கோல்டுஸ்மித்

**MARCOPOLO**
**GOLDSMITH**
**S PTE LTD**

**Blk 663, #01-09**
**Buffalo Road**
**Singapore 210663**
**Tel: 2982308**



*With*
*Best Compliments*
*from*

**Prime Energy**
**Corporation Pte Limited**

a leading
**International Trading Company**
dealing in Agro-commodities
Coal
Leather Products
Plastic Resins
Pulses
Steel Products

All enquiries are welcomed

60 Albert Street #09-06 Albert Complex
Singapore 189969
Tel : (65) 3323767/770
Fax : (65) 3323752



# *La Pareil*

***International Range of Perfumes for you.***

Offering an exquisite range of twelve popular fragrances for women and four for men, with a choice of Body Sprays, Eau de Toilets, After Shave Lotions and attractive Gift Sets.

**Marketed Worldwide by:-**
Agio Countertrade Pte Ltd
151, Chin Swee Road
#11-01, Manhattan House,
Singapore 169876
Tel : 2254828
Fax : 5383687

**Manufactured by:-**
Worldlink Trading Co Plc
7 Star Road Partridge Green
West Sussex RH 13 8RA.
Tel : 441-403-711995
Fax : 441-403-710422

AGIO

***Now available in Singapore***

அன்பான தோத்திரங்களைப்பாடி, கோயில் பிரதக்ஷணம் வந்து, யஉ மணி தொடங்கிக் க மணிவரைக்கும் காவடி பஞ்சாமிர்த அபிஷேகஞ் செய்து, திரும்பவும் இப்பிரார்த்தனைக்காரர்களாலே சாயரட்சை கு மணிதொடங்கி பூசை நைவேத்தியம் முதலியனவும் அ மணிமுதல் யஉ மணி பரியந்தம் நடந்து திருக்கோயிலினுள்ளே வலம் வந்து, அடியார்க் கருள்புரிந்து இருப்பிடஸ் தானம் போயருளினார்.

மறுபடி யஉ-ந்உ, செவ்வாய்க்கிழமை காலமே கிரமப்படி அபிஷேகமாயின பின்னர், சாயரட்சை ருமணி தொடங்கி சண்முகபிரான் மீதன்புள்ள செட்டிப் பிள்ளைகள் யாவரும் மிக ஒழுங்கு மரியாதையுடனே ஒருங்கு கூடி மகிமையென்கிற காணிக்கையை அவரவர்களாலியன்றபடி முழுமனத் திருப்தியுடனே சிவசுப்பிரமணியப் பெருமானுடைய திருவடியில் வைத்து நமஸ்கரித்து இந்த வருஷத்துக்காகப் புதிய காரியதரிசியையும் குமாரக் கடவுளுடைய கிருபாகடாசத்தினாலே நியமித்து சுவாமி தரிசனஞ்செய்து விடைபெற்றுக்கொண்டு மிகக்களிப்புடனே தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச சேர்ந்தார்கள்.

இந்த ஐந்து நாளும் அன்னதானம் யாதொரு குறைவுமில்லாமல் யாவர் மனதும் களிக்கவும் திருப்தியடையவும் செய்யப்பட்டது.

